# இளைஞர் விருந்து

தி.ம
3103

வட்டுக்கோட்டை

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்கள்

உ

சிவமயம்

# இளைஞர் விருந்து

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திலிருந்து நீக்கப்பட்டது

வட்டுக்கோட்டை

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்கள்

வட்டுக்கோட்டை இளைஞர் மன்றம்


1958

பதிப்புரிமை

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்களின்
குடும்பத்தார்க்கு உரியதாகும்.

அச்சுப்பதிவு :

ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.



பண்டிதர் மு. நல்லதம்பி அவர்கள்
தோற்றம்: 13-9-1896
மறைவு: 8-5-1951

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

## படைக்கின்றோம்,

எங்கள் நீண்டநாள் முயற்சி இன்று நிறைவெய்து கின்றது. நினைக்க நெஞ்சம் களிப்பெய்துகின்றது.

யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையூர் முதுதமிழ்ப் புலவர் திரு மு. நல்லதம்பி அவர்கள் தமிழ் அன்னைக் குச் சிறந்த சேவை செய்தவர். தமிழ் அன்னையின் பொன்னடிப் போதுகளுக்கு நாளெல்லாம் நன்மலர் சாத்தி மகிழ்ந்தவர். அவர் புனைந்து அலங்கரித்த வண்ண வண்ணப் பூக்கள் சிலவற்றைக் கோவை செய்து, தமிழ் அன்பர்முன் படைக்கின்றோம்.

முதுதமிழ்ப் புலவர் இவ்வுலக வாழ்வை நீத்த நாள் முதல், அவர் பாடல்களை ஒருங்கு சேர்த்துத் தமிழ்-மக்கள் முன் படைத்தல் வேண்டும் என்று விழைந்தோம். புலவருடன் நெருங்கிய தொடர்பு பூண்டவர்களிடத்தும், தமிழ் அன்பர்கள் மாட்டும், பெரியோர்கள் பாலும் எங்கள் நோக்கத்தை வெளிப்படுத்தினேம். அவரெல்லாம் எங்கள் முயற்சியை வரவேற்ருர்கள்; ஊக்கப்படுத்தி ஞர்கள்; உதவி புரிந்தார்கள்.

புலவரின் இல்லத்தும், உறவினரிடத்தும், நண்பர் கள் இடத்தும் இருந்த கையெழுத்துப் பிரதிகளைத் தேடிப் பெற்ருேம்; செய்தித் தாள்களில் வெளியான வற்றையெல்லாந் திரட்டினேம். அன்புக்குரிய ஆசிரியர் கள் அறிஞர்கள் பாடல்களைக் கோவை செய்துதர, இளமையின் முறுக்கும், தமிழின் துடிப்பும் மிக்க நந் தோழர்கள் இரவுபகல் எண்ணுது விரைந்து படியெடுத்து உதவினர்கள்; வெற்றி கண்டோம்.

புலவன் ஒருவனின் பாடல்களைப் பிற்காலத்தில் ஆங்காங்கு தேடி எடுத்துக் கோவை செய்து அச்சியற்றுவதில் உள்ள பெரும் இடர்ப்பாடுகள் எவ்வளவென்பதை அநுபவத்திற் கண்டோம்.

நாம் தேடிப்பெற்ற பாடல்களில் இளைஞர்களுக்கு ஏற்றனவற்றை ஒரு பிரிவாகவும், மற்றும் பிரபந்தங்கள் தனிப்பாடல்கள் முதலியனவற்றைப் பிறிதொரு பிரிவாகவும் வெளியிட எண்ணினேம். அச்சியற்றுவதற்குப் பெரும் பொருள் வேண்டி இருந்தது. அன்பர்கள் பலரை நாடினேம்; உதவினார்கள். நாடகங்கள் சிலவற்றை நடித்தோம்; பொருள் திரட்டினேம். ஆண்டுகள் உருண்டோடின. முதற்பகுதியை "இளைஞர் விருந்து" என்னும் பெயருடன் இன்று தமிழ்கூறும் நல்லுலகத்து இளைஞர்களுக்குப் படைத்து மகிழ்கின்றேம்.

இளைஞர் விருந்து தமிழர் இல்லந்தோறும் நிலை பெற்று அங்கெல்லாந் தமிழ் உணர்வும் இன்பமும் நல்குவதாக.

வணக்கம்.

வட்டுக்கோட்டை.
8–5–58.

இளைஞர் மன்றத்தார்.

# நன்றி நவில்கின்றோம்.

● கையெழுத்துப் பிரதிகளை நாம் வேண்டிய போது அன்புடன் அளித்து உதவிபுரிந்த முதுதமிழ்ப் புலவர் குடும்பத்தார்க்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் நன்றி.

● செய்தி இதழ்களில் வெளிவந்த செய்யுள்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்த செய்தித்தாள் ஆசிரியர்களுக்கு எங்கள் நன்றி.

● சிறப்புப் பாயிரங்கள் தந்த இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர், கலாநிதி திரு. க. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், உடுவில் மகளிர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் திரு. சோ. இளமுருகனார் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

● இன்பந்தரும் இளைஞர் விருந்து என்ற தலைப்பில் இளைஞர் விருந்தின் சிறந்த பண்புகளைத் தீட்டித் தந்த பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், பண்டிதர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கும் எங்கள் நன்றி.

● நூல் வெளி வருவதில் எம்மோடு ஒருங்குழைத்தும் வேண்டும் பொழுதெல்லாம் நல்லாலோசனைகள் கூறியும் முகவுரை தந்தும் உதவி புரிந்த நீர்கொழும்பு விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசான் பண்டித க. மயில்வாகனன் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

● இளைஞர் விருந்தை அழகாக ஆர்வத்துடன் அச்சியற்றித் தந்த ஸ்ரீ காந்தா அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி.

● நூல் வெளி வருவதில் பல்லாற்றானும் உதவிய ஆசிரியர்களுக்கும் மற்றும் யாவர்க்கும் நன்றி.

● பொருளுதவி புரிந்த அன்பர்களுக்கும் நன்றி.

தமிழ் வாழ்க

| | |
|---|---|
| இளைஞர் மன்றம் | கு. சிவபாதசுந்தரம் |
| வட்டுக்கோட்டை | செயலாளர் |
| 8–5–58. | |

# முகவுரை

இளைஞர் விருந்து எனும் இந்நூல், யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையூர்முதுதமிழ்ப்புலவர் திரு. மு. நல்லதம்பி அவர்கள் இயற்றிய பாடல்கள் சிலவற்றின் தொகுப்பாகும். புலவர் நல்லதம்பி அவர்கள், "மனக்கினிய பெருங் குணத்து நல்லதம்பிப் பாவலன்" என்று சான்றோரால் போற்றப் பெற்றவர். தமிழ் அவர் உயிர்; தமிழ் அவர் உள்ளம்; தமிழ் அவர் உயிர்ப்பு; அவர் தமிழுக்காக வாழ்ந்தார் என்றால் அது மிகையாகாது. முதுதமிழ்ப் புலவர் பேச்சிலே, சங்கநூற் புலமை சால்பு பெற்றிலங்கும்; பாட்டிலே, கவித்துவ ஆற்றல் கரை புரண்டோடும். அவர் பிறவியிலேயே சந்தக்கவியாகத் திகழ்ந்தவர். நாம் அவருடன் உரையாடும் போதெல்லாம், பழந்தமிழகத்துப் புலவர் பெருமகனுடன் உரையாடுகிறோம் என்ற உணர்ச்சி மேலிட்டு நிற்கும். ஏன்? சங்க காலத்தில் வாழ்கின்றோம் என்ற இறுமாப்புக் கூடத்தோன்றும். 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப, மொழியும் வித்தகர் அவர். இன்று, கொழும்புப் பகுதியில் வாழ் தமிழ் மக்களிடையேயும் விசேடமாக முஸ்லிம் மக்களிடையேயும் காணும் தலையாய தமிழ் உணர்ச்சியை, எண்ணும் போதெல்லாம் அவர் ஆங்கு இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலாக இடைவிடாது இயற்றிய மகத்தான தமிழ்த்தொண்டு நம்மனக்கண் முன் வந்து நிற்கும்.

புலவர் அவர்கள் உயிரோடு இருந்த காலத்தில் தமது பாடல்களைத் தாமே ஒழுங்கு செய்து பதிப்பிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அன்பர்களைக் காணும் போதெல்லாம் அடிக்கடி கூறியும் வந்தார்கள்; காத்திருந்தார்கள். ஆனால் காலம் சதி செய்து விட்டது.

வாழவேண்டிய வயதில் வானகம் சென்றுவிட்டார் நாம் கொடுத்து வைக்காதவர்கள் ஆகிவிட்டோம். அவர் போட்ட திட்டம் நிறைவேறியிருப்பின் நூல் புதுப் பொலிவு பெற்று விளங்கும் என்பது ஒருதலை. இருந்தும், அவர் பாடல்களுள், சிலவற்றையேனும் வட்டுக் கோட்டையூர் இளைஞர் மன்றத்தார் வெளியிட முன்வந்தமை போற்றுதற்குரியதே. அவர்களின் நன்முயற்சி வளர்வதாக. இவ்வெளியீட்டின் மூலம் இளைஞர் மன்றத்தார் தம்ஊரில் வாழ்ந்த தமிழ்ப்புலவன் ஒருவனுக்குச் சிறந்த நினைவுச் சின்னம் நிறுவிவிட்டார்கள்; தமிழ்த் தொண்டு புரிந்த பெருமையையும் ஈட்டிக் கொண்டார்கள். வாழ்க அவர்கள் தொண்டு. இளைஞர் விருந்தினுள்ளே புலவரவர்கள் பலபல போதுகளில் எழுதிய பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. அவை அவ்வக் காலத்திருந்த அவர் மனநிலையின் தோற்றத்தையும் ஈழநாட்டின் போக்கையும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

புலவர் முருகன் பால், முதிரும் அன்பு பூண்டவர். உள்ளக்கோயிலைத் தூய்மை செய்து அதிலே இறைவனை எழுந்தருளச் செய்தவர், அதனால்,

"தூய வுளத்திலே தூய நினைவுகள்
தோன்றி விளங்கின லம்மா—என்றுந்
தூய செயலுண்டு தாயொத்த தெய்வத்தின்
நேயமுண் டாகுமே யம்மா."

என்றும்,

"அறிவினிலே அன்பினிலே அழுக்கில்லா
நெஞ்சினிலே பெண்ணே—அவன்
அருளொளியாய் இன்பமதாய் அறவடிவாய்
நின்றிடுவான் கண்ணே."

என்றும்

கூறி இன்பந்துய்த்தார். அச்சமற்ற வாழ்வையும் மேலோர் நச்சிடும் பண்பையும் உண்மையின் உயர்வை

யும் வாழ்வின் குறிக்கோளாகக் காத்தார். புலவர்களுக்கு இயல்பாகவுள்ள வறுமைக்கு எங்கள் கவிஞர் விலக்கானவர் அல்லர்; சில சமயங்களில் 'இரப்பாரை வைதும் தமிழ்க்கவி வாணரை ஏசியும் மகிழ்கின்ற' செல்வர்களை எண்ணி எண்ணி நொந்தார். இறைவன் திருவருளையே பற்றுக்கோடென்று கருதி வாழ்ந்தார். ஆனால் நன்றி மறவாத அவருள்ளம் தண்டமிழ்ச் செல்வரைப் போற்றும் தண்ணளிச் செல்வர்களை மறந்து விடவில்லை. அதனால் அன்னையாகிய கலைமாச் செல்வியிடம்.

"தண்டமிழ்ச் செல்வர்களைப்—போற்றும்
தண்ணளிச் செல்வர்கள் பால்—என்றும்
ஒண்டொடி நீயிருந்தே—சிறப்
புதவ வேண்டுமடி"

என்று அன்புக்கட்டளை விடுத்தார்.

புலவர், காலத்திற்கேற்ப இனிய சந்த அமைப்புக்களோடு எளிய சொற்களால் இயற்கையின் எழிலைக் குழைத்து உயரிய செய்யுள்களை ஆக்குவதில் கைதேர்ந்தவர். அவர் செய்யுள்கள் தனி 'ஓட்டம்' அமைந்தவை. அவர்தாம் எழுதிய செய்யுள்களை உயர்ந்த சந்தத்துடன் பாடும்போது அயலில் இருந்து கேட்டால் உண்மையில் "செஞ்சொற் கவி இன்பத்தில்" மூழ்கி, கவிதை வானில் சஞ்சரித்துக்கொண்டிருப்போம்.

இடியிடிக்கிற, திடியிடிக்கிற, திடியிடிக்குதம்மா
இருட்டினிடையே பளிச்செசென மின்னலெழுந்து மின்னுதம்ம
மடைதிறந்தெனக் குளங்களோடைகள் வழிந்து பாயுதம்மா

.................................................................

என்று பொருள், நிகழ்ச்சிக்கேற்ற சந்தத்திற் பாடும்போது மரச்செவி கூடத் திளைத்து நிற்குமே!

கவிஞன் சிலசமயங்களில் குழந்தையாகி விடுகிறான். இது யாவரும் அறிந்த பரமரகசியம். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் இல்லையென்றால் தனி இன்பம். புலவரும் குழந்தைகளோடு கூடி,

மழையினாற் பள்ளி விடுதலையென மகிழ்ச்சி கொள்ளுகிறாய்" என்று கூறி இன்பங் காணுகின்றார். மறு கணத்தில் மனதை மாற்றிக்கொண்டு அறமுரைக்கின்றார். அவர் நாவில் இருந்து "செழுமை மேவும் அறிவினோடு திகழவேண்டுமென்றே — சிரத்தையோடு படிக்க வீது சிறந்த காலமன்றே." என்று அன்புக்குரல் எழுகின்றது.

புலவோர் நம்மோடு வாழ்ந்து கொண்டிருந்தாலும் கூட அவர்கள் வாழும் உலகம் வேறுபட்டதாகத்தான் இருக்கும். இயற்கை அழகினுள் ஈடுபட்டுத் தம்மை மறந்து விடுவார்கள். உலகக் கவலைகள் அற்று, அறிவுலகத்தில் உயர்ந்த இடத்தில் வாழ்ந்து இன்பக் கடலில் திளைத்த வண்ணம் இருப்பார்கள். அவர்கள் உள்ளத்தில் எத்தனையோ புதுப் புதுக் கருத்துக்கள் முளைத்து, அழகிய கவைகள் விடுத்து வித்தகச் செழுங்கனி விளைத்து நிற்கும். அன்றியும் புதுவலி கொண்டு பொலிவுடன் தோன்றுவார்கள். காலைப்பொழுதிலே ஒருநாள், நம் புலவர் கடற்கரைக்குச் சென்றிருந்த பொழுது, தமக்கேற்பட்ட அநுபவத்தை அழகாகக் குறிப்பிட்டுச் சொல்கின்றார். நீலக்கடல் அருகில் சுருளலைகள் அவரை வருக வருக என்று அழைத்தனவாம். தமிழ்முருகன் அவர் உள்ளக்கோயிலில் கூத்தியற்றிக்கொண்டு நின்றானும். செங்கதிரோன் கதிர் பரப்பிக் கடல் மேற்றோன்றுங் காட்சி வேலவன் பவனி வருதல் போன்றிருந்ததாம். புலவர் எத்தகைய உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். பாருங்கள்!

"உலகக்கவலை தொடர் போடுதல் கண்டேன்—அறி
வுலகி லுயர்ந்தவிடத் துற்றிடல் கண்டேன்
கலகக் கருத்தலைகள் பாறிடக் கண்டேன்—இன்பக்
கடலில் திளைத்து விளையாடுதல் கொண்டேன்"

"எத்தனை புதுப்புதுக் கருத்து முளைத்தே—கவி
னியைந்த கவைத் தருக்க ளென வளர்ந்தே
வித்தகச் செழுங்கனி விளைத்திடக் கண்டே—கொண்டு
விழுங்கிப் புதுவலி விளங்கிடக் கண்டேன்"

என்கிறார்

வெள்ளவத்தைக் கடற்கரையில் பிற்பகல் வேளைகளில் நங்கையரும் ஆடவரும் நாகரிக உடையணிந்து, குதலை மொழிச் சிறுவர் பின் தொடரச் சிங்களச் செவிலியர் சேர்ந்து வர, உலாப்போகும் காட்சி உள்ளத்தைக் கொள்ளை கொள்வதென்று, அதில் ஈடுபட்ட புலவர் அந் நிகழ்ச்சியை அற்புதமாகக் காட்டுகின்றார். படித்துப் பாருங்கள்!

"நாலரை மணியிருக்கும் நங்கையர் சிலர்—நகை
நட்டிநெடு பொட்டணிந்து நன்மலர் சூடி—நிறச்
சேலைக ளுடுத்தியிளஞ் செல்வியருடன்—பேசிச்
செம்பதுமச் சீறடி பெயர்த்து நடந்தார்."

"வாலறுத்த சேவலென மயிர்குறைத்தே—சில
மடப்ப மிழந்த சிறு மங்கையர்களும்—உயர்
கோலமென முழங்காலின் மேலிலமையும்—சட்டை
கொண்ட சிறு பேதையரு மண்டி நடந்தார்.

"கட்டழ கமைந்தவுடற் சிங்களப் பெண்டிர்—பழங்
காலவுடை நாலுமுழம் சாலவுடுத்தே—கச்சு
வட்டமுலை மேலிறுக்கிக் கூந்தல் முடித்தே—செல்வர்
மழலைக் குழவிகட்குக் காவலாய் வந்தார்."

என்ன அழகு! என்ன ஓட்டம்!! இவர் கவிகளை நாளெல்லாம் அலுப்பின்றிச் சுவைத்துக் கொண்டிருக்கலாமே!

புலவருக்கு எப்பொழுதுமே தமது தாயகமான யாழ்ப்பாணத்தைப் பற்றிப் பெரிய எண்ணம்; பண்புக்கும் நண்புக்கும் நாவன்மைக்கும் பாவன்மைக்கும் அறத்திற்கும் அன்புக்கும் பிறப்பிடம் என்று பேசுவார். ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் வழிப்பறி, கொலை, களவு மலிந்து போவதைக் கேட்டார். கல்லுண்டாய் வீதியில் காதறுப்பு நாடகம் நடக்கின்றது என்று கேட்டார். யாழ்ப்பாணத்திலா இப்புதுமைகள் நடக்கவேண்டும் என்று குமுறினர். அந்தக் குமுறல் வீச்சிலே,

"நித்திரை செய்திடும் வேளையில்—அறம்
நீடிய நாட்டினில் மாலையில்
கத்தரிக் காயை யரிதல் போல்—காசு
களவு செய்ததலை கொய்யவோ?"

"காது கழுத்தணி கையணி—பூண்டு
காவ லிலார்வழி போகையில்
பாதகர் சூழ்ந்து பறித்தலைக் கேட்டுப்
பக்கென்று நெஞ்சம் பதைக்குதே."

"தாலி யணிந்திட்ட மங்கையர்—வயல்
தன்னில் தனிநின்ற வேளையில்
சால விரைந்து மோட்டாரிலே—வந்து
தாலி பிடுங்கிடக் கேட்டிரோ?"

என்று அடுக்கிக்கொண்டே செல்கின்றார். படித்துப் பாருங்கள். புலவர் உயிர்க்கொலையைப் பெரிதும் வெறுத்தார். "நன்மைக்கும் தீமைக்கும் ஏற்றதோர் பயன் நாடும்" எனுங் கொள்கைவழி நின்றார்.

அன்புக்கு அடிபணிவார் வஞ்சரை எள்ளளவும் மதியார். அவர் பாடல்களில் உள்ள சிறப்பியல்புகளை எங்கள் அன்புக்குரிய பண்டிதர் திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள் வடித்தெடுத்து ஓவியமாகத் தந்திருக்கின்றார். படித்துப்பாருங்கள்.

இது இளைஞர்களுக்கென அமைந்த விருந்து; ஆம் முதியவர்களும் உண்டனுபவிக்கலாம். இளைஞர்களே வாருங்கள் ஆனந்தமாய் உண்ணுங்கள். பிறவிருந்தெல்லாம் நாவுக்குச் சுவை தந்து உடம்புக்கு ஊட்டமளிக்கும். ஆனால் இளைஞர் விருந்து சொட்டச் சொட்டச் சுவை தந்து உளத்திற்கும் உயிர்க்கும் உயர்வளிக்கும்; பண்பாட்டை வளர்க்கும்.

நாவுக்கினிய பண்டங்கள். காதுக்கினிய சுவைகள்; கருத்துக்கினிய காட்சிகள். உடலுக்கும் உயிருக்கும் உரந்தரும் சீவசத்துக்கள்; தமிழ் முறுக்கேற்றும் பானங்கள். அதிமதுரக்கனிகள் எல்லாம் இந்த விருந்தில் நிரம்பவுண்டு. மாந்திமகிழுங்கள்.

வாழ்க தமிழ்.

வட்டுக்கோட்டை. பண்டித க. மயில்வாகனன்
8-5-58.

# சிறப்புப்பாயிரம்

பண்டிதர் சோ. இளமுருகனார்
(தமிழ் விரிவுரையாளர், மகளிர் கல்லூரி உடுவில்)

வண்டலைந்து தேனூர வரிக்குயில்க
ளிசைபாட மயில்க ளாடுந்
தண்டலைசூழ் வட்டுநகர்த் தமிழ்ப்புலவன்
நல்லதம்பி தந்த பாடல்
உண்டவர்க்கு நறுந்தேனும் செழுங்கனியு
மெந்நாளு முவர்க்கு மையா!
கண்டிளைஞர் விருந்தென்னச் செவியேற்றிக்
கருத்திறக்கிக் களிக்க மன்னோ.

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திலிருந்து நீக்கப்பட்டது

# இன்பந் தரும் இளைஞர்விருந்து.

புண்டிதர். திரு. பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்
[தமிழ் விரிவுரையாளர் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி பலாலி]

சுவைமிக்க இலக்கியப் பேச்சாளரும் கவிதையியற்று வதிலே திறன் வாய்ந்தவருமாகிய ஒருவரை நான் நன்கறிந்திருந்தேன். அவர் திடீரென மரணமானார். வாழ வேண்டிய வயதில் இவர் இப்படி எங்களெல்லாரையும் ஏமாற்றிப் பொல்லாப்புச் செய்யக் காரணம் யாதோ வெனச் சிந்தித்தேன். அதற்கு விடை அவரியற்றிய பாடலொன்றினை நான் வாசித்த பொழுது கிட்டிற்று.

"......................உள்ளம் விரிந்திட
வானம் சென்றும் வளர்ப்பம் அறிவினை."

என்ற பகுதி. அவர் தம் அருமந்த இலக்கியத் தாகத்தைத் தீர்க்கவே வான்சென்றாரென விடைபகர்ந்தது. இளமையிலேயே முதுதமிழ்ப்புலமையெய்திய அறிஞர் நல்லதம்பியைப் பொதுவாக இலங்கைத் தமிழ்மக்கள் நன்கறிவர். அரசாங்கம் அவரியற்றிய பாடலுக்குச் செய்த சன்மானம் அவரை எல்லோருக்கும் அறிமுகமாக்கிற்று. அவர் மொழிபெயர்த்தியற்றிய இலங்கைத் தேசியகீதம் அவர் புலமைக்குச் சான்று பகருகின்றது. இவரியற்றிய பாடல்களிலிருந்து இளைஞர்க்கேற்ற விருந்தாயமையும் சிலவற்றைத் தமிழன்பர் சிலர் வெளியிட முன்வந்திருப்பது மெச்சத்தக்கது.

இவர் பாடல்களைப் படிக்கும் பொழுது உள்ளத்திலே உணர்ச்சியும் இன்பப் பெருக்கும் எழுகின்றன. சொல்வளமும் கருத்து வளமும் பொருந்திய பல கவிதைகளை இவர் பாடற்றொகுதியிலே காணலாம். பாடலுக்கு உடல் வளம் போன்றிருப்பதாகிய நற்சந்தம் இவர் பாடலிற் பற்பல இடங்களிற் புலப்படுகின்றது.

"அறிவினைப் பெருக்கிடுவோம்—எம்மை
அடக்க வருபவரை மடக்கிடுவோம்"
(எமது வருங்காலக் கடன்)

"சொத்திலாத ஏழைமக்கள் துடிதுடிப்பர் பசியினால்
சோறிலாது கூழிலாது சோர்வு கொண்டபிள்ளைகள்
செத்தலாகி வெற்றெலும்பு தெரிய மூளை வறியராய்ச்
சிந்தை நொந்து கந்தையோடு திரிதலென்று தீர்ந்திடும்"
(ஊர்தோறும் கைத்தொழிற் சங்கம்)

"கறுத்த உடல் வெளுத்த நகைக்
குறத்தி யிரே வாரீர்
சிறுத்த இடைக் கறுத்த உடைச்
சிறுக்கி நீ ரெவ்வூரீர்?" (குறத்தியும் சிறுவனும்)
"கடிக்க வந்தாற் பிடிக்க வேணும்
காசு தருவோமே
நொடிக்கு ளித னுட்டங் காட்டில்
நுமக்கு நன்றி யாமே" (குறவனும் பிள்ளைகளும்)

இப்பாடற் பகுதிகளிலும் 'பாலரெல்லாம்' 'கிழமைகள்' என்ற தலைப்பின் கீழ்வரும் பாடல்களிலும் சந்த இன்பச் சுவை இன்பந் தந்திடுகிறது.

சந்த அழகோடு கூடிப் பொருளை அப்படியே நமக்கு முன்னே படம்பிடித்து நல்லுணர்ச்சி யெழுப்பும் உயிரூட்டமுள்ள பாடல்களுக்கு இந்நூலிற்குறைவில்லை.

கூதிர்க் காலம் முழுவதும் அத்தகையதே.

"கூதிர் வந்தது கூதிர் வந்தது கூதிர் வந்ததம்மா
கொடுகொடுக்குதுகொடுகொடுக்குதுகொடுகொடுக்குதம்மா

................................................................

"தீதிலா ஆடுமாடு சேற்று நிலத்திலே
தியங்கி நடுங்கி மேய்ச்சல் தேடிச் செல்லவில்லையம்மா

................................................................

இடியிடிக்கிற திடியிடிக்கிற திடியிடிக்குதம்மா
இருட்டினிடையே பளிச்சென மின்னலெழுந்து மின்னுதம்மா
மடைதிறந்தெனக் குளங்களோடைகள் வழிந்து பாயுதம்மா
................................................................"

கூதிர் இப்படியிருக்காது வேறு எப்படி இருக்கும்?

"கடலில் அலையெழுந்து மலையெனவே—பொங்கக்
கலக்கி மரஞ்செடிகள் குலுக்குவையே
உடலிலுறுவை யுன்றனுருவ மென்னும்" எனக்காற்றின்

சேட்டையைப் பற்றிப்பிள்ளை கேட்பதாக வேறெப்படிக் காட்ட முடியும்?

இதோ ஆற்றின் ஆரவாரப் பாய்ச்சல்;

"உரண்டு புரண்டு வந்தேன்—கல்
உடைத்துப் பரலை யுதைத்துக் கிளப்பித்
திரண்டு குமுறி வந்தேன்—பலப்பல
திட்டைகள் குட்டைகள் முட்டி முட்டி வந்தேன்"

"குந்திமுன்னங் கால்களைக் குவித்துக் கையென்றுக்குவாய்
கொந்திக் கொந்திக் காய்பழம் கொட்டையுணவாக்குவாய்"

அணில் கொட்டை கொறித்துண்ணும் விசித்திரம் நாமின்றுங் காண்பது போல் இத்தகையதே. பாட்டில் அமைந்த படம் எத்துணை விசித்திர உணர்ச்சியை இதயத் தெழுப்புகின்றது. நாங்கள் பூவியலிற் படிக்கும் விந்தனை வேடர் வாழ்க்கை அப்படியே சித்திரமாக ந:கண்முன் இவர் பாடலைப்படிக்கும் பொழுது காட்சிதருகின்றது.

குழந்தைகளுக்குரிய இவர் தம்பாடற்றொகுதியிலே அவர் விளங்கக்கூடிய வகையிலே அரும்பொருள் வருதலை 'முருகன் கைவேல்' என்ற பகுதியிற் காணலாம்,

"பசியும் பிணியும் மிடியு மளித்திடும்
பாருல காள்பவர் வேல்—நல்
இசையும் நலனும் வளமு மளித்திடும்
எங்கள் முருகன் கைவேல்"

"எங்கும் அமைதியிலாமற் குலைத்திடும்
இப்புவி யாள்பவர்வேல்—இன்பம்
தங்கி யமைதி தழைத்திடச் செய்திடும்
சாந்த மணிக்குகன் வேல்"

"ஆறுதலின்றி அலைந்தோடச் செய்யும்
அவனியை ஆள்பவர் வேல்——எங்கும்
ஆறுதல் காட்டி யருட்பதம் கூட்டிடும்
ஆறுமுகவன் கைவேல்"

*அரசியலாளரின் கடுஞ்சட்டமிடியிற் பட்டபின் ஆறுமுகவடிவேலன் கோயிலுக்குச் செல்பவர் எய்தும் அனுபவம் இதுதானே. இன்றைய உலகமே விஞ்ஞான மயமாகி மாறிவருகின்றது. இச்செயற்கை உலகிலே உளத்திற்கு உவகைதரும் தனிக்கற்பனைக்கு விளக்கமுங் கொடுக்காவிடில் உலகியலார் அதனை ஏற்றுக் கொள்ளார். ஆகவே குழந்தைக்கும் இப்புலவர் சாத்திர உண்மைகளை நன்முறையிற் புகட்டுகின்றார்.*

'ஏழுநிறக் கதிரை யியல்பா யுடைமையினால்
ஏழு குதிரை பிவர்கின்ற யென்போ மால்
நாளும்புவி சுழல நன்மையன்றோ நீ மகிழ்ந்து
சூழுகின்ற யென்பேஞ் சுடர்மணியே வாழியவே"

(*வெயிலவனும் வெயிலும்*)

*'மின்சாரம்' என்ற தலைப்பின்கீழ் வரும் பாடல்களும் விஞ்ஞானத்தின் நலத்தையும் அது செய்யும் கொடுமைகளையும் எடுத்தியம்புகின்றன.*

*சிற்சில உண்மைகளை. குழந்தைகளை ஆக்கப் பாட்டு வழியிற் செலுத்துங்கால் இப்புலவர் உபதேச முறையி லியம்புகின்றார். கவிதையோடு உணவினையும் வேண்டி நிற்கு முலகிற்கு இவற்றையெல்லாங் காட்டவேண்டியது அவசியமானதே.*

"வெளிமினுக்கில் மயங்கி நிற்கும் ஈழநாடே—முன்னோர்
வெற்றி வாழ்க்கை மறந்து விட்டாய் ஈழநாடே
தெளிவுனக் கெந்நாள் வருமோ ஈழநாடே—மேலைத்
தேய வாழ்வில் மோகங் கொண்டாய் ஈழநாடே"

"பருத்தியை வளர்த்திடலாம் ஈழநாடே—வேண்டும்
பயிரை யெல்லாம் செய்திடலாம் ஈழநாடே
விருத்தியாகக் கைத்தொழில்கள் ஈழநாடே—நமக்கு
வேண்டியன செய்திடலாம் ஈழநாடே"

(ஈழநாடே கேள்)

குழந்தையைக் கண்மணியெனத் தம்மிதயத்தோடு அருமைப் பாடமைய அணைத்து அவனெதிர்காலத் திற்கு உகந்த கல்விப்பாதைக்கும் வழி வகுக்கின்றார் இவர்.

"மன்றத்து வாதிகள் மெத்தவுண்டு மேல்
மருத்துவர் கூட்டமும் மெத்தவுண்டு
இன்றைக்கு மக்களை கற்பதெதற்கென
எண்ணி நீ பாரெங்கள் கண்மணியே"

"வேற்று நாடேகிப் பலப்பலகைத்தொழில்
வித்தை படித்திவர் மீண்டு வந்தே
ஆற்றல் மிகுந்திடக் கூட்டுறவுத் தொழில்
ஆற்றிடல் நன்றன்றோ கண்மணியே"

"பருத்தி விதைத்து நற் பஞ் செடுத்தூர் தொறும்
பள்ளிகள் வீடுகளிற் பரிந்தே
அருத்தி கொள் மாணவர் அன்னையர் நூற்றிடில்
ஆயிரம் மிஞ்சாதோ கண்மணியே."

"தீப்பெட்டி யோடு சவர்க்காரந் திரி
தீதறு காகிதஞ் சீர் விளக்கு
வாய்ப்புறு பின்ன லெனப் பல செய்து
வறுமை தொலைத்திடு கண்மணியே.

(வேறுங்கல்வி)

இப்படி நம் பொருளாதார விருத்திக்கும் வழிகோலுகின்றார் புலவர். கல்வியென்றால் யாது? அதன் குறிக்கோள் யாதாயிருக்கவேண்டும் என்ற உண்மையையும் மணியனைய குழந்தைக்கு இவர் நயமுற ஓதுகின்றார்.

'என்னையா னெந்தப் பொழுதினுங் காக்க
வியன்றவ னென்னக் கலைபடிப்பாய்
பின்னை யொருவ ருதவியிலாது
பிழைக்க வகை தெரி கண் மணியே."

(வெறுங்கல்வி)

" ..........................................................................
அறிவினோடு தொழில் பெருக்கி யழகினோடு வாழ நல்
லருளினோடு பணிகுயிற்றல் அருமை மேவு செயலரோ"
(ஊர் தொறும் கைத்தொழிற் சங்கம்)

ஏழைத் தொழிலாளரைப் பிள்ளைக்கு அறிமுகப்படுத்தி அவரின்றி உலகுவாழ முடியாதென மனிதசமூகவாழ்வுக்குரிய தொழில்களில் இழிவு இல்லையென்னும் இவர் செய்யும்—இன்றைய உலகிற்குத் தேவையான—உபதேசத்தை 'தொழிலாளர்' என்ற தலையங்கத்தின் கீழ்க்காண்க.

இவர் பாடல்களை நாம் படிக்கும் பொழுது குழந்தைகளை எத்தனை எத்தனை முறைகளால் வசிகரித்து இவர் பாடுகின்றார் என்பது தெளிவாகும். பிள்ளைகள் மனதிற்குகந்த பொருள்களைப்பற்றிப் பாடுகின்றார். அவை தம் சரிதையைக் கூறும் பாவனையிலே பிள்ளைகள் மனதைப் பிணிக்கின்றார். சில இடங்களிற் சம்பாஷணையைக் கையாழுகின்றார். நகைச்சுவைக்கு இடங்கொடுக்கின்றார், 'வெள்ளவத்தைக் கடலோரம் என்ற தலைப்பின் கீழ் வரும்.

"வாலறுந்த சேவலென மயிர் குறைத்தே – சில
மடப்ப மிழந்த சிறு மங்கையர்களும் ......" என்னும்
பகுதி நகைச்சுவையினை அப்படியேஎடுத்துத்தருகின்றது.

கதைகளைப் பாட்டாக்கிக் குழந்தைகளைக் கவருகின்றார் புலவர். கவிதையோடு உண்மையையும் விரவிக் கலக்கச் செய்கின்றார். ஈற்றிலே பாலருக்குகந்த ஆட்டத்திற்கு அவர்களை அன்புடன் அழைத்து ஆட்டத்துடனே தெய்வத் தமிழ்ச் சுவையையுமூட்டி விடுகிறார்.

"கோதையடரே கூடுவீர் கோலடிக்க நாடுவீர்
போதணிம் பூவையரே பொலிவுறு தமிழ் தேடுவீர்
—புகழ்பெற நனி ஆடுவீர்—

"தண்டமிழீர் வாருங்கள் ஒண்டமிழீர் சேருங்கள்
பண்டமிழீர் பசுந்தமிழீர் பழந்தமிழீர் பாடுங்கள்
—பயன்பெற இன்றே ஆடுங்கள்

"இனியமொழி ஆகுமே இசை மொழியும் ஆகுமே
பனியனைய செழு மொழியைப் பயனுற நனிபாடுமே
—பரவிப் பரவி ஆடுமே

*இவ்வண்ணம் பைந்தமிழால் செந்தமிழால் பயன் தருமென் தமிழால் அமைந்த இளைஞர் விருந்து வகைப் பாட்டல்களை வளர்ந்தோரும் வளரிளம் சிறுரும் உளங் குளிரப் பாடிக் களி கூருக.*

———

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கலைமகள் | 1 |
| 2. | திருமகள் ... | 3 |
| 3. | இறைவன் ... | 3 |
| 4. | முருகன் ... | 5 |
| 5. | முருகன் கைவேல் .... | 6 |
| 7. | குறையிரப்போம் ... | 7 |
| 8. | காற்று ... | 9 |
| 10. | முகில் ... | 11 |
| 11. | முகிலை மழை உதவவேண்டல் ... | 12 |
| 13. | கூதிர்க்காலம் .... | 13 |
| 14. | வெயிலவனும் வெயிலும் ... | 14 |
| 15. | ஆறு .... | 16 |
| 16. | களனி கங்கைப் பெருக்கு ... | 18 |
| 17. | காலைப்பொழுதிற் கடற்கரையில் ... | 19 |
| 18. | வெள்ளவத்தைக் கடலோரம் ... | 20 |
| 19. | கடற்கரைக் காட்சி ... | 22 |
| 20. | எறிந்த மல்லிகை .... | 22 |
| 21. | நெருப்பு ... | 24 |
| 22. | நமோதாயே ஸ்ரீலங்கா ... | 27 |
| 23. | ஈழநாடே கேள் ... | 28 |
| 24. | பொன்னிலங்கை ... | 29 |
| 25. | இலங்கை ... | 30 |
| 26. | ஈழத்தவர் பாரதத்தாயை மறக்கலாமா? | 31 |
| 27. | தமிழ்த்தாயை வழுத்துவம் .... | 32 |
| 28. | தமிழ்த்தாய் ... | 33 |
| 29. | தமிழ் அன்னை ... | 34 |
| 30. | பொலிதரு தைப்பொங்கல் ... | 36 |

| | | |
|---|---|---|
| 31. | பொங்குக நல்லறம் ... | 38 |
| 32. | பொங்குக பொங்கல் ... | 39 |
| 33. | தீபாவளி ... | 40 |
| 34. | பாரதியார் ... | 42 |
| 35. | தமிழர் தவப்பயன் ... | 44 |
| 36. | நாவலர் ... | 45 |
| 37. | திருவள்ளுவர் ... | 46 |
| 38. | காந்தித்தாத்தா ... | 48 |
| 40. | இராமநாதன் ... | 50 |
| 41. | காலைக்கடன் ... | 51 |
| 42. | கடமைகள் ... | 52 |
| 43. | உயிர்கள் மேல் இரக்கம் ... | 54 |
| 44. | தூயவுள்ளம் ... | 55 |
| 45. | அடக்கம் .... | 55 |
| 46. | கல்வி தேடுக ... | 56 |
| 47. | குடிவெறியின் கேடு .... | 57 |
| 48. | எமது வருங்காலக் கடன் ... | 57 |
| 49. | வெறுங்கல்வி .... | 59 |
| 50. | ஊர்தோறும் தொழிற் சங்கம் ... | 60 |
| 51. | கைத்தொழில் ... | 62 |
| 52. | தொழிலாளர் ... | 63 |
| 53. | உழவு .... | 66 |
| 54. | மின்சாரம் ... | 68 |
| 55. | யாழ்ப்பாணப் புதுமை ... | 69 |
| 56 | நாம் .... | 71 |
| 57. | எருதின் முறையீடு ... | 74 |
| 58. | தேனீயும் குளவியும் ... | 75 |
| 59. | குறவனும் பிள்ளைகளும் ... | 76 |
| 60. | குறத்தியம் சிறுவரும் ... | 77 |
| 61. | சோம்பேறியும் பிராணிகளும் ... | 79 |
| 62. | சிங்கமும் சுண்டெலியும் ... | 80 |
| 63. | பிறவிக்குருடன் ... | 81 |
| 64. | குதிரை முட்டை ... | 82 |

65. பொய்சொல்லி உயிர் இழந்தது .... 83
66 கேப்பைக் கூழ்க் கிராமம் ... 85
67. விந்தனை வேடர் ... 87
68. பொன்பெற்ற துறவி ... 89
69. சோலைக்கிளி ... 92
70. ஆடுபாப்பா .... 97
71. பாலரெல்லாம் கூடுவோம் ... 97
72. வாசமலர் .. 98
73. குஞ்சே குஞ்சே வா வா வா ... 98
74. அணில் ... 99
75. பறவைகளின் ஒலிகள் ... 99
76. சிட்டுக்குருவி ... 100
77. குயில் ... 101
78. கிழமைகள் ... 102
79. பாவைப்பிள்ளை ... 102
80. வெற்றிலை விற்போன் ... 103
81. கப்பல் .... 103
82. கடலை ... 104
83. மழையை அழைத்தல் ... 104
84. குளித்தல் ... 105
85. தேயிலை கிள்ளல் ... 106
86. ஆடுவோம் ... 107
87 நீர் செய்ய வேண்டியன ... 107
88. வீரந்தரவேண்டும் .... 109
89. சாந்தியுதயம் ... 111

# இளைஞர் விருந்து

## ௧. தெய்வம்

### 1. கலைமகள்

1. வெள்ளைக் கமலத்திலே—நன்று
வீற்றிருக் கும்விளக்கே—என்றன்
உள்ளக் கமலத்திலும்—சற்
றுறைந்திட வேண்டுமடி.

2. நான்முக னவினிலே—வளர்
நாமக ளேயமுதே—தமிழ்த்
[illegible]ளொறெ னவினிலும்—நின்று
நித்திக்க வேண்டுமடி.

3. செந்தமிழ்ப் பூம்பொழிலில்—தென்றல்
சேரநின் றாடிடுவாய்—என்றன்
பைந்தமிழ்ப் பாடலினும்—ஆடல்
பண்ணிட வேண்டுமடி.

4. நூல்வடி வாயமை வாய்—உயர்
நுண்மதி யாய்வரு வாய்—என்றன்
நூல்களி னும்பொலிந்தே—நின்று
நோக்கிட வேண்டுமடி.

5. அச்ச மகற்றிடடி—உண்மை
யாம்பொருள் காட்டிடடி—மேலோர்
நச்சிடும் பண்புடனே—வாழ
நல்லருள் செய்திடடி.

6. தண்டமிழ்ச் செல்வர்களைப்—போற்றுந்
தண்ணளிச் செல்வர்கள்பால்—என்றும்
ஒண்டொடி நீயிருந்தே—சிறப்
புதவ வேண்டுமடி.

7. அன்பரு ளீகைநலம்—பூண்ட
அன்னைய ராயிருந்தே—நங்கள்
துன்பமெல் லாந்துடைப்பாய்—வாணி
தூய பதம் பணிந்தேன்.

## 2. கலைமகள்

1. வெள்ளைக் கமலத்தினாய்—யாழ்
விளங்கு கரங்களிரண்டினிலங்கிடத்
தெள்ளித் தெளித்தமறை—ஒரு
செங்கைத் தலம்பெறத்தங்கச்செபமாலை
உள்ளத்தொளி நிலையைக்—காட்ட
ஓர்கரமேவிடச்சீர்மதி போலெழில்
கொள்ளுந் தம்முகத்தே—நகை
கூடவிளங்கிடுங் கோமகள்பாரதி — (வெ)

2. நான்முகன் நாவினிலே—வளர்
ஞானக்கொளுந் திக்கஞாலம் அறிவெனுந்
தேன்மிக மாந்திடவே—அருள்
செய்கின்ற வாணியென்சிந்தையினும்வந்து
வான்மழை பெய்வதுபோல்—தமிழ்
மாரிபொழிந்திட மாட்சிவரந்தந்து
கோன் முதலானவரும்—தொழுங்
கோலமுமெய்ஞ்ஞான சீலமுமீந்தருள் — (வெ).

## 3. திருமகள்

1. திருவே ஒருமா மலர்வாழ் செல்வே
மருவே மணியே மதியே நிதியே
ஒருவா வளமும் முனதா ருறவும்
தருவாய் சயமா மகளே சரணம்

2. பொன்னே பொருளே பொலிவின் மலர்மேல்
அன்னே நினதா ளகமீ தணிவோம்
நின்னே ரருளும் நிலைசேர் திருவும்
இன்னே தருவாய் இறைவீ சரணம்

## 4. இறைவன்

1. தாய்போல் அருள்வான் தந்தையுமாவான்
தக்கோர் அறமாவான்
தூயார் நெஞ்சக் கோயிலி லுறைவான்
சுடரொளி யெனநிறைவான்.

2. எல்லா உலகமும் எல்லா உயிர்களும்
எல்லாம் தானாவான்
எல்லா உயிர்களும் எந்தாய் எனவருள்
ஈயும் பொருளாவான்.

3. அன்பே வடிவாய் அமைவான் ஏழைகள்
அன்புரை கேட்டிடுவான்
அன்போ டெளியரை ஆதரிப் போர்தமக்
காக்கங் காட்டிடுவான்.

## 5. இறைவன்

1. உலகத்தைப் படைத்திட்ட பெருமானே
உயிர்களைக் காத்தருள் புரிவானே. (உல)

2. ஏழைகள் வடிவாய் இருப்பானே
இனியவர் தம்மேல் விருப்பானே. (உல)

3. அழகிய உடம்பிது தந்தானே
அன்பர் உளத்தில் இருந்தானே. (உல)

4. வித்தையும் புத்தியுந் தரவேண்டும்
வேண்டிய செல்வமுந் தரவேண்டும். (உல)

5. நல்ல மனத்தையுந் தரவேண்டும்
நல்ல குணத்தையுந் தரவேண்டும். (உல)

6. நித்தமும் உடல்நலந் தரவேண்டும்
நீடிய ஆயுளுந் தரவேண்டும். (உல)

## 6. இறைவன்

1. உள்ள மெனுமந்த வெள்ளை மலரில்
உவந்திருப் பானன்றோ அம்மா—அவன்
கள்ளங் கபடு நிறைந்தா ருளத்தினைக்
கைவிடு வானன்றோ அம்மா. (உள்ள)

2. உயிருக் குயிரென்றார் உள்ளொளி யாமென்றார்
ஒன்று முணர்கிலம் அம்மா—பொல்லா
மயலுக்குள் ளேநின்று வாது புரிந்தென்ன
வாழ்வுபெற் றோமிங்கே அம்மா. (உள்ள)

3. தூய வுளத்திலே தூய நினைவுகள்
தோன்றி விளங்கிடி லம்மா—என்றும்
தூய செயலுண்டு தாயொத்த தெய்வத்தின்
நேயமுண் டாகுமே யம்மா. (உள்ள)

4. நல்ல நெறிகொண்ட செல்வர்க ளாமென்று
நன்று நவின்றனரே அம்மா—கடுங்
கல்லென்ற வுள்ளத்தோ டேழைக ளைத்தீங்கு
கண்டிட லாகுமோ அம்மா. (உள்ள)

5. அன்பு கடவு ளெனச்சொன்ன சொற்கள்
அறிந்திருந் தோமெங்கள் அம்மா—அந்த
அன்பினை யாவ ரிடத்திலுங் காட்டி
னன்றே நலஞ்சொல்வாய் அம்மா. (உள்ள)

## 7. இறைவன்

அன்பினுக்குள் ளன்பாகி அகத்திருக்கும் அன்பே
அறிவினுக்குள் ளறிவாகி யமர்ந்திருக்கும் அறிவே
இன்பினுக்குள் ளின்பாகி இயைந்துநிற்கும் இன்பே
எளியருக்குத் துணையாகி எழிலளிக்கும் எழிலே
கன்மனத்தைக் கனியவைக்கும் கருணைமலி கனியே
கவலையிலா வாழ்வுதந்து காக்குமுயர் மணியே
நின்பதத்தை வேண்டிநின்றோம் நீடுநல னருளே
நித்தியமாய் நின்மலமாய் நிலவுபரம் பொருளே.

## 8. முருகன்

1. வேலேன் விறலேன் விளங்குமிரு பெண்டிரு
பாலேன் திருவருளும் பண்பேனிங்—கேலேனை
ஏற்றருளைப் பெய்யா விருவிழியேன் செந்திலெம்மான்
மாற்ற மொன்றுகூறாய் மகிழ்ந்து.

2. கடம்பு புனைந்து கலைவளர்த்துக் கைக்கண்
உடம்பிடி யேந்தி யுயிர்கள்—படப்பொடித்துத்
தீந்தமிழைக் காத்துநிற்குஞ் செந்திற் பெருமானை
வாய்ந்தவுளத் துள்ளிருத்தி வாழ்த்து.

3. ஊக்கந்தா நல்ல உணர்ச்சிதா செந்தமிழின்
வாக்கின் செழிய வளந்தாதா—ஆக்கம்
அதர்விளுய்ச் செல்லு பழகுதா செந்தில்
முதல்வனே அன்பின் முதிர்ந்து.

வேறு

4. இரப்பாரை வைது தமிழ்க்கவி வாணரை யேசிமகிழ்
திருப்பார்வை நீடிய செல்வர்கள் மல்குமித் தேயத்திலே
புரப்பார் நினையன்றி வேறுருளர் செந்திற் பொன்ன
[வனே
கரப்பா யெனிலெளி யேன்தமிழ்ச் செல்வங் கடைப்
[படுமே.

## 9. முருகன் கை வேல்

1. போரென்று மன்பகை பொன்னுயிர் மாய்த்திடும்
பூமியை யாள்பவர் வேல்—கொடுஞ்
சூரென்று மும்மலக் கோட்டை யழிந்திடும்
தூய முருகன்கை வேல்.

2. ஞாலத்தி லன்பை யழிக்க முனைந்திடும்
நாட்டினை யாள்பவர் வேல்—மக்கள்
மாலைத் துடைத்தொளி யாலன்பு கூட்டிடும்
மாமயில் வீரன்கை வேல்.

3. மக்களுக் குட்பகை மூள வழிசெய்யும்
வையக மாள்பவர் வேல்—பண்பு
மிக்க வுறவு நிலைகொள்ளச் செய்திடும்
வெற்றி முருகன்கை வேல்.

4. குருதி படிந்தச்சங் கொண்டிடச் செய்யும்
குவலய மாள்பவர் வேல்—கனியும்
பரிவு படிந்துசெந் தண்மை பரப்பிடும்
பாவலர் சீர்மலி வேல்.

5. பசியும் பிணியும் மிடியு மளித்திடும்
பாருல காள்பவர் வேல்—நல்
இசையும் நலனும் வளமு மளித்திடும்
எங்கள் முருகன்கை வேல்.

6. எங்கும் அமைதி யிலாமற் குலைத்திடும்
இப்புவி யாள்பவர் வேல்—இன்பந்
தங்கி யமைதி தழைத்திடச் செய்திடும்
சாந்த மணிக்குகன் வேல்.

7. ஆறுதலின்றி அலைந்தோடச் செய்யும்
அவனியை யாள்பவர் வேல்—எங்கும்
ஆறுதல் காட்டி யருட்பதம் கூட்டிடும்
ஆறுமுகவன் கை வேல்.

## 10. குறையிரப்போம்

1. இறையவனைச் சீரலைவா யுறைகுகனைக்
குறையிரப்போம் பெண்ணே—அவன்
எங்குமுகில் படிந்துவளந் தாங்குசெழுங்
கதிரை நின்றான் கண்ணே.

2. அறிவினிலே அன்பினிலே அழுக்கில்லா
நெஞ்சினிலே பெண்ணே—அவன்
அருளொளியாய் இன்பமதாய் அறவடிவாய்
நின்றிடுவான் கண்ணே.

3. பொறையுடையார் கள்ளமிலாப் புனிதர்களை
வளர்த்திடுவான் பெண்ணே—அவன்
பொல்லார்க்கும் நல்லசெயும் வல்லாளைப்
புரந்திடுவான் கண்ணே.

4. நிறையுடையான் வள்ளலெனும் நிலையுடையான்
திருவுடையான் பெண்ணே—அவன்
நீங்காமல் எம்முளத்தே ஓங்கியருள்
தனித்துணைவன் கண்ணே.



## உ. இயற்கை

### 1. காற்று

1. உயிரைப் புரந்து நிற்குங் காற்றே—இந்த
உலகு பரவ வருங் காற்றே
பயிரை வளர்த்து நிற்குங் காற்றே—பல
பயனு முதவுகின்ற காற்றே.

2. மழையை அளித்தளிக்குங் காற்றே—உயர்
மரங்கள் செழிக்க வைக்குங் காற்றே
உழவுக் கருள் சுரக்குங் காற்றே—இங்கே
ஓடி வருவை செழுங் காற்றே.

3. கடலைக் கலக்குகின்ற காற்றே—பாய்க்
கப்பலை யோட்டுகின்ற காற்றே
உடலுக் குவகை தருங் காற்றே—உன்னை
உவந்து வழுத்துகின்றோம் காற்றே.

### 2. காற்று

நல்ல காற்றே—மிக—நல்ல காற்றே—இந்த
நானிலம் போற்றவரும் நல்லகாற்றே.

1. சொல்லு முயிரணைத்துந் தோன்று பொழுதே-உயிர்த்
துணைவனென் றணைகுவை மிகவிரைந்தே
மெல்ல நினதுறவை மாற்றிடும் போதே-உடல்
வீழ்ந்து மடிவதென்ன விளம்பு வந்தே — (நல்ல)

2. தூய வெளியில் விளையாடல் புரிந்தால்-உடற்
சோம்பலகன்று வன்மை தோன்றுதலுன்னல்
தீய பிணியை வெல்ல வேண்டுமென்றால்-உன்னைத்
தேடி நுகர்ந்து நுகர்ந் தாடுவமின்பால் —(கல்ல)

3. கரிவளி யாகிமரஞ் செடிகொடிகள்-உண்டு
கக்கநல மிக்கவளி யாகிவருவாய்
எரியினைக் காணினஞ்சி யெழுந்திடுவாய்-பகல்
இரவு கடல்தரைக்கா லென்ன மிளிர்வாய்—(கல்ல)

4. கடலில் அலையெழுந்து மலையெனவே-பொங்கக்
கலக்கி மரஞ் செடிகள் குலுக்குவையே
உடலிலுறுவையுன்ற னுருவ மென்னும்-எமக்
குரை செய்திடு வைபணி மொழிகள் சொன்னும்-(கல்ல)

5. தாழ்வற்று நீதெற்கினின்று சார்ந்திடுமந்நாள்-செய்யுந்
தாறுமாறால் வேறுபெயர் கொள்ளுவரிந்நாள்
ஈழத்து வடக்கினின்னைச் சோழக மென்பார்-மன
மியைந்து கிழக்கினிற்கச் சானெனச்சொல்வார்-(கல்ல)

6. சோழகமாய் நின்றுதுயர் தீர்த்திடுதலேன்-கச்சான்
சோர்வுதரு வெப்பினொடு மேவிடுதலேன்
பிழையின்றித் தெற்கில் மழை பெய்திடுதலேன்-மற்றைப்
பெருநிலம் மழையின்றிக் காய்ந்திடுதலேன்—(கல்ல)

7. வாடையெனும் பேரோடு வடக்குமழையைக்-கொண்டு
வங்காளக் கடலினின்று வந்திடுகிறாய்
நாடி நாடி யீழமெங்கும் பெய்திடுகிறாய்-மிக
நல்லை நல்லை நன்மையைநீ செய்திடுகிறாய்(—நல்ல)

## 3. முகில்

1. வெய்யி லெறித்திடுத லால் — உலகின்
மீதிலுள்ள நீர்நிலைகள் வற்றிடுத லால்
ஒய்யென ஆவியாகி நான் — மறைவாய்
ஓங்கி எழுந்து வானில் ஓடித்திரிவேன்—(வெய்)

2. மெல்லத் தடித்துத் தடித்தே—திரண்டு
மேகமென வேயலைவன் வேகமுற வே
ஒல்லெனக் காற்றுவீச வே—கறுத்தே
ஓதுபுவி மீதுமழை யாகவிழுவேன்—(வெய்)

3. மின்னலைக் கண்டிருப்பீ ரே—இடியின்
மெத்திய முழக்கமது கேட்டிருப்பீ ரே
இன்னவை தோன்றிய வுடன்—பொலுபொலு
வென்று சொரி வேனுமக்கு நன்றுபுரிவேன்-(வெய்)

4. மலையின் முகடுகளிலே—முகிலென
வண்ணமது வெண்மையென நண்ணியிருப்பேன்
பலபல கதிருடையோன்—வெப்பம்
பட்டிடக் கரைந்துருகிப் பள்ளம் நோக்குவேன்-(வெய்)

5. பள்ளத்தில் வழிதேடி—விரைவாய்ப்
பாய்ந்து புரண்டுருண்டு சாந்தியின்றியே
வெள்ளத்தை யெங்கும் வீசி—மரஞ்செடி
வேரொடு பறித்து வண்டல் வீசி யோடுவேன்-(வெய்)

6. ஆறெனும் பெயர் சூடிக்—கடலை
அடைந்து கலந்திடுவென் ஆண்டுதொறும்யான்
மாறி மாறி யிந்த விதமே—முறையாய்
வந்துபோய்த் திரிந்திடுவேன் மாணவர்களே—(வெய்)

## 4. முகிலை மழையுதவ வேண்டல்

1. ஆடிக் கடைநா ளகன்று கழிந்தது மேகமே—இனி
ஆவணி பூத்தது காரெனல் வாய்த்தது மேகமே
வாடித் தயங்கி மடிந்து வருந்தினேம் மேகமே—வெயில்
மண்டி யெறித்து வளத்தைக் கெடுத்தது மேகமே
கூடித் திரண்டு குமுறி முழங்குவை மேகமே—மழை
கொட்டி நிலத்தைக் குளிர்ந்திடச் செய்குவை மேகமே
நாடிச் செறுவை யுழுது நெல் வித்தினேம் மேகமே—உனை
நம்பி யிருந்தனம் வம்பு செய் யாதனி மேகமே.

2. பொன்னும் புவியும் பொருளு மிருந்தென்ன மேகமே—இவை
போற்றி யுடலைப் புரப்பதற் காகுமோ மேகமே
மன்னும் பசிக்கு மருந்துநெல் லல்லவோ மேகமே—அதன்
மாண்பினை யுண்பவர் மாட்டுநீ கேட்டுக்கொள் மேகமே
துன்னும்பல் கூலங்கிழங்கிருந் தாலென்ன மேகமே—
[நெல்லுச்

சோற்றுக் கிவையீடு சாற்றிடலாகுமோ மேகமே
இன்னுங்கறுத்துத்திரளா திருப்பதென் மேகமே-நினை
எண்ணி யெண்ணி விண்ணிற் கண்ணைப் பரப்பினேம்
[மேகமே.

## 5. கூதிர்க்காலம்

1. கூதிர் வந்தது கூதிர் வந்தது கூதிர் வந்ததம்மா
கொடு கொடுக்குது கொடு கொடுக்குது கொடுகொடுக்கு
[தம்மா
பாதி யிரவிற் குளிர் மிகுத் தெம்மைப் பதறச் செய்யுதம்மா
பட்டப்பகலு மிருட்டென மழை பாரிற் பெய்யுதம்மா
காலைமுடி யுடலைக்குறுக்கிக் கவலைச் செய்யுதம்மா
கனத்த போர்வை கொண்டு போர்க்கக்களிப் பளிக்குதம்மா
ஏது தொழிலுஞ் செய்யமன மிங்கியைய வில்லையம்மா
எந்த வேளை தனிலு முறங்க எண்ணமாகுதம்மா.

2. ஓது மிசையைப் பெருக்கு மாறெம்முளம் விரும்புதம்மா
உடலைக் குளிர்ந்த நீரிற் கழுவ உவர்ப்பு விஞ்சுதம்மா
தாது நிறைந்த பூவின் காவுந்தான் வெறுக்குதம்மா
தண்மை மேவு சாந்த மாதிதமை மறக்குதம்மா
நீதிலாத ஆடுமாடு சேற்று நிலத்திலே
தியங்கி நடுங்கி மேய்ச்சல் தேடிச் செல்லவில்லையம்மா
கோதிலாத பறவை யுணவு கொள மறந்தனவாய்க்
கூட்டிலிருந்து வருந்தி வெயிலைக் கூவல்கண்டிடம்மா.

இடியிடிக்கிற திடியிடிக்கிறதிடி யிடிக்குதம்மா
இருட்டினிடையே பளிச்சென மின்னலெழுந்து மின்னுதம்மா
மடைதிறந்தெனக் குளங்களோடைகள் வழிந்துபாயுதம்மா

வயல் நிலங்களில் வளர்ந்த நெற்பயிர் மறைய ஓடுதம்மா
அடைமழையினு லெவரும் பிழைப்புக்ககலல் தொல்லையம்மா
அரிசி காய்கறி விறகு தேடிடல் அருமையாகுதம்மா
மிடிகொள் எளிய குடிகள் வருந்தல் மிகக்கவலையம்மா
வெயி லெறித்திடிவர்கள் துயரம் மெல்லநீங்குமம்மா.

4. மழையினுற்பள்ளி விடுதலையென மகிழ்ச்சி கொள்ளுகிறுய்
வருடமுழுது மிதுபோலிருக்க மனமுங்கொள்ளுகிறுய்
செழுமை மேவும் அறிவினேடு திகழவேண்டுமென்றே
சிரத்தை யோடு படிக்க வீது சிறந்தகாலமன்றே
குழைவினுடனே கிழவர்போலநீ குந்திடல் தீதே
குறைவிலாமலே துணிவொடு களி கொண்டிடிப்போதே
பழைய படியேபனியும் வெயிலும் பறந்து வந்திடுமே
பல பொழுதொடும் பழகி யொழுகப்பயின்றுகொள்ளுதுமே

## 6. வெயிலவனும் வெயிலும்

1. சூரியனே சூரியனே சுடர்மிகுந்த சூரியனே
காரிருளை யோட்டும் கனகமணிச் சூரியனே
பாரை யியக்கிப் பகல்செய்யும் சூரியனே
சீருடைய நின்பெருமை செப்பி வணங்குதுமே.

2. ஏழுநிறக்கதிரை யியல்பா யுடைமையினல்
ஏழுகுதிரை யிவர்கின்ற யென்பேமால்
நாளும் புவிசுழல நன்மையன்றேநீ மகிழ்ந்து
சூழுகின்ற யென்பேஞ் சுடர்மணியே வாழியவே.

3. எல்லாவுயிரு மினிது பிறப்பதுன்னுல்
எல்லாவுலகு மிருளைத் தொலைப்பதுன்னுல்
எல்லார் தங்கண்ணும் இயைந்து நனி பார்ப்பதுன்னுல்
வல்லாளனைகதிர் மன்னவனே வாழியவே.

4. நின்னோடுற வுடையார் நீணிலத்து வாழ்வுடையார்
மன்னுமொழி குன்றா வளமருவு கண்ணுடையார்
நின்னையஞ்சி நிற்பார் நெடிதுநோய் கண்டிடுவார்
நன்மைதரு ஞாயிறு நின் நலம் வேண்டி வாழ்த்துதுமே.

5. சித்திரை வைகாசி திக ழானி யாடியிலே
மெத்த வெயிலால் மிகவாடி நொந்து நின்றோம்
எத்தனையோ வூர்களிலே இலைகருகி நன்மரங்கள்
செத்திடுமே ஐயாசினவாது நோக்கிடுமே.

6. கோடையை நீ செய்தலினாற் குடிக்கநீரில்லாமல்
காடுகுடி கொண்டகரிமான் மரை புலிகள்
மாடாடு மற்றவைகள் மறுகி யழிந்திடுமே
கேடுசெய்ய வேண்டா கிழவோய் அருளாயே.

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திலிருந்து நீக்கப்பட்டது

7. குடிக்க நீரின்றிக் கொதிக்கின்றார் மக்கள் பலர்
மடுக்கள் குளங்க ளெலாம் வற்றி வரண்டனவே
துடிக்குங் கொடுங்கோடை தோன்றியதே புல்பூண்டு
படிக்கு விருந்தவிடம் பாழ் வெளியாய்த் தோற்றிடுமே

8. வெய்யிலோ வெய்யில் மிகவெப்புடைய வெய்யில்
ஐயோ! வெளியி லகன்றிட்டார் கண் கொதிக்கும்
மெய்யெல்லாம் கொப்புளிக்கும் மிகச்சோர்வு விஞ்சிவிடும்
செய்வதறியோம் தினகரனே காத்தருளே.

9. பள்ளிக்குச் செல்கையிலே பாதங் கொதிக்கிறதே
அள்ளி அள்ளி வெய்யிலையெம் அப்பா நீ கொட்டுவதேன்
துள்ளித் துடித்துநாம் துயரடைதல் கண்டேனும்
மெள்ள வெறித்திடுவாய் வெய்யசுடர் மாமணியே.

10. கோப்புளிப்பா னம்மை கொடுங்கண்ணேயே சின்னமுந்து
வெப்பிலையா லெத்தனைபேர் மிகவாட்டங் கொண்டுநின்றார்
அப்பா பகலவனே அனைத்துலகும் காப்பவனே
செப்பரிய தென்றலை நீ சிறிது வரச் சொல்லாயோ.

## 7. ஆறு

1. மாமலை யுச்சியிலே—வெள்ளித்திரள்
மன்னிக் கிடந்தங்கு மின்னித் துலங்குதோ
தூமக் குவைதானோ—நுரைக்கூரை
தோற்று மதோவென்று சாற்ற விளங்கினேன்–(மா)

2. ஞாயிறு தன்கதி ரைப்—பரப்பிட
நான்கு திசையுங் கரைந்து வழிந்தனன்
ஓய்த லொழிச்ச லின்றிப்—பள்ளங்களில்
ஓடி யிறங்கிநல் லாறென்று பேர்கொண்டேன்–(மா)

3. உருண்டு புரண்டு வந்தேன்—கல்
உடைத்துப் பாலை யுதைத்துக் கிளப்பித்
திரண்டு குமுறி வந்தேன்—பலப்பல
திட்டைகள் குட்டைகள் முட்டிமுட்டிவந்தேன்–(மா)

4. செந்தழல் கக்குநிலம்—வளமுறச்
செய்துவந் தேன்காடு செய்துவந் தேன்பல
பைந்தழைச் சோலைகளை—ஆக்கிப்
பாருக் கழகு படைத்து வந்தேன் வந்தேன்–(மா)

5. வேட்டுவ ராயிருந் தோர்—பலர்பலர்
விட்டினைக் கட்டி விளங்கி நிலைக்கவும்
நாட்டினை யாக்கிடவும்—புன்செய்
நன்செய் சிறக்கவும் நாடிவந்தேன் வந்தேன்–(மா)

6. மந்தை நிரை செழிக்கக்—காட்டில் வளர்
மான் மரையானை மலிந்து விளங்கிட
இந்த வுலகினிலே—வரிகுளம்
எய்திட வூற்று மிமையந்திட வந்தனன்—(மா)

7. வேழ மருப்புகளும்--மலைத்தலை
மேவு பலமணிக் குப்பைக ளும்மகில்
காழுறு சந்தனமும்—கருங்
காலியுந் தேக்குங் கலந்து கொடுவந்தேன்—(மா)

8. பன்னிற நன்மலர்கள்—ஈக்கள்பல
பாடி யெடுத்துப் பதஞ்செய்து வைத்திட்ட
நன்னிறத் தேனுடனே—கொண்டு
நாடிவந் தேன்கடல் தேடிவந் தேன்கண்டீர்(—மா)

## 8. களனிகங்கைப் பெருக்கு.

1. ஆறு வழிந்ததடி—வெள்ளம்
அணை கடந்ததடி
சேறு செடிகளெல்லாம்—கடலெனத்
தேங்கிப் பரந்ததடி.

2. ஆற்றங் கரைமருங்கே—குடிகொண்ட
ஆரு மற்றவர்கள்
வேற்றிடம் போனார்கள்—வெள்ளம்
வீட்டினை மூடியதால்.

3. தெருவி னோரத்திலே—சிறுவீடு
தென்னோலை கொண்டடைத்தே
இரவுறங்கியதைப்—பார்க்க
இரக்கம் வந்ததடி.

4. ஈரத் துணியாலே—உடம்பை
இறுகப் போர்த்துக் கொண்டே
வாரத்தீ காய்ந்து நின்றார்—நடுக்கும்
வருத்தம் தீர்ந்திடவே.

5. வாழையின் குற்றி கொண்டே—புணைசெய்து
[illegible]
தாழாது சென்றதடி—கோல்கொண்டு
தாங்கிக் களித்தானடி.

6. தூல்லாச் சிறு தோணி—கொண்டு
சூது கலத் தோடு
பல்லோர் வலித்துச் சென்றார்—அது
பார்த்திடுங் காட்சியடி.

7. ஓடை யருகினிலே—துணியை
ஒதுக்கி வைத்து விட்டே
ஓடையில் நீராடும் பெண்டிர்
ஊக்கஞ் சிறந்ததடி.

8. மூன்றுபத் தொன்பதிலே—வைகாசி
முதற் பகுதியிலே
கான்றிடு மாமழையாற்—பெருகிற்று
களனி கங்கையடி.

## 9. காலைப் பொழுதிற் கடற்கரையில்

1. உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் காலைப்பொழுதில்—மிக
உடலுக்குவகை தரும் காலைப்பொழுதில்
மெள்ளக் கிழக்கி லொளி காலும் பொழுதில்—வீட்டை
விட்டுக் கடலருகுலாவ வெழுந்தேன்.

2. நீலக் கடலருகிற் சுருளலைகள்—வந்து
நீவருக வென்றழைக்க நீடுமகிழ்ந்தேன்
கோலத் திருமுருகன் பச்சை மயிலோன்—உளக்
கோயி லெழுந்து திருக் கூத்தியற்றினன்.

3. பச்சை விதான வானப் பந்தரின் கீழே—கரும்
பச்சைக்கடல் விரித்த பாயலின்மேலே
மெச்சுங் கதிரெழுப்பி வானவன் தோன்றுங்—காட்சி
வேலவன் பவனியென மிகமதித்தேன்.

4. உலகக் கவலை தொடர் போடுதல்கண்டேன்—அறி
வுலகி லுயர்ந்தவிடத் துற்றிடல் கண்டேன்
கலகக் கருத்தலைகள் பாறிடக் கண்டேன்—இன்பக்
கடலில் திளைத்து விளையாடுதல் கொண்டேன்.

5. எத்தனை புதுப் புதுக் கருத்து முளைத்தே—கவி
னியைந்த கவைத் தருக்க ளென வளர்ந்தே
வித்தகச் செழுங்கனி விளைத்திடக்கண்டே—கொண்டு
விழுங்கிப் புதுவலி விளங்கிடக் கண்டேன்.

## 10. வெள்ளவத்தைக் கடலோரம்

1. ஆழியலை மோதுமிட மாகவிருந்தும்—பச்சை
ஆரமெனச் சோலைதவழ் சீர்கொள் பதியாம்—உயர்
ஏழடுக்கு மேடையயில் கொழும்பினிலே—மிக்க
இன்பமுற மக்களுறை யெழில் நகராம்.

2. வெள்ளவத்தை தன்னிலொரு பிற்பகலிலே—காற்றில்
வேட்கைகொண்டு கடற்கரை நோக்கி நடந்தேன்—நன்று
தெள்ளிவடித் திட்டதென்றற் காற்றெனுஞ் செல்வன்—கடற்
றிரையை யுருட்டிவிளை யாடி யெழுந்தான்.

3. ஓவென் றிரைந்தெழுந்த பேரலை யெல்லாம்—நாவென்
றேங்கி யடங்கி மடிந் தொழிந்திடவே—விண்ணைத்
தாவிப் பிடிக்க வெண்ணங் கொண்டவைபோலே—தோன்றித்
தாண்டவ மிட்டுவரும் புத்தலை கண்டேன்.

4. நீலவரை மணியிருக்கும் நங்கையர்சிலர்—நகை
கட்டிநெடு பொட்டணிந்து நன்மலர்சூடி—நிறச்
சேலைக ளுடுத்தியிளஞ் செல்வியருடன்—பேசிச்
செம்பதுமச் சீறடி பெயர்த்து நடந்தார்.

5. வாலறுந்த சேவலென மயிர்குறைத்தே—சில
மடப்ப மிழந்த சிறு மங்கையர்களும்—உயர்
கோலமென முழங்காலின் மேலிலமையும்—சட்டை
கொண்ட சிறு பேதையரு மண்டி நடந்தார்.

6. நட்டழ கமைந்தவுடற் சிங்களப்பெண்டிர்—பழங்
காலவுடை நாலுமுழம் சாலவுடுத்தே—கச்சு
வட்டமுலை மேலிறுக்கிக் கூந்தல்முடித்தே—செல்வர்
மழலைக் குழவிகட்குக் காவலாய் வந்தார்.

## 11. கடற்கரைக் காட்சி

1. பாம்பு படமெடுத் தாலெனப் பேரலை
பாய்ந்து புரண்டு குமுறிக் கரைமோதி
வீம்புடை யாரென மாய்ந்து மடிவது
வெள்ளை யுளத்தினைக் கொள்ளை கொள்கின்றது.

2. கல்வியி லேறிய கன்னிய ரோடு
கலந்துற வாடிடுங் காளைய ரன்பொடு
நல்விருந் தென்ன வுலாவிக் களித்து
நறுங்கடற் காற்றை நயத்தல் சிறக்குது.

## 12. எறிந்த மல்லிகை.

1. வெய்யிற் பொழுதினி லே—உண்டாகின்ற
வெக்கை தணிக்கவென் றே
செய்திட்ட பந்தரி லே—படர்ந்த
செழுங்கொடி யிற்பிறந் தோம் —(வெய்)

2. நல்ல அரும்பா கி—முகிழ்த்து
நலம்பொலி போதா கிப்
பல்லித ழும்விரித் தே—மலரெனும்
பக்குவம் பெற்றிருந் தோம் —(வெய்)

3. வெள்ளிகள் வானத்தி லே—கணக்கின்றி
மின்னி நகுவது போல்
வெள்ளை நிறத்துட னே—பச்சிலைக்குள்
விளக்கங் கொண்டுநின் றோம் —(வெய்)

4. தென்ற லடைந்திட வே—நறுமணந்
தேங்கி வழிந்திட வே
நன்று சிரித்துநின் றோம்—கவித்திட
நல்லழ கீந்துநின் றோம் —(வெய்)

5. மல்லிகை பூத்ததென் றே—தூயமணம்
வந்து கமழுதென் றே
நல்ல தெளிதே னைப்—பருகிட
நாடின வண்டினங் கள் —(வெய்)

6. மங்கல மாளிகை யில்—பளிங்கென
வானுயர் மண்டபத் தில்
நங்கையர் கொண்டையி லே—கண்ணணியென
நாங்கள் வடிவுசெய் தோம். —(வெய்)

7. காவி யுடைதரித் தோன் - கூடையொடு
தனைக் கோல் கைப்பிடித் தோன்
மேவி யெம்மைப் பறித்தே—பொலிவு
விளங்கிய மாலைசெய் தான் —(வெய்)

8. சித்திரக் கோவிலி லே—அழகைத்
திணித்திட்ட காட்சியி லே
வித்தகர் தோளினி லே—முதலிடம்
மேவி அலங்கரித் தோம் —(வெய்)

9. எங்கு மொருநாளே—எமக்குயர்
வீந்தனர் காய்ந்திடவே
மங்களம் போயதென் றே—குப்பையிலே
வாரி யெறிந்துவிட் டார் —(வெய்)

10. உங்கள் உயர்வாழ் வும்—இப்படியே
ஓய்ந்து முதுமையெய் தும்
எங்கள் சிறுவாழ் வால்—நிலையாமை
எண்ணி நலங்கள்செய் வீர் —(வெய்)

## 13. நெருப்பு

1. இன்று நெருப்புப்பெட்டி எனவிருந்தே-வேண்டும்
எதற்கும் துணைபுரிவன் மிக விரைந்தே
அன்று முதல்மனிதன் வியப்புடனே-என்னை
அறிந்த வகையுரைப்பன் களிப்புடனே.

2. ஆதியில் மனிதன் வேட்டை ஆடித்திரிந்தே-காட்டில்
அகப்படும் விலங்கினைக் கொன்று மகிழ்ந்தே
ஏதுமொன்று செய்திடாமற் பச்சையா யுண்டான்-இந்த
இழிவு தொலைவதற்கே என்தனைக் கண்டான்.

டிலவன் வேட்டைசெயுங் கருத்துடனே-எங்குந்
திக்க நடந்தனன் விருப்புடனே
ரு பற்றைதனைப் பார்த்துவிட்டான்-அந்த
றுகிறுத்து விறைத்து விட்டான்.

4. "ஒருநாளு மறியாத புதுமையடா—மூங்கில்
உரைஞ்ச உரைஞ்ச ஒளி தெரியுதடா
எரிகின்ற சூரியன் இறங்கினனோ?—இங்கே
யாரு மறி யாதபடி யிருந்தனனோ?"

5. "நீட்ட நெருங்கும் போது சுடுகுதடா—நம்மைக்
கெடுத்திட வந்ததுபோல் தெரியுதடா
எட்டிநில் லடாகிட்டப் போகாதேயடா—போனல்
இவை போ லழிய வேணும் யாங்களுமடா."

6. "எரிக்குதடா! எல்லாம் எரிக்குதடா—நாங்கள்
எரியென்றிதற்குப் பெயர் சொல்லு வோமடா
தருக்கள் செடிகொடிகள் தீக்குதடா—நாங்கள்
தக்க பெயர் தீயெனவே சாற்றுவோமடா."

7. "மரத்தால் மரத்தைநன்று கடைவமடா—உள்ளே
மறைந்து கிடக்குதோதீ தெரிவமடா"
உரத்துக் கடையும்போது பளிச்சென்றுநான்—அங்கே
உதித்திடக் கண்டுபல்லை யிளிச்சுநின்றான்.

8. "எரித்தே இறைச்சிசுவை பார்ப்பமடா—பச்சை
இறைச்சியி லினி தெனிற் காப்பமடா"
"பெருத்த விறகை யெல்லாம் அடுக்கிடடா—என்றும்
பேணிவைத் தாலெரித்துத் தின்னலாமடா."

9\. இப்படியே வேடனெனைக் காட்டிவிட்டான்–என்றன்
இன்ப விளையாட்டை யெல்லாம் காட்டிவிட்டான்
அப்புறம் உணவுவகை அனைத்தையுமே–என்மேல்
அணைத்து வெதுப்புதலில் முனைந்து நின்றான்.

10\. மண்ணினைப் பிசைந்துபானை சட்டிகள் சுட்டான்–ஒளி
வைத்திட விளக்கல்கள் பற்பல பெற்றான்
எண்ணியெண்ணிச் செய்தவித்தை எத்தனையையா–பூவில்
என் பெருமை மிக்கதென் றிசைத்திடு வையா.



# ௩. நாடும் மொழியும்

## 1. நமோ தாயே ஸ்ரீ லங்கா

(இலங்கை தேசிய கீதம்)

[நமோ நமோ மாதா என்னும் சிங்களத் தேசிய கீதத்தைப் புலவர் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தியற்றியது]

நமோ நமோ தாயே நம் ஸ்ரீ லங்கா!
நமோ நமோ நமோ நமோ தாயே!
நல்லெழில் பொலி சீரணி
நலங்கள்யாவு நிறை வான்மணி லங்கா!
ஞாலம் புகழ்வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா!
நமதுறு புகலிடமென வொளிர்வாய்!
நமதுதியேல் தாயே!
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே! (நம் ஸ்ரீ லங்கா நமோ......)
நமதா ரருளானாய்!
நவை தவிருணர் வானாய்!
நமதேர் வலியானாய்!
நவில் சுதந்திரமானாய்!
நமதிளமையை நாட்டே
நகுமடி தனையோட்டே
அமைவுறு மறிவுடனே
அடல் செறிதுணிவருளே
நமதாரொளி வளமே!
நறிய மலரென நிலவுந்தாயே!
யாமெலாமொரு கருணை யனைபயந்த
எழில் கொள் சேய்களெனவே

இயலுறு பிளவுகள் தமையறவே
இழிவினை நீக்கிடுவோம்!
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே.

## 2. ஈழநாடே கேள்!

வளத்திலே சிறந்து நின்றாய் ஈழநாடே–கண்டார்
வாழ்த்திலே உயர்ந்துநின்றாய் ஈழநாடே
உளத்தினைக் களிக்கவைக்கும் ஈழநாடே–இன்றேன்
உணர்வுசோரும் மக்களீன்றாய் ஈழநாடே!

செழுமைகொண்ட நிலமமைந்த ஈழநாடே–பிறரைத்
தேடிநீ இரப்பதென்ன ஈழநாடே
உழவிலே சிறந்துநின்ற ஈழநாடே–இந்நாள்
ஊணிலாது வாடலென்ன ஈழநாடே.

வேற்று நாட்டுக் குணவளித்த ஈழநாடே–பசியால்
மெலிந்து நின்று கரைவதென்ன ஈழநாடே
சோற்றிலே வளர்ந்துநின்ற ஈழநாடே–இன்று
சோறிலாது தாழ்வதென்ன ஈழநாடே.

வெளிமினுக்கில் மயங்கிநிற்கும் ஈழநாடே–முன்னோர்
வெற்றி வாழ்க்கை மறந்துவிட்டாய் ஈழநாடே
தெளிவுனக் கெந்நாள் வருமோ ஈழநாடே–மேலைத்
தேயவாழ்வில் மோகங் கொண்டாய் ஈழநாடே.

பருத்தியை வளர்த்திடலாம் ஈழநாடே—வேண்டும்
பயிரையெல்லாம் செய்திடலாம் ஈழநாடே
விருத்தியாகக் கைத்தொழில்கள் ஈழநாடே—நமக்கு
வேண்டியன செய்திடலாம் ஈழநாடே.

ஒற்றுமை குறைந்து நின்றாய் ஈழநாடே—பேதம்
ஓங்கிடக் குலங்கள் சொல்வாய் ஈழநாடே
முற்றிலும் சமத்துவத்தை ஈழநாடே—அன்பு
முறுகநீ வளர்த்தல்வேண்டும் ஈழநாடே.

## 3. பொன்னிலங்கை.

1. ஆழித் திரையுடைசூழத் தனிவள ஞாத்திகழும்
அணியுடையாள்—எங்கள்
ஈழத் திருமணி ஏழைத்தனந் தவிர்த்
தேறிச் செழித்தே இலங்குகவே.

2. உண்டுமுடுத்து முடற்பொலிவுற்றும்
உறைபவர்யாரும் ஒளிபெறவே—நன்று
மண்டலம் போற்றிட வானவர் நாடென
வாழ்வு மிகுத்து விளங்குகவே.

3. சாதி சமயப் பிணக்குகள் விட்ட
சமநிலை கொண்டு தழைத்திடவே—உயிர்
நீதி அறம் பண்புநேர்மை நல்லொற்றுமை
நீடிட நின்று துலங்குகவே.

4. சிங்களச் செல்வியும் செந்தமிழ்ப் பூவையும்
சிந்தைகளிப்ப மலர்ந்திடவே!— நன்று
மங்களக் காட்சி வழங்கி வழங்கி
மனத்தி னழுக்குகள் போக்குகவே.

5. ஆவியனைய சுடர்விளக்காம் என்றும்
ஆக்க மளிக்கும் அமிழ்தமுமாம்— இந்தப்
பூவிலெலார்க்கும் புகலிடமாம் நல்ல
புண்ணியத்தாய் பொன்னிலங்கையம்மா.

## 4. இலங்கை

பல்லவி

தெள்ளுதமிழ் சிங்களஞ் சிறந்தொளிரும் நாடு
செல்வ வளம் நன்குமலி சீரிலங்கை நாடு.

சரணம்

1. வெள்ளைநிற மாமுகில்கள் பள்ளிகொள நாடும்
விண்ணளவு மாமலைகள் எண்ணில்நடுக் கூடும்
துள்ளியிரைந் தேவிரைந்து தூயநதி யோடும்
சோலைகளும் சாலைகளும் தோன்றியெங்கும் நீடும். (தெ)

2. சங்கினொடு முத்தினைகள் தங்குதுறை சேரும்
தண்மைமலி தென்றல்நலந் தந்துதவழ்ந் தூரும்
பொங்குமழை யங்குபெயத் துங்கவள மாரும்
பூவுலகி லேபுலவர் போற்றுபுகழ் சேரும். (தெ)

3. கல்விமலி நல்லறிஞர் காட்சிநனி யுண்டே
காடுகளி லேகரியின் மாட்சியது முண்டே

சொல்லுமொளி நன்மணிகள் தோன்றுமிடமுண்டே
தூயபசு மேதிசுரந் தூட்டுகனு முண்டே. (தெ)

4. தேயிலை யிறப்பர்தெங்கின் செவ்வமயல் போக்கும்
தேடரிய கைத்தொழில்கள் தேடியுயர் வாக்கும்
தோய்கலைகள் யாவுமிங்கே தோன்றநனி சேர்க்கும்
தூயநெறி யால்மனிதர் சோர்வகற்றிக் காக்கும். (தெ)

## 5. ஈழத்தவர் பாரதத்தாயை மறக்கலாமா?

1. பாரத மென்றொரு சீர்பெறுநாடிந்தப்
பார்க்குமெய்ஞ் ஞானம் படைத்ததுகாண்—அந்தப்
பேரொளி நாட்டினை யிழுத்து மக்கள்
பிரித்து மொழிவது நன்றாமோ. (பாரத)

2. ஈழமந் நாட்டினை விட்டெந்த நாளில்
இலங்கிய தென்றிங் கியம்பிடுவாய்—கலை
வாழ்வை யளித்தவள் பாரதத் தாயென்று
வாழ்த்திடு வாய்தலை தாழ்த்திடுவாய். —(பாரத)

3. சைவமும் புத்தமுந் தண்ணளி வாழ்வையுஞ்
சாந்த நிலையையு மீந்தனவே—அந்த
மெய்ந்நெறி யீந்தவள் பாரதத் தாயென்று
விறுகொண் டேநின்று கூறிடுவாய். —(பாரத)

4. செம்மை யரசு நிலைத்தது மிங்குயர்
சீர்கள் முளைத்தது மெங்கிருந்தோ—பிறர்
நம்மை மதித்திடச் செய்தவள் பாரத
நங்கை யென் றென்று நயந்திடுவாய். —(பாரத)

5. ஓவியஞ் சிற்ப முதவிகின் றுளிக்
குயர்ந்த சிகிரியி னோவியமும்—எழில்
பாவிய பொல்ல னறுவையின் சிற்பமும்
பாரத வன்னை படைத்தனவே. —(பாரத)

6. செங்குளக் கோடனும் வன்னிமைச் செல்வரும்
செய்த பணிகள் சிறியனவோ—தமிழ்
மங்கையு மாரிய மன்னனு மீந்த
வளங்கள் வமுத்திடும் பான்மையவோ. —(பாரத)

7. சோழர் குருதியும் பாண்டியர் சோரியுந்
தோய்ந்து கிடந்தநிந் நாட்டினிலே—இதை
ஆழ நினைந்துநல் லார்வஞ் சிறந்துபண்
பார விளங்குவம் பேருறவே. —(பாரத)

## 6. தமிழ்த்தாயை வழுத்துவம்

செந்தமிழ்த் தாயை வழுத்துவம் வாரீரோ
சிந்தை மகிழ்ந்திடவே—எங்கள்,
முந்தையர் போற்றிய பைந்தொடி வாழ்விலே
மூத்தவள் பூவினிலே.

செம்மைநகை வந்தவள் மும்மையுந் தந்திடும்
செல்வி யெம் செந்தமிழே—பண்டை
இம்மையிலே நின்ற எம்மொழியும் வீழ
இன்று மிலங்கிடுவாள்.

சங்கமிருந்தவர் மங்கலப் பாட்டுகள்
தந்திட வுய்ந்தவளே—இன்றும்

கொங்கு முதிர்ந்து குலாமலர் போலெழில்
கொண்டு திகழ்பவளே.

அன்பு முதிர்ந்தவள் அறநிலை வாய்த்தவள்
அறிவினை யீன்றவளே—என்றும்
இன்பு விளைந்திடும் இன்னுயிராபவள்
எம்மனை செந்தமிழே.

இயலிசை நாடகம் என்ற மும்மகளிரை
யீன்றவ ளெம்மணியே—அவள்
இயலறியாமலே எருமைகள் போலநாம்
இயல்வது நாணமன்றே.

## 8. தமிழ்த்தாய்

பள்ளி யிற்கலை தேடி யடைந்தே
பாடி யாடிப் படித்திடு நல்லீர்
தெள்ளி யின்சுவை நன்கு வடித்தே
தேங்க வுண்டு திளைக்க வளிப்பாள்
உள்ளிலுள்ள முவந்து கிளர்ந்தே
ஊக்கங் கொள்ள வுணர்ச்சி வளர்ப்பாள்
எள்ளல்! எள்ளல்! செழுந்தமி ழன்னை
இனிய தாளை வணங்குதும் வாரீர்.

பண்டு தோன்று மொழிகளி லெல்லாம்
பழமை மிக்க செழுமணி நங்கை
என்று நல்ல விளமை செறிந்தே
இயற்கை யின்னெலி யேய்ந்து பொலிவாள்

கண்டு பாகு கனிச்சுவை தந்தே
கற்கு மாறு கவர்ச்சி யளிப்பாள்
கொண்ட பண்ணொடு பாடலினாலே
கோதி லாத மகிழ்ச்சி கொடுப்பாள்.

அல்லல் வந்தின் கடைந்திடு காலை
அவளின் செம்மை யமைந்திடு பாடல்
நல்ல நல்ல நயம்பொலி நூல்கள்
நாடி நாடி நயந்து படித்தால்
மெல்ல மெல்ல வுயிர்தனைத் தின்ப
வீட்டிலே களி யாட்டினின் மேவும்
பல்ல நூல்கள் தமிழிடை யுண்டு
பார்த்துப் பார்த்துப் பயன் பெறுவீரே.

## 9. தமிழ் அன்னை

1. சீராண்ட மொழிவளஞ்சால் செழுந்தமிழாம் அன்னை
தீஞ்சுவையா மோசைபயில் செல்வியெனும் அன்னை
ஏராண்ட சிலவெழுத்தால் இயங்கியொளி ரன்னை
இயலழகும் பொருளழகும் இயைந்துநிற்கும் அன்னை
நேராண்ட பெரும்புலமை நிலைபடைத்த அன்னை
நிலவுலகிற் பலமொழிக்கு நெறிவகுத்த அன்னை
போராண்ட மன்னர்பலர் புரந்துநின்ற அன்னை
பொலிவுடைய மலரடியைப் போற்றிடுவன் யானே.

2. மூன்றாகி முதன்மைபெறு முதுதமிழாம் அன்னை
முறைமைநிறை யறமலிய முழங்கிநிற்கும் அன்னை
சான்றாண்மை அன்புநலம் தனிவகுத்த அன்னை
தண்ணளியே தன்வடிவாய்த் தவம்பயிற்றும் அன்னை
தோன்றாத துணைமுதலின் தொடர்புடைய அன்னை
தொன்மைகண்டுங் கன்னியென்று தொழவிளங்கும் அன்னை
ஈன்றாளே போன்றெனக்கிங் கினிமைதரும் அன்னை
இலகுதிரு மலரடியை ஏத்திடுவேன் யானே.

3. உள்ளமெனும் கோயில்புகுந் துணர்ச்சிதரும் அன்னை
ஒளியதனா லுடல்பொலிய உயிர்வளர்க்கும் அன்னை
அள்ளியள்ளி நல்குநர்பால் அருள்சுரக்கும் அன்னை
அலக்கணுறும் போதறிவால் அகம்புதுக்கும் அன்னை
உள்ளவுள்ள என்புருக்கும் உறவுடைய அன்னை
உவகையெனும் பஞ்சணையில் உறங்கவைக்கும் அன்னை
கள்ளமிலா மெல்லியலாள் கனிந்ததமிழ் அன்னை
கவினுடைய மலரடியைக் கருதி மகிழ்வேனே.

4. எல்லையிட்டு நிலம்பொழுதின் இயல்வகுத்த அன்னை
எய்துகரு வுரிப்பொருளென் றிணங்கவைத்த அன்னை
இல்லறத்தை நல்லறமா இனிதுரைத்த அன்னை
இல்லாளோ டருக்துறவிங் கியம்பிவைத்த அன்னை
சொல்லுறுத்தும் வீரநெறி தொகுத்துவைத்த அன்னை
தூய்மைமலி வாழ்வியற்றுந்துறை விரித்த அன்னை
கல்விகற்கும் பிரிவுநிலை கழறுதமிழ் அன்னை
கற்பமையுந் திருவடியைக் கருதிமகிழ் வேனே.

## ச. விழாக்கள்

### 1. பொலிதரு தைப்பொங்கல்

1. மண்ணக மாரி பொழிந்திட வாவி
குளங்கள் வழிந்திடவே
வயலக மெங்கணும் அழகொழு குங்கதிர்
வளநெல் மிகுந்திடவே
பண்ணக மேவிய பறவை யினங்கள்
பறந்து தவழ்ந்திடவே
பசுமையி னேவிய மதிலுள(ம்) நன்று
படிந்து திகழ்நதிடவே
விண்ணக வீதியின் அண்ண லெனுங்கதிர்
வெயிலவ னொருவன்
விறலொடு வடமுக மாக வெழுந்தனன்
வெங்கதிர் கொய்திடு வோம்
எண்ணுகம் அன்னவன் இன்னருள்; நன்றி
இயற்றுகம்; இன்னடி சில்
இயைபுறு பாலொடு பொங்குகம் இன்புகள்
பொங்குக விங்கென வே.

2. செங்கதிர் வானவன் அன்றி நமக்கொரு
செல்வம் எனுழுத விற்
சேர்தரு மாடுழ வால்வரு பேறொடு
சீருறு பால்தந் தே
மங்கல வாழ்வை வகுத்தத னலம்
மாட்டினை வாழ்த்திடு வேம்;
மற்றத னுக்குமொர் பொங்கல் புதுக்குவம்
மன்னுயிர் யாவையுமே
இங்கொளி பண்புய ரன்பொடு பொங்கி
யெழுந்து குலாவுக வே

இறைமறு வாணமொ டுறுகலை வாழ்வி
னியைக்து நிலாவுக வே
பொங்குக பொங்குக புதிய கலத்தே
பொலிதரு தைப்பொங் கல்
பொங்குக பொங்குக புதிரது சொரியும்
புனிதப் பால்வள மே.

3. நெஞ்சு சுருங்கி யுடம்பு தளர்ந்து
நிலத்துயிர் வாடா மே
நீதி தளர்ந்தருள் மாறி மயங்கிடு
நிலையர சாளா மே
பஞ்ச மெழுந்து பசிப்பிணி தந்து
பழிக்கிட மாகா மே
பண்பற நெல்முத லாகிய பண்டம்
பகர்விலை யேறு மே
அஞ்ச மனத்தினர் தங்கள் நலத்தை
மதிப்பது சூழா மே
வாழ்வை வெறுத்திடு மேழை தழைப்பதில்
மாறினி நீளா மே
விஞ்சு களிப்பொடு பொங்குக பொங்கி
விளங்குக தைப்பொங் கல்
மிக்க நலத்தினை யொக்க வளித்து
விளக்க முறுத்துக வே.

4. அன்பே பொங்க அருள் பொங்க
அறத்தால் வந்த பொருள் பொங்க
இன்பே பொங்க நலம் பொங்க
இனிய கலையினெழில் பொங்க

அன்பே ரொழுக்கின் திறம் பொங்க
வாய்மை வீரம் தனி பொங்க
இன்பே பொங்கத் தைப்பொங் கல்
முகிழ்த்துப் பொங்கிப் பெருகுக வே.

## 2. பொங்குக நல்லறம்

1. கும்மியடி பெண்ணே கும்மியடி செல்வக்
கோகில மேநன்று கும்மியடி—பொங்கல்
செம்மை யடைந்துயர் செல்வம் பொலியச்
சிவன்கழல் போற்றியே கும்மியடி. (கும்)

2. வீர சுதந்திர வாழ்க்கையின் வெற்றி
விளக் கென்று தைத்திங்கள் மேவியதே—இன்று
சீருறு பொங்கல் செழித்திடக் கும்மி
தெளிந்து மகிழ்ந்திங் கடித்திடுவோம். (கும்)

3. சூரியன் தெற்கி லிருந்து திரும்பிச்
சுதந்தர நாடினன் கும்மியடி—ஞான
சூரிய னாகிய மாமுரு கன்துணை
தோன்றிய தென்றிங்கே கும்மியடி. (கும்)

4. நீத வளவயல் மீது செழுங்கதிர்
செவ்வி யடைந்தது கும்மியடி—அதை
ஓது கதிரவன் தந்தனன் பொங்கல்
உரிமை யவற்கெனக் கும்மியடி. (கும்)

5. இல்லமும் முற்றமும் தூய்மை செய்கோலம்
இயற்றுப் பேற்றென்று கும்மியடி—புதிர்
நல்ல கலத்தினிற் பாலொடு பொங்குதல்
நன்றிக்கு வித்தென்று கும்மியடி. (கும்)

6. மாடு முதலில் மனிதர்க்கு வாய்த்த
மகிழ்துணை யாமெனக் கும்மியடி—அதற்
கீடிலை மாடெனிற் செல்வமென் பார்பொருள்
ஈது நினைந்திங்கே கும்மியடி. (கும்)

7. பொங்குக நல்லறம் பொங்குக பேரன்பு
பொங்குக சீரென்று கும்மியடி—ஞானம்
பொங்குக தொண்டர் பொலிக தமிழ்வளம்
பொங்குக நன்றென்று கும்மியடி. (கும்)

## 3. பொங்குக பொங்கல்

1. பொங்குக பொங்குக பொங்கல்—இன்பம்
பொங்குக வென்றிங்கு பொங்குக பொங்கல்
பொங்குக பொங்குக பொங்கல்—பஞ்சம்
போயதென் றேநன்று பொங்குக பொங்கல்.

2. மங்கள வாழ்க்கை செழித்தே—ஏழை
மக்களும் செல்வ வளங்கள் மிகுத்தே
பொங்கொளி கொண்டு களித்தே—அன்பு
பூண்டு விளங்கப் பொலிந்து நிறைந்தே.

3. பொல்லாத தென்திசை போனன்—பானு
பூமி பொலியத் திரும்பிடலானன்
சொல்லா தவன் தந்த செல்வம்—வயல்
தோறும் விளைந்தது தாமணி கொள்வம்

4. எல்லாரும் இல்லத்தின் முன்னே—மெழுக்
கிட்டு வனப்புறக் கோலமுமிட்டே
நல்ல விளக்கினை யேற்றி—ஆன்பால்
நன்று புதிரொடு பெய்குவம் போற்றி.

## 4. தீபாவளி

ஏதுதீ பாவளி யுரைத்திடுமி னென்றென்னை
யினிதுவின விடுமன்பரே
இவ்வுலகில் நிகழ்கின்ற பண்டிகைகள் யாவுக்கும்
இயைபுதனி கூறுமுறையே
ஈதுக்கு மொருசெய்தி கூறிடுவ ரதுதன்னை
இன்பொடு குறிப்பனறிவீர்
நீதிசெய் யாதுலகு துன்பமெனு மிருணடு
நின்றயரு மாறு கொடிதே
நிறைவென்று கறைவாழ்வு தலைநின்று மடமொன்ற
நெடிதுவளர் நரகாசுரன்
நெறியற்ற செயல்கண்டும் அதிதியணி காதணியும்
நீரினிறை யரியகுடையும்
சீதமே யொள்ளளவுமில்லாது பறிசெய்த
தீதுகண் டுக்கண்ணனர்
செப்புமுய ரைப்பசித் தேய்பிறை பதின் மூன்று

சேர் கங்குல் வந்தணைவுறுஞ்
சீருறு சதுர்த்தசியினவனுடல் துமித்ததே
தீபாவளிக் கேதுவாம்,
ஓதுபா தகனவன் மாண்டவுட னெல்லோரும்
உவகையெனு மாழிமூழ்கி
உதயத்து நீராடியொப்பரிய கோடிக
ளுடுத்தியொளிர் தீபவரிசை
உறுமிரவி னுறையுள்தளி யோங்கவைத்
தனரின்றும்
உலகு கொண்டாடு மிதுவே.

# ரு. பெரியோர்

## 1. பாரதியார்

1 பாரத நாட்டினி லே — தமிழ்ப்
பாவை யளித்தமெய்ப் பாவல ஞகிய
பாரதி சீர்பா டி — அவன்
பாடிய பாடல் படித்து மகிழுவம் — (பார)

2. சின்னஞ் சிறுகுழந் தை — பிஞ்சுச்
சிந்தை யிலுந்தமிழ் வந்து குடிகொண்டு
மன்னும் படிகவி தை — மழை
வாரி யிறைத்திட்ட மாரி முகிலவன்! — (பார)

3. தாய்மொழி பேண மல் — அதன்
தன்மை யினிமை தகைமை யறியாமல்
மாய மொழிபயில் வோர் — தமிழ்
மாண்பு தெரிய மலர்மொழி கூறினன் — (பார)

4. அஞ்சுங் கலங்கின ராய் — மிக
அஞ்சி மடிந்திங்கு துஞ்சிய மாந்தரை
நெஞ்ச முரம்பெற வே — செய்து
நீசர் கொடுமை நினைந்திடச் செய்தனன் — (பார)

5. சாதித் தடிப்பினி லே — மிஞ்சித்
தாங்கள் கடவுளெனத்தலை தூக்கிய
பேதைக் குறும்பர்க ளை — உண்மை
பேசி யுணர்த்திய மாசற்ற மாமணி — (பார)

6. பெண்க ளடிமை யென்றே — வீணே
பித்து மொழிகள் பிதற்றிய பேர்களைக்
கண்க ளிரண்டிலொன் றைக் — குத்திக்
காட்சி கெடாதிரென் றாட்சி யளித்தனன்— (பார)

7. கண்ணன் கவிதையிலே — தேவி
காட்சியி லேரத* மாட்சியிலே பயன்
நண்ணு மியற்கையிலே — தூய
நாவின் செழுமை நயம்பெறக் காட்டினன். —(பார)

## 2. பாரதியார்

1. பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே — அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே (பாரதி)

2. இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ — உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ (பாரதி)

3. சந்தமிகுந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே — தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல். (பாரதி)

4. தாமரைக் காடிது நித்தலுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் — பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார் (பாரதி)

5. புத்தப் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை — மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம்பிறக்குது நேரினிலே. (பாரதி)

* ஞானரதம்

6. முல்லைகுறுஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் — பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கனி கூட்டிடல் கண்டிடுவாய். (பாரதி)

7. மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் — அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே. (பாரதி)

## 3. தமிழர் தவப்பயன்

1. தமிழர் புரிந்ததவப் பயனெனவே — செழுந்
தமிழில் விரிந்தசுவைத் திறனெனவே
அமிழ்த மியைந்தசிவக் கவினெனவே — ஒளி
அமைய மலர்ந்ததிருப் புலவரென்போம் — (தமிழர்)

2. நல்லைவளர் வேளினரு ளொன்று திரண்டேபண்டை
ஞானநிலை சோர்வடைதல் சீர்பெற நன்றே
நல்லை நகராறுமுக நாவலரென்றே — பெயர்
நல்கிவரு கல்விமலி ஞானியரென்போம் — (தமிழர்)

3. பாட்டினிற் கிடந்ததமிழ் பாசிபடர்ந்தே — மக்கள்
பார்த்திடமுடிந்திடாத பான்மை தெரிந்தே
ஏட்டினிற் கிடந்தவற்றை யெடுத்தெடுத்தே—தூய்மை
எய்த வெளி எய்தவைத்த ஏந்தலென்போம் —(தமி)

4. கோச்சைமொழி யாளுரை குலவுதல் கண்டே— உளம்
கொதித்துச் சிறந்தவுரை கூறுதல் கொண்டே
பச்சைமொழிப்பாலரொடுபண்டிதர்மென்றே—பயன்
பருகிடநல்லுரை படைத்தவரென்போம் — (தமிழர்)

5. அரசர் மதிக்கவளர் அரசரென்போம்—உயர்
அணி கொள்கவிஞர்புகழ் தலைவரென்போம்
விரவு பரசமய கோளரியென் போம்—தமிழ்
வீரமுழக்கஞ் செய்த விளக்கமென்போம் —(தமி)

6. நாவலரென்போம் சைவக் காவலரென்போம்—நெறி
நல்லவ ரென்போம் நேர்மை வல்லவரென்போம்
பூவிலறம்வளர்த்த புண்ணிய ரென்போம்—மிக்க
புனித ரென்போம் தெய்வ மனிதரென்போம் –(தமி)

## 4. நாவலர்

1. நல்லையெழுந்து நின்ற
ஞானத்தின் வள்ளலடி
நாவலர் பெம்மானடி—கிளியே
நமக்கெழில் தந்தாரடி.

2. சொல்வி லுயர்ந்ததமிழ்
சொல்வி யிருள்துடைத்த
தூயபுலவரடி—கிளியே
தொன்மை மறவாரடி (நல்லை)

3. அன்பு நிறைந்த சைவம்
அழகு மலிந்த சைவம்
அதனை வளர்த்தாரடி—கிளியே
அறிவு நிறைந்தாரடி.

4. இன்ப மிகுந்த சைவம்
இன்னுயிர் போன்ற சைவம்
இடையிலழியாமலே—கிளியே
இனிது புரந்தாரடி (நல்லை)

5. தண்டமிழ் சைவநலம்
தாழ்ந்திடல் கண்டுலைந்து
தான்வீறு கொண்டாரடி—கிளியே
தக்கவை செய்தாரடி.

6. ஒண்டமிழ் நாட்டிலவர்
உற்பவியாது விட்டால்
ஒன்றுஞ் சிறவாதடி—கிளியே
உண்மை பிறவாதடி.

7. அவரை மறக்கலாமா
அவர் சொன்ன வாறுசைவம்
அரியதமிழ் பேணுவோம்—கிளியே
அறங்கள் புரிந்திடுவோம்.

8. அவரடி போற்றிடுவோம்
அலங்கல் புனைந்திடுவோம்
அன்பூர வாழ்ந்திடுவோம்—கிளியே
ஐயங்கள் தீர்த்திடுவோம். (நல்லை)

## 5. திருவள்ளுவர்

1. பார்பூத்த மொழியுளெலாம் பழமைநனி கெழுமி
மென்மைபயின்று செஞ்சொற்
சீர்பூத்த தமிழ்த்தாயின் செவ்விமலி புலவருள்ளே
சிறந்தோனுகி
ஏர்பூத்த அறம்பொருளின் பென முப்பால்
வகுத்தாங் கனிருமைக்கேய்ந்த
நேர்பூத்த யாவுமெடுத்துரைத்த திருவள்ளுவன்
தாள் நினைந்துவாழ்வாம்.

2. உலவுமெண் பானெடு நான்கு மொழியினிலே
யுவந்து பெயர்ந்துலகுநோக்கி
யிலகு செழுங் கருத்திவன் போலெடுத்துரைத்தா
ரிலராமென் றினிது போற்ற
அலகில் நெறிதிருக்குறளென் றமைத்தெமக்குப்
பெரும் சிறப்பிங்களித்த தந்தை
குலவுமுழுமணி தமிழர் குலக்கொழுந்து
வள்ளுவன்தாள் குறித்து வாழ்வாம்.

3. வீட்டினிலே தூய்மை மலி விழுநிதிய மமைந்திருக்க
விரும்பாராகிக்
காட்டினிலே யலைந்து பொருள் காணவிழைந்திடுவார்
போற்கறையில்லாத
பாட்டுமலி திருக்குறளாம் பழையபொருட்
பேறிருக்கப் பயின்று வாழ்வில்
ஈட்டுவன ஈட்டாமற் புறந்தேடி மயங்கிடு
தலிழுக்கேயன்றே.

4. எண்ணரிய செழும் பொருள்களெளி
தெளிதென் றினிதுணர விசைக்குந்தூய
கண்ணனைய திருக்குறளைக் கருத்தை நனிதிருத்தி
நிற்கும் கடவுட்பேற்றை
தண்ணளிசால் பமைதிதரும் தவப்பொருளைக்
கல்லாத தமிழனென்பான்
மண்ணினிலே தானுமொரு தமிழனென
நினைந்திடுதல் வழுவேயன்றே.

## 6. காந்தித்தாத்தா

1. காந்தித்தாத்தா! எங்கள் காந்தித்தாத்தா! – அருட்
கடலாய் விளங்கிநின்ற காந்தித்தாத்தா! – நல்ல
சாந்தவடிவு கொண்ட காந்தித்தாத்தா! – பொறை
தாங்கி வளர்ந்துநின்ற காந்தித்தாத்தா!

2. ஏழைதுயர் தவிர்த்த காந்தித்தாத்தா! – கதர்
எங்கும் உடுக்கச்செய்த காந்தித்தாத்தா! – அன்பு
வாழ்வு சிறக்கவைத்த காந்தித்தாத்தா! – உன்
மலரடிபோற்றி நின்றோம் காந்தித்தாத்தா!

3. உண்மை வழியுரைத்த காந்தித்தாத்தா – எங்கும்
உரிமை விளங்கவைத்த காந்தித்தாத்தா! – தெய்வப்
பண்பு நிலைக்கவைத்த காந்தித்தாத்தா – உனைப்
பணிந்து வணங்கிநின்றோம் காந்தித்தாத்தா!

## 7. காந்தியடிகள்

1. பாரி னெழுந்து பிறர்தமக்குப்
பயனே புரிந்த பேராளர்
பகரின் ஒப்பார் இவர்க்கென்னும்
பண்பா டமைந்த பரிவாளர்;
சீரி னிருந்த பாரதத்தாய்
சிறைப்பட் டயர்ந்த தளையுடைத்துச்
செல்வப் பொலியுஞ் சுதந்திரமாந்
திருந்து முரிமை தந்தபிரான்;

2. நேரின் விளையும் வாய்மைக்கோள்
நிறுவி அஹிம்சைப் போர்தழுவி
நிறையார் செய்த குறையெல்லாம்
நெடிது பொறுத்த நிறையுடையார்;
கா்ரின் கருணை வடிவு கொண்ட
காந்தி யென்னுந் திருப்பெருமான்
கவினார் தூய திருவடிகள்
கருத்துட் கொண்டு வழுத்திடுவாம்.

3. உயர்ந்த குலமென் றெருசாரார்
ஒரு நாட்டின்கண் உடன் பிறந்த
உறவுக் குரியார் தமைக்குறைத்தல் ஒவ்வாதென்று
பணித்து வைத்தோர்
அயர்ந்த சிந்தையுடையார் செய் யநியாயங்கள்
சகியாராய்
அமைதி நிலவ அறிவு நிலவப் பதினேழு
நயந்த வுண்ணா நோன்பியற்றி நவைகள் தீர்த்த
நல்லடியார்
நடலையின்றி யொற்றுமையா நாட்டில் யாரும்
வாழ்கவென
வியைந்த நெறிக ளளித்த வள்ளல்
எளிய வாழ்க்கை காட்டிய கோன்
இனிய காந்தி பொன்னடிகளி தயத்திருத்தி
வழுத்திடுவாம்.

## 8. இராமநாதன்

1. பொன்பொலி யீழத்திலே—தமிழ்ப்
பூங்கொடி யோங்கிய புண்ணிய யாழ்ப்பாண
இன்புறு சோலையிலே—பூத்
திலங்கிய பூவே இராமநாதக்கோவே (பொன்)

2. தூய சிவச் சுடரின்—உயர்
தொன்மத வாழ்க்கை துலங்கவைத் தேவீட்டின்
வாயில் வகுத்து வைத்தாய்—யோக
மாண்பு மலிந்திட்ட வான்கரும் பேயையா (பொன்)

3. கல்விக் களஞ்சியமே—கலைக்
காட்சி யளித்தெங்கள் வீழ்ச்சி துடைத்திட்ட
செல்வத் திருமணியே—எந்தத்
தேயமும் போற்றிடுந் தெள்ளிய ஞானியே (பொன்)

4. நாவலர் போற்றிடவே—நடு
நாயக மாகி நறும் பொருள் கூறிய
பாவல் னேதமிழர்—பெற்ற
பாக்கிய மேயுன்றன் பண்பை நினைகுவம் (பொன்)

5. ஐம்பது நல்லாண்டு—பலர்
ஆங்கில ருந்தலை தாங்கினர் நாணிடச்
செம் பொருள் சட்டசபை—நின்று
செப்பி, கலஞ் செய்த அற்புத வீரனே (பொன்)

6. தண்டமிழ் சைவமிசை—உயர்
தத்துவ மாரிய மாங்கில மென்பன
ஒண்டொடி யாருமிங்கே—கற்க
ஒள்ளிய கல்லூரி ஓங்கிடச் செய்தனை (பொன்)

7. நின்னை மறப்பேமோ—உன்றன்
நேர்மையஞ் சீரமை நெறியறி வாதிய
தன்மை மறப்பேமோ—நின்றன்
தாளிணை யென்றுந் தலைமிசைச் சூடுவம் (பொன்)

# ௫. நற்பழக்கங்கள்

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை அவர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பல்கலைக்கழகம்)
களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

## காலைக்கடன்

1. பூக்கள் விரிந்தன மாமணம் வீசிற்று
புட்கள் ஒலித்தன சோலையிலே—இருள்
நீக்கிட ஞாயிறு கீழ்க்கடல் காணு
நிளங்கிளி யேதுயில் நீத்தெழுவாய்.

2. நல்ல மலகூடந் தன்னிற் கழிபொருள்
நாடி விரைந்து கழித்திடுவாய்—பின்னைப்
பல்லினை ஆலொடு வேம்புகொண் டேநன்று
பால்நிற மாக விளக்கிடுவாய்.

3. வேட்டி துவைத்தபின் தூய தண்ணீரினில்
மேலை விளக்கிக் குளித்திடுவாய்—எங்கள்
நாட்டினர் நெய்திட்ட நல்லவெள் ளாடை
நயந்துடுத் தேமயிர் கோதிடுவாய்.

4. அன்பொடு பைந்தமிழ்ப் பாடல்கள் பாடி
அறத்தின் கடவுளை வாழ்த்திடுவாய்—உயர்
இன்பமுங் கல்வியும் தூய வொழுக்கமும்
எய்தவென் றேதலை தாழ்த்திடுவாய்.

5. அன்பொடு தாய்தருங் காலையுணவை
அருந்திடு வாய்சிறி தாறிடுவாய்—நூலை
இன்ப முறக்கையில் ஏந்திடு வாய்கல்வி
ஏற்ற மடைந்திடக் கற்றிடுவாய்.

6. பள்ளி தொடங்கிடு நேரமு மாச்சுது
பார்த்து நடவலப் பக்கமதாய்—வீரப்
பிள்ளை யெனும்படி கல்வியைக் கண்ணெனப்
பேணி வளர்த்திடு தாமணியே.

## கடமைகள்

1. சோலையிற் பறவைகள் பார்—செல்வமணியே!
தூயகுரல் காட்டுதல்பார்—செல்வமணியே!
காலையில் விழித்திடுவாய்—செல்வமணியே!
கடன்கள் கழித்திடுவாய்—செல்வமணியே!

2. நாடிக் குளித்திடுவாய்—செல்வமணியே!
நல்லுடை தரித்திடுவாய்—செல்வமணியே!
தேடிக் கடவுளடி—செல்வமணியே!
சிந்தையி லிருத்திடுவாய்—செல்வமணியே!

3. பள்ளிக்கூடம் சென்றிடுவாய்—செல்வமணியே!
பாடல்பல பாடிடுவாய்—செல்வமணியே!
துள்ளித்துள்ளி யாடிடுவாய்—செல்வமணியே!
சோம்பலின்றிக் கற்றிடுவாய்—செல்வமணியே!

4. சின்னச் சின்னப் பாலரோடு—செல்வமணியே!
சிரித்துக் கதைகள் சொல்லு—செல்வமணியே!
வன்ன வன்னப்பூக்கள் கொய்வாய்—செல்வமணியே
மாலைகள் தொடுத்தணிவாய்—செல்வமணியே!

5. பச்சைப் பயிர் தழைக்கச்—செல்வமணியே!
பழந்தருங் கன்றுயரச்—செல்வமணியே!
மெச்சிடவே பட்டைகொண்டு—செல்வமணியே!
மெல்ல மெல்ல நீர்விடுவாய்—செல்வமணியே!

6. வேலையில்லை யென்று சும்மா—செல்வமணியே!
வீண்பொழுது போக்கிடாமல்—செல்வமணியே!
ஏலவேசீர்க் கைத்தொழில்கள்—செல்வமணியே!
இயைந்துநீ கற்றுக் கொள்வாய்—செல்வமணியே!

7. மெல்லிய விரல்களினால்—செல்வமணியே!
வெள்ளை நூலை நூற்றுக்கொள்வாய்—செல்வமணியே!
அல்லலின்றித் துணிநெய்யச்—செல்வமணியே!
ஆசையொடு நீபழகு—செல்வமணியே!

8. ஆரையும் அடித்திடாதே—செல்வமணியே
ஆரையும் நீ ஏசிடாதே—செல்வமணியே!
பாரிலெவ் வுயிர்களையும்—செல்வமணியே!
பகைத்துக் கெடுத்திடாதே—செல்வமணியே!

9. ஆசிரிய ரெங்களுக்குச்—செல்வமணியே!
அன்புடைய நண்பரறி—செல்வமணியே!
கூசவேண்டா அஞ்சவேண்டா—செல்வமணியே!
குழந்தையென்று சோரவேண்டா—செல்வமணியே!

10. உன்னைப்போலே நல்லபிள்ளை—செல்வமணியே!
ஒருவரு மில்லையறி—செல்வமணியே!
பொன்னைப்போலே பூவைப்போலே—செல்வணியே
பூமியிலே நீசிறந்தாய்—செல்வமணியே!

---



---

## 3 உயிர்கள்மேல் இரக்கம்

### ஆனந்தக் களிப்பு

1. அன்பு மிகுந்திட்ட பிள்ளாய்!—உயிர்
அத்தனையும் நம்மை ஒத்தன கண்டாய்
என்பு தசை கொண்டதேகம்,—அவை
யாவும் கொண்டேபுவி யுலாவும்— (அன்பு)

2. ஊர்ந்து திரிபவை கோடி,—வானில்
ஓடிப் பறப்பவையோ பல கோடி,
நீந்தித் திரிபவை கோடி,—இந்த
நிலத்தில் நடப்பவை பற்பலகோடி— (அன்பு)

3. உன்னைப் போலேயுண வுண்ணும்;—அவை
உன்னைப் போலேகளை வந்தாலுறங்கும்;
உன்னைப் போலேயின்ப துன்பம்—யாவும்
உண்டவை மேலருள் கொண்டிட வேண்டும் (அன்பு)

4. உன்னை ஒருவ ரடித்தால்—கல்லால்
ஓங்கி யெறிந்தா லுதைத்தால் மிதித்தால்
என்ன வருத்த மடைவாய்?—அதை
எண்ணி யுயிர்களுக் கேதஞ் செய்யாதே—(அன்பு)

5. பறவைகளைப் பிடிக்காதே,—அவை
பாடிக் கூடியாடும் பண்பைக் கெடாதே
பறவைகளின் கூட்டை வீணே அந்தோ!
பாழ் படுத்தாதே பயனில்லைக் காணே— (அன்பு)

6. வண்டுகள் வண்ணாத்திப் பூச்சி—தும்பி
மாடாடு யாவுக்கும் கேடு சூழாதே,
அண்டின ரைக்கெடுக் காதே,—ஏழை
ஆனோரை வருத்தி அலைவு செய்யாதே— (அன்பு)

7. யாருக்குந் தீங்குசெய் யாதே,—எளியர்
என்று நீ வாட்டில் இறை பொறுக்காதே
பாருக்குள் ஒற்றுமை வேண்டும்,—யாரும்
பயனொடு வாழ நயஞ் செய்ய வேண்டும்— (அன்பு)

8. அழுக்காறு சற்றுங் கொள்ளாதே—இன் சொல்
அன்பொடு பேச மறந்து விடாதே
பழக்கங்கள் நல்லன வேண்டும்;—பரன்
பாதத்தை நாளும் பணிந்திட வேண்டும்— (அன்பு)

## 4 தூயவுள்ளம்

மனத்தினிலே யழுக்காறு நிறைத்துமிகக் கொடுமையெலாம்
மறைந்து செய்யும்
இனத்துடனே கூடாதிர்! எளியர்களை வாட்டாதிர்!
ஏழைகட்குத்
தினைத்துணையு முதவாத சிறுமைமலி வாழ்க்கையிலே
சென்றி டாதிர்
அனைத்தினையும் புரக்குமுயர் ஆண்டவனை மறவாதிர்!
அருள்கெ டாதிர்!
உள்ளத்தே தாராள உணர்ச்சியின்றிப் போதுமென்ற
வுவகையின்றிக்
கள்ளத்தே மனம் புகுத்தி யாண்டவனை வழிபடலாற்
கவினிங் குண்டோ?
எள்ளற்கா(ம்) நிலைவிடுத்துத் தூயமெனு(ம்) நிலையடைந்திங்
கிறுமாப்பின்றி
அள்ளற்றாமரை யெனவிவ் வவனியிலே மலர்ந்துநனி
அணிகொள்வீரே.

## 5 அடக்கம்

1. கல்வி கற்றுச் சிறந்தவ ராயினென்
காட்சி பெற்றுத் தெளிந்தவ ராயினென்
நல்ல நூல்பல நாட்டுவ ராயினென்
ஞாலம் போற்ற வுரைசொல்வ ராயினென்
வெல்லும் பாடல் விளம்புவ ராயினென்
வேதமுற்று மறிந்தவ ராயினென்
சொல்லு மன்பொ டடக்கமிங் கில்லரேல்
தூய்மை யற்றவ ராய்விடு வார்களே.

2. கல்வி மட்டு மிருந்துவிட் டாலவர்
கடவுட் செம்மையைக் கண்டவ ராவரோ
பல்ல பட்டம் படைத்துவிட் டாலவர்
பரவு மெய்ம்மையின் பண்புடை யார்களோ
சொல்லி லேசெயல் தம்மிற் செருக்குவார்
தூய சான்றவ ராய்விடல் கூடுமோ
கல்லு நெஞ்சங் கரைந்து படிந்தவர்
கவினுக் கீடிலைக் காசினி மீதிலே.

## 6 கல்விதேடுக

1. கல்வி தேடிக்கொள் கற்றவர் நண்பினைக்
கருதி நாடிக்கொள் கல்வியிங் கின்றியே
"நல்ல னென்னவென் நாட்டுக் குழைப்பனே
ஞானத் தால்மதந் தன்னை வளர்ப்பனே
வல்லன் யான்" எனவாய் வந்தகூறுதல்
மாண்பு தந்திடு மாறிலை மேலவர்
புல்ல னென்றிகழ் வார்மின் னும்போர்வையாற்
போர்த்த தோர்மரம் போலுமென் பார்களே.

2. புலியின் தோலினைப் போர்த்தொரு கர்த்தபம்
புக்க தென்னப் புறப்பொலி வொன்றினல்
மலையு மாறுசில் லாங்கில வார்த்தைகள்
வழுத்தி நின்று மயக்கிட லாகுமோ?
கலைநி ரம்பிய மேலவர் முன்புபோய்க்
கலக லென்று நகைத்திட லாகுமோ?
நிலைபெ றுங்கலை குற்ற மிலாக்கலை
நேடி வாழுதல் நேரிது காண்மினே.

3. பட்டமெப்படி யாயினும் பெற்றிங்கு
பலவுங் கற்றன னென்பதில் மேன்மையோ?
இட்ட மிங்குத் தினந்தினங் கற்றலால்
ஏற்ற மேவிய பேரறி வெய்தலாம்
விட்டு நற்கலை வீரங்கள் மாத்திரம்
மெத்த மெத்த விளம்பி லிகழ்ச்சிகாண்
தொட்ட நேரமும் காட்சியிற் கேள்வியில்
தோய்ந்து வாழ்பவர் மேலவராவரே

4. உள்ள மீதினில் உண்மை யொளி கண்டால்
உரையி லன்னது தோன்றுமென் றனெங்கள்
வள்ளல் பாரதி; உள்ளம் விரிந்திட
வானம் சென்றும் வளர்ப்பம் அறிவினை
கள்ளம் பொய்மை கபடு பொறாமைகள்
கடுமை யோடகங் காரங்கள் போக்கியே
மெள்ள நன்மை அமைதியை மேலையோர்
விழைவை மேற்கொண் டறிவை விளக்குவாம்.

## 7 குடிவெறியின் கேடு.

1. ஒழுக்கத்தை யுவக்கின்ற மணியே—அன்போ(டு)
உரைப்பதைக் கேள்மிக்க விருப்பாய்க்கண் மணியே
ஒழுக்கமே உயர்குல மாக்கும்—நல்ல
ஒழுக்கமுள் ளாயெனில் உனைத்தெய்வம் காக்கும்.

2. சாராயம் கள்குடிக் காதே—நல்லோர்
தாம் வெறுப் பார்மதிப் பைக்கெடுக் காதே
ஆராய்ந்து பார்குடி யாலே—பலர்
ஐயோ வறியவ ரானார்மண் மேலே (ஒழுக்)

3. வீட்டார் துணிமணி யெல்லாம்—குடியன்
விற்றே வெறிப்பொருள் பெற்றே குடிப்பான்
கேட்டாலவ் வீட்டாருக் கடிப்பான்—புத்தி
கேளாது பெரியோர்க ளொடு சண்டை பிடிப்பான்
(ஒழுக்)

4. தெருத்திண்ணை களில் விழுந் திடுவான்—அரையிற்
சீலை யவிழ்ந்தாலும் தெரியாம லுழல்வான்
கருத்தொன்றும்தெளிவின் றியலைவான்—கண்டோர்
காறிக் காறித்துப்பக் கதைபகர்ந்திடுவான் (ஒழுக்)

5. உடம்பைக் கெடுத்திடும் விரைவாய்(ப்)—பிணி
உற்றால் அகலா துறைந்திடுந் தெரிவாய்
திடம் பெற்று வாழ்வதை விழைந்தால்—மதுவைத்
தீண்டாதேதீண்டாதேசிறந்தோங்கநினைந்தால் (ஒழுக்)

6. பெற்ற தாயும் வெறுத்திடுவாள்—எனக்குப்
பிள்ளை நீ யல்லை பிசாசென்று புகல்வாள்
சற்றுஞ் சிறப்பில்லை மணியே—குடி
சாராது வாழ்மிக்க சீராய்க்கண் மணியே (ஒழுக்)

## எமது வருங்காலக்கடன்.

1. நிறைவுறக் கலைபடிப்போம்—எவரும்
நிகரிலை யெனும்படி தேர்ச்சி பெறுவோம்
அறிவினைப் பெருக்கிடுவோம்—எம்மை
அடக்க வருபவனை மடக்கிடுவோம். (நிறை)

2. பிறபிற நாடு செல்வோம்—பலகலை
பேணி மிகப்பயின்று மீண்டு வருவோம்
திறமுற நம்மவர்கள்—தொழில் செயத்
திக்குகள்தோறுந்தொழிற்சங்கமமைப்போம். (நிறை)

3. எவ்வகைத் தொழில்களிலும்—நாமே
ஏற்ற முடையமெனக் காட்டிடுவோம்
செவ்விய வழிகளினால்—பெரும்பணம்
தேடிப் பிறர்க்குதவி செய்து மகிழ்வோம். (நிறை)

4. சிறிய ரென் றெவர்களையும்—வீணே
சீறிக் கெடுத்திடாமற் சேர்த்து வளர்ப்போம்
அறிவை யெவர்க்கும் அளிப்போம்—எமக்குள்
அழுக்காறகன் றதென முரசடிப்போம் (நிறை)

5. கொடுமைகள் தவிர்த்திடுவோம்—பழைய
குருட்டு வழக்கங்களை யொழித்திடுவோம்
மிடிமையை யிங்காட்டில்—வேரொடு
விலக்கிடுவேம் அன்பு துலக்கிடுவோம் (நிறை)

6. ஒற்றுமை தழுவிடுவோம் பகைமை
ஒழித்திடுவோம் பண்பு வளர்த்திடுவோம்
மற்றவர் நமைப்பார்த்தே—வியக்க
மனநிலை பெரிதென உயர்த்திடுவோம். (நிறை)

7. உடல் வளம் உறுதி பெற்றே—அறிவால்
உயிர்வளம மிக மிக உயர்வு பெற்றே
திடமுடன் ஏழைகளுப்—கலையொடு
தெளிவுற மகிழ்வுறச் செய்துதிகழ்வோம். (நிறை)

# ௬. தொழிலும் கல்வியும்

# 1. வெறுங்கல்வி

1. கல்விகற் றேமெனச் சொல்லிப் பிழைப்பின்றிக்
காலங் கழித்துத் தெருத்தெருவாய்
பலவித வீணுரை பேசித் திரிபவர்
பயன் தெரியாரன்றே கண்மணியே.

2. வேலை கிடைத்திட வில்லையென் றின்னவர்
வீட்டுக்குப் பட்டடை யாயிருந்தால்
ஓலமிடும் பெற்ற தாய்தந்தையர் துயர்
ஓங்கி வருந்தாதோ கண்மணியே.

3. அந்த நாள் போன்றெழுத் தாளரென் றேயரசாட்சி யலுவ லகப்படுமோ
இந்த நாளில் வெறுங் கல்வியினாற்பயன்
எய்த விலைக்கண்டாய் கண்மணியே.

4. மன்றத்து வாதிகள் மெத்தவுண்டு மேல்
மருத்துவர் கூட்டமும் மெத்தவுண்டு
இன்றைக்கு மக்களை கற்ப தெதற்கென
எண்ணி நீ பாரெங்கள் கண்மணியே.

5. வேற்றுநா டேகிப் பலப்பல கைத்தொழில்
வித்தை படித்திவர் மீண்டு வந்தே
ஆற்றல் மிகுந்திடக் கூட்டுறவுத் தொழில்
ஆற்றிடல் நன்றன்றே கண்மணியே.

6. இலங்கையிற் காடுகள் மெத்தவுண்டு—பயிர்
இன்பொடு செய்யும் வகைகள் உண்டு
கலங்குதல் இன்றி நயந்து திருத்திடில்
காணலாம் நற்பயன் கண்மணியே.

7. பருத்தி விதைத்து நற்பஞ்செடுத் தூர்தொறும்
பள்ளிகள் வீடுகளிற் பரிந்தே
அருத்திகொள் மாணவர் அன்னையர் நூற்றிடில்
ஆயிரம் மிஞ்சாதோ கண்மணியே.

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாலம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

8. நூற்ற நூல் கொண்டு தறிகளி லேபல
நுண்ணிய சேலைகள் செய்து கொண்டால்
ஆற்றலுங் கூடிடும் சோம்பலு மோடிடும்
ஆருக்கும் நன்றன்றோ கண்மணியே.

9. தாய்மொழிக் கல்வியை கற்பதற் குப்பணம்
தான்மிக வேண்டிய தில்லை நன்றாய்த்
தாய்மொழி நாடிப் பலப்பல நற்றொழில்
தாம்புரிந் துய்குவை கண்மணியே.

10. தீப்பெட்டி யோடு சவர்க்கா ரந்திரி
தீதறு காகிதஞ் சீர்விளக்கு
வாய்ப்புறு பின்ன லெனப்பல செய்து
வறுமை தொலைத்திடு கண்மணியே.

11. என்னையா னெந்தப் பொழுதினுங் காக்க
வியன்றவ னென்னக் கலைபடிப்பாய்
பின்னை யொருவருதவி யிலாது
பிழைக்க வகை தெரி கண்மணியே.

## 2. ஊர்தோறும் கைத்தொழிற் சங்கம்

1. கைத்தொழிற் சிறப்பிலே களிக்கிறார் பிறத்தியார்
கறுமமோவி தெங்கள் நாடு கவலைகொண்டு வாடுது
சொத்திலாத ஏழைமக்கள் துடிதுடிப்பர் பசியினல்.
சோறிலாது கூழிலாது சோர்வுகொண்ட பிள்ளைகள்
செத்தலாகி வெற்றெலும்பு தெரியுமேனி வறியராய்ச்
சிந்தை நொந்துகந்தையோடுதிரிதலென் றுதீர்ந்திடும்
எத்தினும் ஒத்துவாழும் இன்பமற்ற மாந்தரீர்!
ஈதுநீக்கி டாதுநா மிருத்தலீன மீனமே.

2. பிறர்மதிக்க அறிவுபெற்ற பெரியமென்றும் நாங்களே
பிரமனுக்கும் முறைவகுக்கும் திறலமென்றும் பேசுவீர்
அறிவுமுற்றும் அருளினர்தம் அறமிருந்த நூலெலாம்
அங்குமிங்கும் நன்றுதேடி அவைபடித்து வாழ்வீர்
சிறியரென்று கைவிடாது தேடிநாடி யூர்தொறும்
சென்றுசென்று சங்கமென்று நன்றுகூட்டி யன்னவர்
அறிவினோடு தொழில்பெருக்கி யழகினோடு வாழநல்
லருளினோடு பணிகுயிற்றல் அருமைமேவு செயலரோ.

3. சிங்களத்திலின்று கைத்தொழிற்சிறப்பை நோக்குவீர்!
செம்மைபெற்றபெரியரங்கு செய்தசீர்கள் நோக்குவீர்!
நங்களுக்கு ஞயர்வுதேட நம்பிமார்க ளில்லையோ?
நாலுபேர்க்கு முன்னெழுந்து நாவசைத்தல் கூடுமோ?
எங்களுக்கு ஞயர்வுதாழ் வெடுத்தியம்பி யென்பயன்?
ஈதுபேச வித்தநாளி லேதுநாண மில்லையோ!
மங்களச் சிறப்பினோடு நங்கள் நாடு மேலுற
வம்மினோ விரைந்தெழுந்து வறுமையோடு மோடுமே.

---

## 3 கைத்தொழில்

1. மட்டவிழ் சோலைசூழ் வளப்ப மிகு மிலங்கை
மாணவரே தொழில் தேடிடுவோம்
மாணவரே கைத்தொழில் தேடிடுவோம்
இட்டப் படிநமக்கு வேலைகிடைத்திடுமோ
இனியாயினு முழவை நாடிடுவோம்—அன்பீர் (மட்)

2. கல்வி கல்வியெனவே கற்றாலும்—பயன்
காணமுடிந்திடுமோ முற்றாலும்
எல்லோரும் பட்டம் பெற்றால் எங்கே தொழில்
கிடைக்கும்
இதனை நினைந்து சற்றே நோக்கிடுவீர்—அன்பீர்-(மட்)

3. பள்ளியி லேகைத்தொழில் படித்துக் கொள்வோ-
மெனிலோ
பள்ளி விடும்போ தெம்மைக் காத்திடுவோம்
துள்ளித் திரிந்து பின்னே சோம்பிக் கிடக்கலாமா
துணிந்து தொழிற்கலையைச்சேர்த்திடுவோம்—அன்பீர்
(மட்)

4. வெறிக்கப் பழகவேண்டா குடிக்கப் பழகவேண்டா
வீணர்களென்றுபெய ரெடுக்க வேண்டா
மறிக்க மறிக்கப்பழி வழிக்குளலைந்து சும்மா
மயங்கித் திரிந்தறிவைக் கெடுக்க வேண்டா-அன்பீர்
(மட்)

5. அகங்கரித்திடவேண்டா அழுக்காறுகொள்ளவேண்டா
ஆகடி யங்களொன்றும் புரிய வேண்டா
சுகங்கெடுத் திடவேண்டா துயர்பெருக்கிட வேண்டா
துட்டருடனே கூடித் திரியவேண்டா-அன்பீர் (மட்)

6. காட்டைநா டாக்கிடுவோம் காவயல் சேர்த்திடுவோம்
கனிந்து பயிர்த்தொழிலை மேற்கொள்ளுவோம்
நாட்டுக்கு வேண்டுந்துணி நாங்களே நெய்திடுவோம்
நயந்து வறுமைப் பிணி நீக்கிடுவோம்-அன்பீர் (மட்)

## 4 தொழிலாளர்

1. பஞ்சம் வராமற் பசியணுகாமற்
   பயிர்செய் பவனெங்கள் தெய்வமையா-அவன்
நெஞ்சம் சுருங்கிடில் யாரிங்கு வாழுவர்
   நித்தமும் போற்றிட வேண்டுமையா.

2. மாலுமி தோணியுங் கப்பலுமோட்டி
   மறுமறு தேயங்கள் கண்டவன்காண்—அவன்
போல வணிகம் பெருக்கினர் யார்? அச்சம்
   போக்கி விளக்கிய வீரனையா.

3. பண்டைத் தமிழர்கள் கப்பலிலேறிப்
   பலப்பல தேயங்கள் கண்டுவந்தார்—என்று
கண்டதெல் லாமிந்த மாலுமி வாழ்வின்
   கனத்தை விளக்குதல் காணுமையா.

4. கொல்லருந் தச்சரு மில்லையென்று லென்ன
   கூடும்? நமக்கிங்கு வீடுமில்லை-மேலாய்ச்
சொல்லு முழவுச் சிறப்புமில்லை அவர்
   தூண்டி வளர்த்தவர் வாழ்வையையா.

5. மானத்தை காத்திங்கு மக்கள் வளர்ந்திட
   வண்ணவண் ணத்துணி நெய்திடுவோன்—உயர்
வானத் தவரிலும் மேலவ னமென
   வாழ்த்தி மகிழ்ந்திட வேண்டுமையா.

6. அழகுக் கலையை வளர்த்திட்ட சிற்பனுக்
காரிகை ராகுவர் சொல்லுமையா—நல்
லழகுக் கிருப்பிட மாகிய ஓவியன்
அற்புத வாழ்க்கை சிறந்தையா.

7. நல்ல கலங்க ளியற்றி யளித்தவர்
நாடு குயவர்கள் தேருமையா—அவர்
வல்லமை யின்றெனிற் பச்சுண வேதின்று
வாழ்வில் விலங்கினை யொப்பமையா.

8. தாதுப் பொருளிற் கலங்கள் விளக்குகள்
தந்து சிறந்தவர் கன்னரே—அவர்
ஒகத் தரும்புக ழுள்ளவ ராமென்
றுரைத்தலி லேபிழை யில்லையையா.

9. வண்ணரிந்த வுலகி லிலையெனில்
வண்மை யெமக்கிங்கு வாய்த்திடுமோ—இங்கு
கண்ண ரப்பல ருத்தை யுடுத்தவர்
காறியுமிழ்ந்திட நாணிடுவர்.

10. உண்மையில் நாங்க ளுயர்ந்து விளங்க
உவந்து பணிசெய்வோர் வண்ணரே—செல்லட
பெண்மட வாரின்று பேர்பெற்று வாழ்ந்திடப்
பேணி யருள்பவர் வண்ணரே.

11. தோட்டி மனங்கொண் டழுக்கை யெடானெனில்
தூய்மை வளர்வதிங் கெவ்வாறே—அவன்
காட்டி லரும்பணி செய்பவ னென் றிங்கே
நன் றுமதித்திட வேண்டுமையா.

12. பொல்லா வழுக்குகள் போக்கிநோய் செய்யும்
புழுக்கள் கிருமிகள் தோன் றாமல்—தோட்டி
நல்லோ னதலிற் செய்து மகிழ்கிறான்
நாமதைப் போற்றிட வேண்டுமையா.

13. மக்களெல் லாரும் ஒருகுலங் காணெங்கள்
வாழ்வி லுறுதுணைச் செல்வர்கள் காண்—
சொல் லும்
எக்குலத்தாரும் இழிந்தவ ரல்லர்
இதையுணர்ந் தாற்பகை யில்லையையா.

## 5 உழவு

1. காடு கரம்பை யெல்லாம்—திருத்திக்
களனிக ளாக்கிடு வோம்
நாடி யெரு விடுவோம்—விதைத்தங்கே
நன்று யுழு திடுவோம்.

2. மாமழை பெய்த வினல்—முளைகொண்டு
மண்ணைத் துளைத்து வரும்
பூமி யழ குறவே—செழுமை
பொருந்தி வளர்ந் துயரும்.

3. பச்சைப் பயி ரம்மம்மா—வெளியெங்கும்
பார்த்திடுங் காட்சி யம்மா.
மெச்சிடும் விண்ண ழகும்—இதற்கிணை
மேவுத லில்லை யம்மா.

4. நெல்லுப் பயிர்க ளெல்லாம்—தண்ணீரின்மே
நிமிர்ந்து தோன் றுதம்மா
புல்லுக் களைப்பறிப் போம்—இடைவெளி
போதியது கொடுப் போம்.

5. நாற்றுப் பிடுங்கிடுவோம்—தள்ளித்தள்ளி
நட்டு மகிழ்ந்திடுவோம்
சேற்று நாம் பார்த்ததிலும்—இன்றுமிக
நீண்டு தெரியு தம்மா.

6. சூம்பிய தாளினைப் பார்—முற்றிமுற்றி
துள்ளி யெழும்பு தம்மா
பாம்புசூல் கொண்டது போல்—அதனு
பருத்துத் தோன் று தம்மா.

7. மடல் விரிவது போல்—தலைகள்
மலர்ந்து விரியுதம்மா
சூடலை கக்கு தம்மா—நிமிர்ந்து
குலுங்கிச் சிரிக்கு தம்மா.

8. காய்த்து மணிக ளெல்லாம்—பால்முற்றிக்
கதிரெனச் சாய்ந்த தம்மா
வாய்த்து வெளுத்த தம்மா—சரிந்து
வளத்திற் படுத்த தம்மா.

9. கூனரி வாளெடுப் போம்—குனிந்து
குனிந்தரிந் தேகுவிப் போம்
வானுறப் போர்தொடுப் போம்—பிரித்து
மலரப் பரப்பிடு வோம்.

10. நற்பொலி நாயக ரைப்—பிணைத்து
நடத்தி யுழக்கிடு வோம்
நெற்பொலி சேர்த்திடு வோம்—வைக்கோலை
நிலத்திற் குவித்திடு வோம்.

---

## மின்சாரம்

1. சீமையிலே ஜர்மன் பூமியிலே பல
தேயத்தி லேசொல்லுஞ் செய்தி யெல்லாம்—உடன்
நாமறியும்படி கொண்டு வருகுது
நல்ல பெரும் பொருள் மின்சாரம்.

2. நாட்டினி லேநடு வீட்டினிலே கொடுங்
காட்டினி லேமலை மேட்டினிலே—நின்று
சேட்புலத் தார்சொலும் பாட்டுரை நாடகம்
கேட்டிடச் செய்யுது மின்சாரம்.

3. செங்கதிர் வெண்கதிர் பொன்கதிர் நீலச்
செழுங்கதிர் பற்பல பூத்திடவே—மின்னி
யெங்கு மொளிசெய்து மங்களக் காட்சி
இனிது பரப்புது மின்சாரம்.

4. கண்ணுக்கு முன்னின்று பேசியுமாடியுங்
காட்டுதல் போல நிழற்படத்தே—பல
எண்ணற் கரிய நற்காட்சியுங் கேள்வியு
மீந்து விளங்குது மின்சாரம்

5. வான மளாவிய மாமலை தன்னை
மடமடவென்று துகளாக்கி—மட்டம்
ஆனவழியென வாக்கிவிடுகு
தரும் பொருளாகிய மின்சாரம்.

6. வெப்பமிகுந்திட்ட காலத்திலே தண்மை
மெத்த வளிக்குது மின்சாரம்—உண்ணும்
எப்பழமும் பொருளும் பழுதெய்தா
திருந்திடச் செய்யுது மின்சாரம்.

7. வண்டியை யோட்டுது வங்கமியக்குது
வாரியிறைக்குது நீரை யெல்லாம்—ஆடை
கொண்டு வெளுக்குது மாவையரைக்குது
குப்பை கொழிக்குது மின்சாரம்.

8. மாமழை யற்ற வெறுந்தரை சோலை
வயல்கள் பொருந்தி மலிந்திடவே—மாரி
சோவெனப் பெய்திட சோர்வறச் செய்யுது
சோறு சமைக்குது மின்சாரம்.

# எ. பொது

## யாழ்ப்பாணப் புதுமை

சங்கை மிகுத்த தமிழரே!—அறம்
சாலப் படித்த தமிழரே!
எங்குஞ் செழுந்தமிழ் நூல்களில்—நீதி
ஏறிடக் கண்ட தமிழரே!

யாழ்ப்பாண மென்றொரு நாட்டிலே—குடி
யேறி விளங்குந் தமிழரே!
யாழ்ப்பாணத் தார்மிக நல்லவர்—கல்வி
யெய்தி யவரென்ற சொல்லெங்கே?—சங்

சோற்றினை மாற்றினுங் கள்ளினை—விடாத்
தூய பழக்கத்தை நண்ணியே
நாற்றிசை யும்பழிச் சொல்லினை—நன்கு
நாட்டிவிட்டாலது நல்லதோ?—சங்

களவு கொலைகள் மலியவோ—கன்னி
கையைக் குறைத்து நலியவோ?
அளவற்ற தீமைகள் பல்கவோ—அந்தோ
அழிவுக்குக் காலினை யல்லவோ—சங்

நித்திரை செய்திடும் வேளையில்—அறம்
நீடிய நாட்டினில் மாலையில்
கத்தரிக் காயை யரிதல்போல்—காசு
களவு செயத்தலை கொய்யவோ? சங்

காது கழுத்தணி கையணி—பூண்டு
காவ லிலார்வழி போகையில்
பாதகர் சூழ்ந்து பறித்தலைக்—கேட்டுப்
பக்கென்று நெஞ்சம் பதைக்குதே—சங்

தாலி யணிந்திட்ட மங்கையர்—வயல்
தன்னில் தனிநின்ற வேளையில்
சால விரைந்து மோட்டாரிலே—வந்து
தாலி பிடுங்கிடக் கேட்டிரோ—சங்.

நன்மைக்குந் தீமைக்கு மேற்றதோர்—பயன்
நாடு மெனுங் கொள்கை மாற்றியே
வன்மை மலிநெஞ்சு நாட்டியே—ஐயோ
வாட்டுகிருர் தங்கள் நாட்டையே—சங்.

பாதக நெஞ்சு படைத்தவர்—அன்பு
பள்ளிகொள் நாட்டினில் வாழுவோ
ஓதிடு வீரே தமிழரே—சிறி
தூன்றி நினைப்பீர் தமிழரே—சங்.

கொள்ளையடிப்பவர் மாறியே—நல்ல
கோலங் குணங்கொண்டு தேறியே
உள்ளத்தி லேயரு ளூறியே—வாழ
ஓதிடு வீர்பல நீதியே.

## நாம்

1. அனலிட்ட மெழுகினைப்போல்—குழைந்திடும்
அன்பினுக் கேயாங்கள் வசப்படுவோம்
மனதினிற் கறுப்பு வைத்தே—ஒடுக்கிடும்
வஞ்சரை யெள்ளளவும் மதித்தல் செய்யோம்

2. ஒருவருக் கொருநீதி—கூறிடும்
உலுத்தரைக் கருத்தினி லுதைத்திடுவோம்
கருவினிற் சிறுமையுள்ளார்—பெருந்தன்மை
கட்டுரைத்து நேர்மை குன்றிற் கிட்டவு மாட்டோம்.

3. தம்மொடு பயின்றிடுவார்—திருட்டுத்
தன்மை பொய்ம்மை கொண்டிடினும் தாம் தீமை
இம்மையிற் கொடியரம்மா—அவர்பால் [செய்வார்
என்ன நலங் கண்டிடினும் எய்தல் விடுப்போம்

4. வெள்ளைகறுப் பறியாதார்—அறிஞரை
வெள்ளறிவி னரையிங்கு வேற்றுமை காணார்
தெள்ளறிவு மிக்கவர் போலே—தம்மைத்
தேறி நெறி மாறிடுவர் சேரல் விடுப்போம் (அன)

5. மிக்க பெரும் பதவியிலே—இருக்கின்ற
மேன்மை கொண்டு தம்மறிவை மெச்சுதல் கொண்டு
தக்கவரைக் குறைத்து நிற்கும்—தகவற்ற
தப்பிலிகள் தம்மையிங்குத் தள்ளி விடுவோம்.(அன)

## 6 சின்னம்மன் கோயில் வேள்வி.

"சின்னம்மன் கோயிலில் வேள்வி நடக்குது
சீரினைக் காணுவம் வாரு" மென்றே—நண்பன்
பொன்னனுரைத்தனன்; யானு மெழுந்தனன்;
போகும் பொழுதொர் புதுமை கண்டோம். (1)

ஒழுங்கை மருங்கொரு வீட்டருகே பலர்
ஊக்கத் தொடுசுற்றி நிற்கையிலே—மேளம்
முழங்கிற்று; யாங்களும் உட்புகுந்தோம், பலர்
மொய்ப்ப தெதற் கென்று பார்ப்பதற்கே. (2)

ஆடன்று மாடெனத் தோற்றுமொ ராட்டுக்
கழகிய மாலை கழுத்தணிந்தார்—பின்னுங்
கோடுறு கண்ணிகள் கொம்பிலே சுற்றித்
துலங்கவிட்டார் மணி தொங்க விட்டார். (3)

ஆட்டையுடையவன் பொய்க்கண்ணீர் விட்டங்
கழுது நின்றான் ஆடு போகுதென்றே—இரு
காட்டு மறவரை யொத்தவர் ஆட்டினைக்
கட்டிப் பிடித்தே யிழுத்து நின்றார். (4)

வாத்திய வோசை முழங்கிட நானூறு
மாந்தர்களிப்பொடுபின்தொடர்ந்தார்—மேலென்(று)
ஏத்திடும் ஆடு நிமிர்ந்து பிடிப்போர்
இருவரை வாட்டிக் கொண் டேகியதே. (5)

யாவர்க்கும் பின்னொரு பாட்டுக் கச்சேரி
எழுந்தது பொன்னனைப் பார்த்தொருவன் அண்ணை
கோவி லிதற் கெந்த ஆண்டினும் வேள்வி
குதுகலமாக நடக்குது காண்.

"ஆட்டிலோ ரைஞ்ஞாறு கோழியிலாயிரம்
ஆண்டு தொறும் வெட்டி வீழ்த்திடுவோம்;—இந்த
நாட்டிலே ஆயிரம் கோயிலில் வேள்வி
நடக்குதிதற்கிணை நாமறியோம். (7)

அந்தா! தலையிலே சால்வை கட்டிமாலை
ஆனந்தத் தோடு கழுத்திலிட்டுக்—கூட
வந்தோரை அன்பொடு பார்த்துச் சிரிக்கும்
மனிதனண் ணையிந்த ஆடுடையான்; (8)

"ஆண்டு தொறுமிவன் தானே தலைக்கிடாய்
ஆர்வத் தொடு வெட்டிக் கொள்ளுகிறான்—வரும்
ஆண்டுக்கும் இப்பொழுதாடு வளர்க்கிறான்
அம்மனிற் பத்தி அதிகமையா." (9)

என்றவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டேநாமும்
ஏகியக் கோயிலின் முன்புநின்றோம்—அங்கே
நின்றவன், காப்பிரி போன்றவன் மும்முழ
நீளப் பெருங்கத்தி வைத்திருந்தான். (10)

பளிச்சுப் பளிச்சென்று கத்தி மினுங்குதல்
பார்த்து நடுங்கிப் பயந்துவிட்டேன்—உடல்
நெளிச்சு நெளிச்சு நடந்தொரு பூசாரி
நேரேவந் தான் தலை யாடுகண்டான். (11)

பூவை யிலையைச் சொரிந்தொரு மந்திரம்
போற்றும் புனல் தெளித்துச் சரித்தான்—பின்பு
தாவி யிருவ ரிழுத்துப் பிடிக்கத்
தலைக்கிடாய் வெட்டிச் சரித்துவிட்டான். (12)

ஆடுக ளெத்தனை கோழிக ளெத்தனை
அந்தோ துடித்துப் புரள்கையிலே—பீறிட்
டோடு மிரத்தம் பெருவெள்ள மாய
துணர்ச்சி யிழந்து கலங்கி விட்டேன். (13)

அன்பன்றி ஆடுகள் கோழிகள் தெய்வத்துக்
காகுமோ இந்த அநியாயம்—வேண்டாம்
அன்பு கடவுளென் றன்பைப் பெருக்கி
அருளை வளர்க்க முயன்றிடுவோம். (14)

தோடுலாவிய காதி னனருள் தோய நின்றொளிர் தாயென
நீடு மாதவர் கூறுமாயிழை நேர்கொள்பாதிய னயினன்
ஆடுமம்பல வாணனீன்றவை யாகுமிங்குயிர் யாவுமே
ஆடு கோழிகள் கோயில் முன்றிலறுத்தல் பாதகமாகுமே

## 7. எருதின் முறையீடு

1. எருதே யெனினும் இணங்கிநிற்பேன் பாரம்
பெரிதே யெனினும் பிழையேன்—கருதீரோ?
நல்லுணவு(ம்) நன்னீரு(ம்) நல்கீரோ? செம்மைவழி
நில்லீரோ? நன்றி நினைந்து.

2. முற்பிறப்பிற் செய்பாவ(ம்) மூண்டதால் மாடாகி
இப்பிறப்பிற் பாரம் இழுத்தலைவேன்—எய்ப்படைய
வாட்டிப் புடைக்காதீர்! வாணாள் முடியுமட்டும்
கேட்டுப்பணிவேன் கிளர்ந்து.

3. பைசாசம் போலப் பலரெம்மை வேண்டுமட்டும்
மெய்சோர வேலைகொள்வர் மேல்வயதில்—ஐயையோ
எம்மூ னரிந்துண்பார்க் கின்பமுற விற்றிடுவர்;
எம்மைவிடு மென்றழுவே(ம்) யாம்.

4. பாரமிக வேற்றுதீர்! பள்ளத் திறங்குகையில்,
ஈரமின்றி மேட்டுநிலத் தேறுகையில்—ஓராமல்,
நாண்கயிற்றைச் சும்மா நலித்திழுத்துக் கோல்கொண்டு
மாண்கெடநீர் நையாதீர்! வைது.

5. நம்முடைய தீம்பாலை நம்மைக் குடிக்கவிடா
தும்முடைய தாமென் றுறந்தெடுப்பீர்--செம்மையிலீர்
நன்றிகொன் றீ ராயின் நடுவணூற் கேடுறுவீர்!
துன்றுநலஞ் செய்வீர்! தொடர்ந்து.

6. இன்றுநேற் றுங்க ளிடுக்கண் களைந்தேமோ
அன்றுநீர் தோன்றியநாள் அன்புடனே-நன்றுதவி
உங்கள்சுற்ற மாமென் றுளங்களிக்க நின்றனமால்
இங்குநீ ரெண்ணீ ரிது.

7. மாடென்று வைவீர் வளங்கெழும நீர்வாழ
நாடென்று காடு நலங்கொள்ள—நீடுழவு
பல்கநனி நாமுழைத்த பான்மைகண்டு செல்வமென
நல்கினு ரிப்பேர் நயந்து.

---

## அ. கதைப்பகுதி

## 1, தேனீயும் குளவியும்

(உரையாடல்)

1. தேனீயரே தேனீயரே—அன்பு
திரியாத தம்பியரே
யானென்று கூறிடுவேன்—அதை
இன்பமுடன் கேட்டிடுவீர்.

2. பொன்னை யென்ற நின்னிறமும்—நல்ல
புள்ளிகளு முள்ளவனும்
என்னையிந்த மானிடர்கள்—கொல்ல
எண்ணுவதே னிங்குரைப்பாய்.

3. உருவத்தில் நீ யொவ்வுவையோ—என்னை
யுடல்வளத்தில் ஒவ்வுவையோ
பருமைதனில் ஒவ்வுவையோ—என்னைப்
பார்க்க அவர் கூசுவதேன்.

4. குளவியரே குளவியரே—எங்கள்
குலத்தினிலே மூத்தவரே
தெளிவுதருந் தூயவுடல்—கொண்ட
செல்வனரே கேட்டிடுவீர்.

5. கூடுகட்டுந் தொழிலாலும்—மற்றக்
குறிகுணங்கள் தம்மாலும்
நாடிலெம்மிற் பேதமில்லை—என்னை
நல்லோ னெனுங் காரணங்கேள்.

6. கொட்டுதலில் நின்போலும்—யான்
கொடியோனு மல்ல கண்டாய்
பட்டப்பகல் தோறு மலர்—நறும்
பனித்தேன் யான் சேர்த்திடுவேன்.

7. யான்சேர்க்கும் தேனையெல்லாம்—அவர்
இன்பமா யெடுத்திடுவார்
தேன்சேர்க்கு மாசையன்றோ—வென்னைத்
தினமுமவர் போற்றுவது.

8 நன்று நன்று தேனீயரே—இந்த
நானிலத்தி லாண்டவனார்
ஒன்றி னென்று மாற்றமதாய்—எம்மை
உண்டாக்கினார் போய்வருவேன்.

9. தில்லாலே போய்வருவீர்—யான்
தேன்சேர்க்கப் போய்வருவேன்
தல்லாலே டங்கு டிங்கு—தனத்
தானனே தானதன.

## 2. குறவனும் பிள்ளைகளும்
(உரையாடல்)

1. பாம்பாட்டும் குறவனாரே
இங்கு சற்றே வருவீர்
பாம்பெது நீர் கொண்டுவந்தீர்
பார்க்க அன்பாய் விடுவீர்.

2. நாட்டிலுறை பிள்ளைகளே
நாகமிது மலைசேர்
காட்டினிலே பிடித்துவந்தேன்
காட்டக்காசு தருவீர்.

3. கடிக்கவந்தால் பிடிக்கவேணும்
காசு தருவோமே
நொடிக்குளித னட்டங் காட்டில்
நுமக்கு நன்றியாமே.

4. வெள்ளெருக்கந் துண்டு காட்ட
மிகவுமஞ்சும் பாம்பு
விரைந்து குழலூதிற் படம்
விரித்திங் காடும் பாம்பு.

5. படம்விரித்தே யாடுகிற
பாம்பினையாம் பார்த்தோம்
படமெடுத்தே கடித்துநின்றாற்
பரிகரிப்புண்டாமோ?

6. கரிய நிறமுடைய சேர்வைக்
கல்லிதனைக் கடிவாய்
விரைய வைத்தால் விடமுறிஞ்சி
மிக்கநலந் தருமே.

7. வாழையிளஞ் சாறெடுத்தே
வடித்துடனே குடித்தே
மாளாமலிருந் திடலாம்
மயக்கமதைக் கெடுத்தே.

---

## 3. குறத்தியும் சிறுவரும்

குறத்தி வந்தேன் குறத்தி வந்தேன்
குறமுறைப்பேன் கேளீர்
குறித்த வெல்லாம் குறித்தபடி
உரைத்திடுவேன் பாரீர்.
கறுத்த உடல் வெளுத்த நகைக்
குறத்தியிரோ வாரீர்
சிறுத்த இடைக் கறுத்த
உடைச் சிறுக்கி நீரெவ்வூரீர்
புதிய தண்ணீர் அருவிவரும்
பொதிய மெங்கள் நாடு
புலவரெல்லாம் புகழ்ந்துரைக்கும்
நீதி நிறைந்த நாடு.
நிதிய மென்றீர் என்ன நிதி
நிறைந்த தங்கே அம்மே!
அதிசயவாய் உரை செயும்யாம்
அறிய வேண்டும் அம்மே.
மணங் கமழுஞ் சந்தனங்கள்
வளர்வதெங்கள் நாடு
மதயானைக் கொம்புபல
மலிவ தெங்கள் நாடு.

உங்கணவன் தொழிலென்னே
உங்கள் தொழில் என்னே
எங்களுக்குத் தெரியா நீர்
இசைக்க வேண்டும் அன்னே.

என் கணவன் பாம்பாட்டி
இனிய நெல்லும் விளைப்பான்
யான் முறங்கள் முடைந்திடுவேன்
எழிற் குறளும் உரைப்பேன்.

நீங்களுண்ணும் உணவெவையோ
நெடிய கூந்தல் உடையீர்
நாங்களவை அறிந்திடவே
நயந்து சற்றே யுரையீர்.

பழங்கள் தின்போம் மலையரிசி
பறவைகளும் உண்போம்
கிழங்கு தின்போம் மான் மரை தேன்
கீரைகளும் உண்போம்.

புதினம் அம்மே புதினம் அம்மே
போதும் போதும் அம்மே
இது புதினம் துதிபுகன்றோம்
ஏகிவாரும் அம்மே.

## 4 சோம்பேறியும் பிராணிகளும்

'காற்றுலவுங் காலையிலே
கமழு மலர்ச் சோலையிலே
பார்த் துலர்ந்த சுள்ளி யெல்லாம்
பறந்தெடுக்கும் பறவையிரே
பாடி ஆடிடுவோம்—சற்றே
பரிந்து வந்திடுவீர்."

"சுள்ளி பல பொறுக்கிடுவேன்
தொடுத்துக் கூடு கட்டிடுவேன்
வெள்ள மழை வருவதன் முன்
வீட்டில் வாழ்ந்து விளங்கிடுவேன்
விளையாட மாட்டேன்—காலம்
வீண் போக்க மாட்டேன்."

" இரைந் திரைந்து பறந்து வரும்
எழில் மிகுந்த தேனீ யிரே
விரைந்து செல்லல் விடுத்திடு வீர்
விளையாட வந்திடுவீர்
மெத்தவும் நொந்தேன்—தனியே
தத்தளிக்கின் றேன்."

"பூக்கள் தொறும் பறந்திடுவேன்
புதிய தேனை எடுத்திடுவேன்
ஆக்க மெனக் கூட்டினிலே
அதனை நன்று சேர்த்திடுவேன்
அரைக் கணந் தானும்—தரியேன்
அகன்றிடுங் காணும்."

ஊர்ந்து செல்லும் எறும்புகளே
ஊக்க முள்ள எறும்புகளே
சேர்ந்து விளையாடிடு வோம்
தெம்மாங் கெல்லாம் பாடிடுவோம்
சினந் தவிர்ந்திடுவீர்—இங்கே
சிறிது நின்றிடு வீர்."

## 5 சிங்கமும் சுண்டெலியும்.

1. சிங்க மொன்று மரத்து நிழலில்
துயங்கி உறக்கம் கொண்டது
சிறிய சுண்டெலி அயலில் மகிழ்ந்து
திரிந்து விரைந்து வந்தது.

2. சிங்க மீது துள்ளி விழுந்து
சிந்தை நொந்து வாடிற்று,
சிங்க மெழுந்து கொல்ல நினைந்து
சினந்து நசுக்க வோடிற்று.

3. அஞ்சி ஒடுங்கி நடுங்குஞ் சுண்டெலி
"ஐய! பொறுக்க வேண்டினேன்
அடியென் எளியென் அருளை மறவேன்
அதிக மதிகம் வாடினேன்.

4. நெஞ்சில் வருத்தம் மிஞ்ச விரைந்து
கெஞ்சு மென்னை விடுகுவாய்
நினது நன்றியை நினைந்து நினக்கும்,
உதவி செய்குவ னறிகுவாய்."

5. என்று படியில் விழுந்து பணிய
இரங்கி "ஏழையே ஓடுவாய்
இனிக் குழப்படி ஒருத் தருக்கும் நீ
இயற்று திருக்க நாடுவாய்.

6. என்று சிங்க மியம்பச் சுண்டெலி
எழுந்து வளைக்குட் புகுந்தது
இரவி லிரையை விரும்பிச் சிங்கமும்
எழுந்து காட்டுட் புகுந்தது.

7. வேடர் விரித்த வலையிற் சிங்கம்
விரைந்து சிக்கியே நொந்ததே
மிகுந்த முழக்கம் கேட்டு வெளியில்
விரைந்து சுண்டெலி வந்ததே.

8. நாடி யென்றன் உயிரைக் காத்த
நல்ல சிங்கம் ஈதென்றே
நன்னி நன்னி வலையை யறுத்து
நயந்து விடுத்த தேநன்றே.

9. சிறிய ராலும் பெரிய உதவி
சிந்தை மகிழ மேவுமே
சிறியர் பிழையைப் பெரியர் பொறுத்தல்
சிறந்த செய்கையாகுமே.

---

## 6 பிறவிக்குருடன்

1. அருளுடையீர் அறமுடையீர் அகமகிழ வளர்வீர்
அழகுடைய புவியியல்பை அறிந்துவியப் புறுவீர்
பொருளழகு மறியேன் யான் புவியியல்பு மறியேன்
பொலியுமொளியிருணிலையும் புண்ணியரேயறியேன்

2. மனிதரென்றும்விலங்கென்றும்மகிழ்பறவையென்றும்
மண்ணினிலே ஊர்வனநீர் வாழ்வனவாமென்றும்
புனித நிறை பூவென்றும் பொருந்துநிற மென்றும்
புகல்பலவுங் காணாத பொட்டையனாய்ப் பிறந்தேன்

3. அப்பாவும் அம்மாவும் அண்ணன் தம்பி மாரும்
அறைகுரல்கேட்டடையாளமறிந்துகொள்வேனல்லால்
இப்பாரில் எவரினையும் பார்த்தறியேன் யான்கண்
இல்லாது பிறந்ததனால் ஏதுசெய்வேன் பெரியீர்

4. கோழியொன்றைத்தடவியதன்குலவுருவம்மதித்தேன்
குயிலறியேன் கிளியறியேன் மயிலழகு மறியேன்
சூழவரு நாய்பூனை தொட்டறிந்தே னல்லாற்
சொல்லு புலி குதிரை கரித் தோற்றமறியேனே

5. சூரியனும் சந்திரனும் துலங்குமொளி விளக்காம்
சொல்லரிய விண்மீனும் தோற்றுமுயர் மலையாம்
கார்முகிலாம் கடல்யாறும் காட்சியளித்திடுமாம்
காண்பதற்குவகையறியேன் கண்கள்பெருமையினால்

6. பலநிறத்தில் உடையணிந்தே பாட்டியம்பி யாடும்
பண்புதனைப் புகழுவர்யான் பார்த்தறிந்த தில்லை
மலர்களினல் மாலைபல மகிழ்ந்துதொடுப் பீராம்
மணமறியேன் அழகறியேன் மனிதனெனப்பிறந்தேன்.

7. தொட்டறிவேன்மோந்தறிவேன்சுவைத்தறிவேன்கேட்
சொல்லெல்லாங்கேட்டபடிசொல்லிமகிழ்ந்திடுவேன் [பேன்
கட்டமொடு விரல்களினற் கடிதமதைத் தடவிக்
கல்வியையு மொருசிறிது கற்றிடுவேன் தெரிவீர்.

8. கண்ணடி முன் முகத்தைக் கண்டுகளிப்பீராம்
கடைவீதி கனிற்பொருள்கள் காட்சிமிகத் தருமாம்
கண்ணில்லேன் ஏன்பிறந்தேன் கடவுள்திருவுளமோ
கைகூப்பி வழுத்திடுவேன் காத்தருளற் பொருட்டே.

---

## 7 குதிரை முட்டை

1. மட்டிமடையன் என்னுமிரண்டு
மடவர் குருவினேவலால்
மற்றோர்நாடு சென்று மீளும்
வழியிலோர்புற மாகவே

2. நீற்றுப் பூசனிக் காய்கள் பற்பல
நீண்ட கொடியில் தொங்கவே
நின்று நாடியிற் கையை வைத்திவர்
நிமிர்ந்து நிமிர்ந்து நோக்கவே

3. தோட்டக்கார னிவரைப் பார்த்துத்
துணிந்து நீங்கள் பார்ப்பதேன்
சொல்லு மென்ன இவைகள் யாவை
சொல்லு மென்று கேட்டனர்.

4. மடமை கொண்ட மனிதரென்று
மனதிலெண்ணி அவனிவை
மகிமை தங்கு குதிரை முட்டை
வாங்கில் வாங்கு மென்றனன்.

5. மெத்த நன்று வாங்கலாகும்
விலையைச் சொல்லு மென்றனர்
வெட்டி வார்த்தை யில்லை அறுபொன்
விநம்பி வாங்கு மென்றனன்

6. வீடுசென்று குருவைக் கண்டு
விளங்கு குதிரை முட்டையின்
விலையுங் கூறியடை கிடக்கும்
விபரமும் குறித்தனர்.

7. குருவுமன்பு கொண்டு முட்டை
யொன்று கொள்ளல் நன்றெனக்
கூறியது கொள் நாளு முரைத்துக்
குதுகலித் திருந்தனர்.

---

## 8 பொய் சொல்லி உயிர் இழந்தது

1. பைந்தழை மரச்சோலை—சூழ்ந்த
பட்டி யூரில் உற்ற கதை
இட்ட மாய்ச் சொல்வேன்
கந்தனென் ரேரிடையன்—அடுத்த
காட்டினிலே ஆட்டினத்தை
ஓட்டிச் செல்லுவான். (பைந்தழை)

2. புல்லினை மேயவிடுவான்—இலைதழை
போதிய மட்டுந்திரட்டிப்
போட்டுக் கொள்ளு வான்
நல்ல நீர், ஆறுகுளத்தே—குடிக்க
நன்று காட்டி என்றும் ஊட்டி
நன்மை புரிவான்.

3. பொல்லாத வீம்புக் காரன்—சும்மா
பொய்க்கதை உரைப்பதிலே
மிக்க சமர்த்தன்
எல்லாரையும் ஏமாற்றிடுவான்—ஒருநாள்
இப்பயல் செய் தப்பிதத்தைச்
செப்பிடு கிறேன். (பைந்தழை)

4. "ஐயையோ, புலிவந்ததே!—என்றன்
ஆட்டை யெல்லாங் கொல்லுமுன்னே
ஓட்டமாய் வாரீர்
பொய்யல்ல" வென்று கூவினன்—கேட்டோர்
போல்லெடுத்துக் கொலலவரப்
பல்லை யிளித்தான். (பைந்தழை)

5. வந்தவர்கள் சினத்துடனே—மீண்டார்
மற்றொருநாள் உண்மையாக
வந்த தேபுலி
"இந்த விதிக் கென்ன செய்குவேன்"—என்றே
ஏங்கி யவன் மெத்த மெத்தத்
தேம்பி யழுதே, (பைந்தழை)

6. "புலி! புலி! உண்மையாய்ப் புலி!—மெத்தப்
புண்ணியமுண் டாமுதவி
பண்ணுவீ ரையா
கொலை செய்து தின்ன வந்ததே—உம்மைக்
கும்பிட் டேன்கும் பிட்டேன்தடி
கொண்டு வருவீர்" (பைந்தழை)

7. என்றிரந்து கூவியுமென் னே—பொய்யென்
றெண்ணியாரு மவ்விடத்தை
நண்ணவே இல்லை
கொன்றதெல்லா ஆடுகளையும்—பின்னே
கோலிடைய ஒவியையுங்
கொள்ளை கொண்டதே (பைந்தழை)

8. வேடிக்கைக்கும் பொய்யு ரைக்காதீர்—பின்னல்
மெய்யுரைத்த போதிலும் பொய்
பொய்யெனக் கொள்வார்
நாடி நாடி உண்மை பேசுவீர்—அதனல்
நன்மை நன்மை கோடி நன்மை
நாடி வருமே. (பைந்தழை)

## 9 கேப்பைக் கூழ்க் கிராமம்

1. சீருறு தமிழ் நாட்டை—ஆண்ட
தென்னரு ளொருவன் வேட்டை செய்யநினைந்தான்
பேருறு படைகளுடன்—விலங்குகள்
பெருகி யடர்ந்ததொரு காட்டை யடைந்தான்

2. முதுகினி லம்புக்கூடு—தொங்க
முறையாய் வரிந்தவில்லுந் தோளிலிலங்க
புதுமகிழ் வுடையவனாய்—வேட்டை
புரிதலில்மனங்கொண்டுபொங்கியெழுந்தான்.(சீருறு)

3. படைகளின் துணைவிடுத்தே—விரையும்
பன்றியொன்றைப் பின்தொடர்ந்து படரலுற்றான்
செடிகள் புதர்கள் கடந்தே—வெகுதொலை
சென்றதந்தப் பன்றி, அதைத் தேடியோடினான்.

4. களைப்புற்று விழுந்து விட்டான்—நிழலிலே
கால் கடுக்கச் சோர்ந்து மிகக் கண்ணுறங்கினன்
இளைப்புற்றுப் பசிதாகம்—எய்தி
"என்னுடைவந் தோர் வருவ" ரென்று நினைந்தான்.
(சீருறு)

5. காலையிற் போன மன்னன்—மீளல்
காணவில்லை யென்று படை கலங்கினதே
மாலையிற் கதிரவனும்—மேற்கே
மறைந்தன னேயிருள் கவிந்ததுவே. (சீருறு)

6. என்னவினிச் செய்வதென்றே—தேடி
இளைத்ததுவேபடை களைத்ததுவே
மன்னனுந் தனித்தவனாய்—இருட்டில்
வனத்து விலங்குகளுக் கஞ்சி மெலிந்தான். (சீருறு)

7. தொலையினி லொருவெளிச்சம்—தோற்றத்
துணிந்ததை நோக்கி மெல்லச் சோர்ந்து நடந்தான்
நிலைபெறு குடிலொன்றில்—அவ்வெளிச்சம்
நிறைவதைக் கண்டுகிட்ட நெருங்கி நின்றான்(சீருறு)

8. யாரோ இங்கிருப்பீர்?—பசித்தேன்
ஏதுமுண்ணத் தந்திடுவீரென்று விழுந்தான்
யாரோ மகனே நீ!—இருட்டில்
இங்குவரக்காரணமென்னென்று துடித்தாள் (சீருறு)

9. நரைத்திட்ட மயிருடனே—எலும்பும்
நரம்பு, மெழுந்துடலந் திரைந்தகிழம்
உரைத்திட்ட மொழி கேட்டான்—தாயே
உணவளி அன்றேலுயி ரொழியு மென்றான் (சீருறு)

10- எனக்குமென் மைந்தனுக்கும்—கேப்பைக் கூழ்
இனிதுசமைத்துவைத்தேன் உண்ணுவையென்றாள்
வணக்குறக் கிழவியன் பால்—அளித்ததை
வயிறார மன்னனுண்டு மனமகிழ்ந்தான். (சீருறு)

11. பரணிலே கொடிகளினால்—இணைத்த
படுக்கை கொடுத்தாளதிற் பள்ளியுங் கொண்டான்
ஒருகணப் பொழுதினிலே—அவள் மகன்
உவந்துகுடிலடைந்தான் உற்றதுசொல்வாள் (சீருறு)

12. அடடா மகனே கேள்—யாரோ
அரச மகனைப் போலே தெரியுதடா
கொடுவனம் அலைந்தலுத்தே—பசியொடு
குடிலை யடைந்தார் கேப்பைக்கூழுங்குடித்தார் (சீரு)

13. பரணிலே படுக்க விட்டேன்—ஐயோ!
பாவம் அயர்ந்துறக்கம் கொள்கிறாரடா
இரவு கழிந்தவுடனே—நாட்டினுக்
கினிதழைத் தேகிவிட்டு வந்துவிடடா. (சீருறு)

14. என்றுரைத்தாள் நன்று நன்றென்றான்—பெரியார்
இங்கு வரக் கிடைத்திட்ட தெங்கள் பேறென்றான்
நன்று விடிவதற்கு முன்னே—விருந்தினன்
நல்ல படுக்கை விட்டுத் துள்ளி யெழுந்தான் (சீருறு)

15. தாயும் மகனுந் தொழுதார்—கிழவி
தனியே செல்லாதீர் துணை தருவனென்றுள்
சேயை விடுத்தனள் சென்றார்—காட்டைச்
சேர்ந்ததும் குறமகன் திரும்புவ னென்றான். (சீரு)

16. மன்னவன் மறுத்தவனை—யழைத்து
மாளிகை யடைந்த மிக மகிழ்ச்சியுடன்
என்னைமிக உவப்புடனே—உணவளித்(து)
இன்னுயிரளித்ததற்குயாதென்றுசெய்வேன் (சீரு)

17. கேப்பைக் கூழ் அளித்ததலால்—யானும்
கேப்பைக் கூழ்க் கிராமமெனப் பெயர்தந்தோர்
வாய்ப்புடைய வூர்தந்தேன்—தாயொடு
வந்துபல நலத்தொடு வாழியென்றனன். (சீரு)

18. அன்று தொட்டப் பெயருடனே—குறமகன்
அதிகாரி யாகியங்கு வாழ்ந்து வந்தனன்
இன்று மந்தப் பெயருளதாம்—பெரியோர்க்
கிம்மி நலஞ் செய்யினும்பே ரின்பமுறுமே. (சீரு)

---

## 10 விந்தனை வேடர்

1. விந்தனையாங் காட்டுக் குள்ளே
வீடு செய்திடுவோம்;—இலையால்
வேய்ந்திருந்திடுவோம்;—குகைக்குள்
விழைந் துறைந்திடு வோம்.

கந்த வன்னி யன்ப தத்தைக்
கசிந்து வணங்கு வோம்;—படையல்
சொரிந்து வணங்கு வோம்;—வெறியாட்
டயர்ந்து வணங்குவோம்;— (விந்தனை)

2. வில்லெடுத்தே மான் மரைகள்
வேட்டை செய்திடுவோம்;—நெருப்பில்
வேக வைத்திடு வோம்;—நன்றாக
மென்று தின்றிடுவோம்.
கொல்லை செய்தே தினை விளைப்போம்;
குரக்கன் வித்திடுவோம்;—அவற்றைக்
குற்றி யாக்கிடுவோம்;—ஒன்றாகக்
குழைத்துத் தின்றிடுவோம்.— (விந்தனை)

3. தேனை யெல்லாம் குகைகளிலே
தேடித் திரட்டுவோம்;—ஏணிகொண்
டேறித் திரட்டு வோம்;—அரைக்குடம்
செறியத் திரட்டுவோம்.
மானிறைச்சி தேனிலிட்டு
மரத்தின் பொந்தினிலே—அடைப்போம்;
மதியொரைந்தினிலே—எடுப்போம்;
மகிழ்ந் தருந்திடுவோம்— (விந்தனை)

4. உடுப்ப தின்றி முன்னை நாளில்
உலவி வந்தனமே;—இந்நாளில்
உடை யணிந்தனமே;—கல்வி
ஓதி நின்றனமே.
நடப்பை யெல்லாம் மெல்ல மெல்ல
மாற்றிக் கொண்டனமே;—அறிவைக்
கூட்டிக் கொண்டனமே;—திருத்தம்
நாட்டிக் கொண்டனமே.— (விந்தனை)

## 11 பொன் பெற்ற துறவி

1. முன்னொரு காலந் தன்னில்
   மூத்த வோர் துறவி யாவான்
பன்னருங் காவி யாடை
   பாங்குட னுடுத்தூர் தோறும்
நன்மன துடனே சென்று
   நாணிலன் பிச்சை யேற்று
முன்னவ னடிமைத் தொண்டில்
   முறைபிச காது நின்றான்.

2. பசிவேளை தவிர மற்றைப்
   பகலெலாம் வணக்கஞ் செய்வான்
நிசி வேளை சிறிது றங்கி
   நிட்டையி லிருக்கு மேலான்
கசிவுறு மன்பால் யார்க்குங்
   கனிவுரை கூறிக் கொள்வான்
இசையுறு தெய்வப் பாடல்
   இடையிடை இனிது சொல்வான்.

3. "இன்னசீ ருடையான் தன்னை
   ஏழையாய்ப் பிச்சை யேற்க
முன்னவ! விடுத்த தென்னே
   முறையிலா தழுக்கா றுற்றுப்
பன்னரும் பிழைகள் செய்து
   பரிந்தெமை வணங்கார்க் கெல்லாம்
பொன்பொரு ளீந்த தென்னே
   புதுமையீ தன்றோ?" வென்றே

4. இறைவனை யுமையாள் கேட்க,
   "இதனுண்மை காட்டுகின்றேன்
பொறு பொறு, நங்காய்" என்று
   பொதிநிறை பொன்னை யந்த
முறைதவ றாத தொண்டன்
   முன்னிலை யிட்டான், என்னே?
'பெறலரும் பணத்தைக் காணிற்
   பிணமும்வாய் திறக்கு' மென்பார்.

5. பணத்தினைக் கண்டான், சற்றே
சிந்தித்தான் பரிந்தெடுத்தான்
அணைத்தணைத் "தாகா விந்த
வரும் பொருள் தன்னல் நல்ல
மணத்தினைச் செய்யலாமோ?
மாடத்தைக் கட்டலாமோ?
குணத்தினிற் சிறந்த தான
குதிரைமேற் செல்லலாமோ?

6. "பாருளோர் பலரும் வந்து
பணிந்திடு மாறு மிக்க
சீருலாங் கரியின் மீது
சிறப்புற வூர லாமோ?
கார் நனி யுறங்குங் காவுங்
கழனியுங் கொள்ளலாமோ?
தாரினை யணிந்து பொற்பூண்
தாங்கியே சிறக்க லாமோ?

7. என்றுபற் பலவா றெண்ணி
யிருக்கையிற் பசியுங் காணன்
சென்றன சிலநாள், காசைச்
சிக்கென வணைத்தி ருந்தான்
ஒன்றினு நிலைகொள் ளாம
லுள்ளமு மலைய நின்றான்
நன்றுசெ யிறைவன் தாளை
நாடவு மறந்தா னந்தோ.

8. இறையவ னுமையை நோக்கி
"ஏந்திழை கண்டாய் பொன்னல்
நெறியுடை யடியான் கொள்ளு
நினைவுகள், இதனு லன்றோ
பெறலருந் தவத்தி னூர்க்குப்
பெரும்பகை பொன்னயிற்று
முறைவழா தொழுக வின்றேன்
முயலுவ னதுவுங் காணய்."

9. என்றவ னினிதென் றெண்ணு
மிரும் பொருட் குவைம றைந்து
சென்றிடச் செய்தா னையன்
திடுமெனத் துறவி காணுன்
ஒன்றினுஞ் சிந்தை செல்லா
தொருகண மிருந்தான் பின்னை
"நன்றுநன்" றென்ன நக்கான்
"நவைபுரிந் தனனே" யென்ருன்.

10. "மாதவந் துறந்தே னென்றன்
மதிநல மிழந்தே னையோ
கோதுறு பொன்னு லென்றன்
கொள்கையு மயர்ந்தேன் மேலே
மாதினை யிடத்து வைத்த
மணிமுடிப் பரம ஞர்தம்
பாததா மரையை வேண்டிப்
படர்குவ னெறியி" னென்றே.

11. நன்னெறி தழுவி நின்ருன்
நலம்பொழி தமிழினலே
இன்னிசை பயிலும் பாட
லியம்பினு னுள்ளக் கோயில்
தன்னைமா தூய தாக்கித்
தவத்தினை முயன்ருன் அன்னை
நன்னிலை கண்டா ளொத்தாள்
நம்பனை வியந்தா ளன்றே.

---

## சோலைக்கிளி

வேனிலெனும் பெரும் பொழுதில் வெயிற்கொடுமை மிகவே
வீட்டினிலே யிருக்கமுடி யாதுவெயர் வெழவே
எனெளி கொள் கதிரவனே ஏறிக்கின்றுயிவ் வாறே
எனக் கடிந்தேன் பலகணியை யியன்ற மட்டுந் திறந்தேன் (1)

காற்றுவரு மென்றென்றே காத்திருந்து பார்த்தேன்
கடலினிலோ மலையினிலோ கரந்ததது காணேன்
ஆற்றமுடி யாதினியென் றங்கிருந்தே யெழுந்தேன்
அடுத்ததொரு பூஞ்சோலை யதனைவிரைந் தடைந்தேன். (2)

எப்புறமும் பசுங்கொடிகள் இனியதுணை யென்றே
எழுந்துபற்றிப் படர்ந்திருந்த எண்ணரிய மரங்கள்
கொப்பு விட்டுப் பரந்துகுழைக் காடெனவே குலவக்
கொழுமலர்கள் கலகலெனக் குழையிடையே துறும. (3)

ஆண்டவனின் னருள்போலே அலைத்திடமுங் குளிர்ச்சி
அமைதல் கண்டோ ரசமரத் தடியிலயர்ந் திருந்தேன்
ஈண்டியபல் பறவையினம் எங்கணுங் கொம்பரிலே
இசைமிழற்றி யிணையிணையா யெழுந்துபறந் திருந்த (4)

எங்குமிந்தக் காட்சியிலே ஈடுபட்டங் கிருந்தேன்
இனிய செழுங்குரல் செவி வந்தேறிடவண் ணுந்தேன்
அங்குபசுங் கிள்ளையிரண் டாணும் பெண்ணுமாக
அமர்ந்து கொஞ்சி யகமகிழ்ந்தே யரியமொழி பேசும் (5)

அவைபேசும் பேச்சினையா னறியவுளங் கொண்டே
ஆர்வமுறக் கேட்கையிலே யாண்பறவை கூறும்
தவமுடையே மாதலினற் றரணியிலே யாங்கள்
சாலநலம் பொலிபறவைச் சாதியெனப் பிறந்தோம் (6)

என்றுசொலப் பெண்பறவை எனதரிய கணவா
இவ்வாறே னியம்புகிறீ ரிவ்வுலகின் மிகவே
வென்றியொடு விளங்கிடுவான் மேனிலைநன் குடையான்
விலங்கினையும் நங்களையும் வெருட்டியடக் கிடுவான். (7)

காட்டினைநா டாக்கிடுவான் கவின்வயல்கள் வகுப்பான்
கனிமரங்கள் பெருக்கிடுவான் பயிரினங்கள் வளர்ப்பான்
வீட்டினை நன் றியற்றிமிகு வெயில்குளிரை விலக்கி
விளக்கேற்றி வேண்டுமுறை வெதுப்பியயின் றிடுவான். (8)

பருத்தியென்றும் பட்டென்றும் பரியமயி ரென்றும்
பல்லாடை நெய்து நிறம் படைத்துடுத்தி மகிழ்வான்
அருத்தியொடு பொன்மணியா லழகினொடு மிளிரும்
அணிகள்பல புனைந்துடலி லணிந்து சிறந்திடுவான். (9)

நூல்கள்பல வியற்றிடுவான் நுண்ணறிவு பெறுவான்
நோய்களுக்கு மருந்துகண்டு நொய்தினிற்போக்கிடுவான்
மால்கெடுத்து மன்னுயிர்க்கோ ரின்னுயிராய் மறையாய்
வளரருளா யமையுமிறை மலரடியுத் தொழுவான். (10)

கருங்கடலில் வான்வெளியிற் கருதுநிலப் பரப்பிற்
கப்பல்கட்டி யூர்திபண்ணிக் கவின்தேர் செய் தசைவான்
இருங்கரியும் பரிமாவு மெருதுமிவர்ந் திடுவான்
இன்னறுநெய் மோர்தயிரென் றிவைபாலிற் பெறுவான். (11)

ஓவியமுஞ் சிற்பமுமென் றருவமெலாம் புனைவான்
உவகைதரும் படம்பிடிப்பான் உலவு நிழற் படத்தே
பாவினுடன் உரைபயிலப் பல்லாடல் புரிவான்
பகருமிசைக் கருவிகளிற் பண்பலவும் பயில்வான். (12)

இப்புவியில் வானொலியா லெத்துணையோ காதம்
இருப்பவருங் கேட்டிடுமா றிசைத்திடவும் வல்லான்
ஒப்புயர்வில் லாதவனா யுலகினிலே மனிதன்
உயர்ந்து விட்டா னுயர்ந்துவிட்டா னுண்மையிது வுண்மை. (13)

அத்தகுசீர் உடையதன்றோ மக்களின மதனால்
அதுவன்றோ மேன்மையதென் றழகுறு பேடிசைப்ப
முத்தமொன்று கொடுத்தெனக்கு முனைவனுவந் தளித்த
மொய்ம்மலரே கேளெனவாண் முதுக் குறைவான் மொழியும்.

நாளையென்ற கவலையிலேம் நளிர்குளிரும் வெயிலும்
நடலைதரா இயற்கைவழி நயந்துணவிங் கயர்வோம்
மீளலின்றி மீதூணே மிகவிரும்பி மனிதன்
வீழ்வதுபோல் வீழுவமோ விழுமமுறு வேமோ? (15)

பழம்புவியைத் தனதென்று பகிர்ந்தெல்லை வகுத்துப்
பலபகலும் வழக்குரைத்துக் கலகமியற் றிடுவான்
தொழுங்குல மென்றேழைகட்குத் துயரமிழைத் திடுவான்
தொடர்ந்து பொருள் தேடுதலில் முனைந்து பிழை புரிவான். (16)

சாதியென்றுஞ் சமயமென்றுந் தடுமாறி யலைவான்
தருக்கினொடு செருக்கினனாய்த் தன்னையுயர்த் திடுவான்
ஏதுதொழி லெனினுமஃதை யேற்று நிறைவுடனே
இனிது செய்து கவலையின்றி யிருக்கவழி யறியான். (17)

பிறராக்கங் கண்டுளத்தே பிணங்கியழுக் காறு
பேணியவர் தமைக்கெடுக்கப் பெரிதுமுயன் றிடுவான்
இறவாப்பல் புகழினுட னிலங்கிடுமா றன்பால்
இனிய செயான் இனிய சொலான் இளகுமுள மில்லான். (18)

சோம்பரினாற் பல்லின்பந் துய்த்திடலா மென்றே
தொழிலையெ லாங்குறைத்துடலைத் துயர்க்கடற்குட் புகுப்பான்
ஓம்பிடவும் புலனடக்கம் உடையவனாய் வரவும்
உணர்ச்சி நலங்காணதே யுழலுகின்ற மடவோன். (19)

எல்லையிலா வெறுவெளியி லியங்கிமகிழ் கின்ற
எம்போல்வார் தமைப்பிடிப்பான் இறகு நறுக்கிடுவான்
நல்லெழிலோ டினங் குலைத்தே நவைக் கூட்டில் அடைத்தே
நலித் தருளைக் கெடுத்தறிவா னன்மை பெறுதழிவான் (20)

கன்றினுக்குப் பாலின்றிக் கறவைகளை வருத்திக்
கறந்திடுவான் போதியதீன் கசிந்தளிக்க மாட்டான்
என்றுமியைத் தேவல்செயு மெருதுகளைக் கொடியான்
இடுப்பொடிய வடித்தடித்துப் படிப்படியே வதைப்பான். (21)

விளையாட்டாய் உளமியைந்து வேட்டையெனும் பெயரால்
மெலித்துயிரை வதைத்தழிப்பான் வெறித்திடலை விரும்பிக்
களியாட்டாய் மதுவருந்திக் கடனுளி யாகிக்
காதலியைக் கான்முளையைக் காக்க வகை காணுன். (22)

பசிப்பிணியா லேழைபடும் பாடறிய மாட்டான்
பருந்த தொந்தி நிறைத்தளிசெய் பாங்கை யெண்ணமாட்டான்
நசித்திடலே குறிக்கோளா நடுவிகந்து நடப்பான்
நங்கையர் தம் பங்குணரா திங்கவரைக் குறைப்பான். (23)

போதுமென்ற நிறைவிலனுய்ப் பொறையிழந்து தவிப்பான்
பொன்னே பொன்னென்றுகனுப் பொழுது மாற்றிடுவான்
சூதுசெய்து தான் வாழுஞ் சூழ்ச்சி கண்டு மகிழ்வான்
தொட்டதற்கும் பொய் புகல்வான் தூயவரை இகழ்வான். (24)

விஞ்ஞானக் கலைநலத்தால் வீறுகொண்டு நலங்கள்
வியந்திட நன்றியற்ற லொன்றே வேண்டுமெனக் கருதான்
மெய்ஞ்ஞானப் பரிவுநிலை விழையகிலான் புவியை
விரைந்தழிக்குங் கருவி பல மிக மிகச் செய்துழல்வான். (25)

கற்ருர்க்கு நன்மை பல காண்பார்க்கு மாருய்க்
கனிழந்து குறைபுகன்று கறைநிறைந்து வளர்வான்
பற்ருலிங்குதவி செயும் பண்புடையார் தமக்கும்
பழி புரியும் பாங்கினனுய்ப் பருமரபா யலையான். (26)

அன்பாய் நல்லாருளாய் அறிவாய்நல் லொளியாய்
அனைத்துமெனு நிலைக்கு மொரு தனிப் பொருளாமிறையை
இன்பேயா முழுமுதலை யில்லை யென்றே யாவும்
இயற்கைவழி யியலுமெனு இயம்பி மலைந்திடுவான். (27)

இவைபோலத் தலைபிழைகள் இயற்றிடுவான் மாந்தன்
இவனிலனேல் யாங்களெலா மினிதிருந்து வாழ்வோம்
தவமேசெய் தனமெனயான் சாற்றியதனுண்மை
சற்றுணர்ந்து பாரென்ற சாலுமொழி கேட்டே. (28)

நன்றென்று நகுமாபோ னயந்துதலை அசைத்து
நானிருத்தல் கண்டந்தோ நமைப்பிடிப்பான் போலும்
என்றென்று தன்கொழுநற் கிணைந்துரைத்த தடடா
விமைப் பொழுதினிரண்டு மெழுந் தெங்ஙனமோ பறந்த. (29)

இவையிரண்டின் சொல்லாட லெண்ணி யெண்ணி யென்னே
யெழிற்பிறவி யிது வென்றென்றே மாறி யிருந்தேன்
நவைதவிரா விடினிதனு னன்மையில்லை யெனவே
நன்முடிவு செய்தேனுய் நாடினனென்னில்லம். (30)

விலங்குகளும் பறவைகளும் விளம்புமுயர் உண்மை
விளங்காதே வீணர்களாய் வெறிதலைய லாமோ?
கலங்கலின்றி மேனிலையாங் கண்டிட வேண்டுதுமேற்
கருத்ததனைத் திருத்தியுயர் கவினடைகு வாமே. (31)

— முற்றும் —

---

# கூ. குழந்தை இன்பம்

## ஆடு பாப்பா.

ஆடு பாப்பா—விளை
யாடு பாப்பா—உடல்
அழகு பெறவேண்டு மென்றாடு பாப்பா

ஓடு பாப்பா—நன்றாய்
ஓடு பாப்பா—வேர்வை
ஒழுக மகிழ்ச்சியுட னோடு பாப்பா.

பாடு பாப்பா—பாடல்
பாடு பாப்பா—துன்பம்
பறந்து விடுமெனவே பாடுபாப்பா.

கூடு பாப்பா—ஒன்றாய்க்
கூடு பாப்பா—கைகள்
கொட்டிக் கூத்தாடிடுவோம் கூடுபாப்பா.

---

## பாலரெல்லாம் கூடுவோம்

1. பாலரெல்லாம் கூடுவோம்
பாட்டு நன்று பாடுவோம்.

2. காலைத் தூக்கி ஆடுவோம்
கையசைத்தே ஓடுவோம்.

3. பள்ளிக்கூடம் செல்லுவோம்
பாடமெல்லாம் சொல்லுவோம்.

4. மெள்ள வீடு நாடுவோம்
மேலும் விளையாடுவோம்.

---

## வாசமலர்

1. வாச மலர்கள் பறித்தெடுத் தேநல்ல
வட்ட வடிவான தட்டிலிட்டே
ஈசனடியை வழுத்தி வழுத்தி
இசைத்தமிழ் பாடிச் சொரிந்திடுவோம்.

2. வண்ணவண்ணச் சட்டை யிட்டிடுவோம் கூந்தல்
வாரி யழகுறப் பின்னிடுவோம்
கண்ணுக் கினிய மணமலர் சூடிக்
களிமயிலா மென முன் வருவோம்.

3. மங்கள நீறு தரித்திடுவோம் பிறை
வாணுதலிற் பொட்டுத் தீட்டிடுவோம்—சிவ
சங்கரி வாணி மலரவள் தாளுளந்
தங்க மலர்ந்திங்கு தோற்றிடுவோம்.

4. மண்ணினி லன்னங்கள் போல நடந்து
மடப்பங் குலையாம லாடிடுவோம்
பண்ணினை வென்றகுதலை மொழிகளிற்
பாட்டுக்க ளின்பொடு பாடிடுவோம்.

## குஞ்சே குஞ்சே வா வா வா.

1. குஞ்சே குஞ்சே வா வா வா
கோழிக் குஞ்சே வா வா வா
அஞ்சா திங்கே வா வா வா
அரிசி பொறுக்க வா வா வா.

2. பற்றைக் குள்ளே மறைவினிலே
பருந்துக் கஞ்சிப் பதுங்கிடவே
கற்றுத் தந்ததார் சொல்வாய்
கலங்கா தென்முன் வா வா வா—(குஞ்சே).

3. காகம் பற்றும் பூனை கவ்வும்
கள்ளப் பாம்பு கவர வரும்
சோகங் கொண்டு பதறுதே
தொடர்ந்து காப்பேன் வா வா வா—(குஞ்சே)

4. உன் தா யுன்னைச் சிறகுள்ளே
உருகி யணைக்குஞ் சீர்கண்டேன்
உன் தாய் போலுந் தாயுண்டோ
உவந்து காப்பேன் வா வா வா—(குஞ்சே).

## அணில்

1. அழகுகொண்ட அணிலே அன்புகொண்டேன் அணிலே
பழகிவிளை யாடுவோம் பக்கத்தில் வா அணிலே

2. தளர்ந் திடாது கியென்றே தாளத்தோடு யாடியே
வளர்ந்தகிளை யேறியே வாலையாட்டித் தாவுவாய்

3. குந்திமுன்னங்கால்களைக்குவித்துக்கையென் றாக்குவாய்
கொந்திக் கொந்திக் காய்பழம் கொட்டையுணவாக்குவாய்

4. கூடுசெய்து தருவேன் கொழுத்த தீனும் தருவேன்
வாடிடாமல் வாழலாம் வந்திடுவாயணிலே

5. முற்றஞ் சேரும் பிள்ளையே மூன்று வரிப்பிள்ளையே
மூட்டையிடுவாயோ மூன்றுவரியணிலே
குட்டி போடுவாயோ கூறிடுவா யணிலே,

---

## பறவைகளின் ஒலிகள்

1. காலைப் பொழுதினிலே கோழிகள் கூவிடும்
காகங்க ளெல்லாம் கரைந்து மகிழ்ந்திடும்
சோலைக்குள் ளே குயில் கூவிக் களித்திடும்
தாமணியே நன்று கேட்டிடுவாய். (காலை)

2. பச்சை மயில்கள் அகவிடும் ஆடிடும்
பல்வகை யாங்கிளி கீச்சிடும் கீச்சிடும்
மெச்சும் படி கிளி பூவைகள் பேசிடும்
மெல்லிய வாத்துக் குவாக் கென்றிசைத்திடும்.

3. அச்சந் தருமிருட்டாகிய வேளையில்
ஆந்தை அலறிடும் கூகை குழறிடும்
பச்சையிலைக்குள்ளே பூக்களிலே தேனைப்
பாடியெடுக்கின்ற வண்டுக ளார்த்திடும். (காலை)

4. செக்கச் சிவந்திட்ட செண்பகம் பாரது
சென்று பறந்தும் பும்மென் றிசைத்திடும்
மிக்க வுயரப் பறக்கும் பருந்தங்கு
மெய்யென்று மெய்யென்று கத்தித் திரிந்திடும்.
(காலை)

## சிட்டுக்குருவி

1. சின்னஞ் சிறுகுருவி யாகுமே தம்பீ—நல்ல
சிட்டுக் குருவிய தாகுமே தம்பீ
தன்னந் தனியனன்று சோடறி தம்பீ—அன்பு
தானுள்ள ஆணும் பெண்ணுந் தாமவை தம்பீ (சின்)

2. இணைபிரி யாதவைகள் தாமவை தம்பீ—துன்பம்
ஒன்றுங்கொள் ளாதவைகள் தாமவை தம்பீ
துணிந்து பறந்து விளையாடுமே தம்பீ—என்றுஞ்
சோம்ப லடைந்ததில்லைக் காணுவாய் தம்பீ— (சின்)

3. தும்பு சருகுமுத லானவை கொண்டே—அவை
தூயமெல் லியகூடு கட்டுத லுண்டே
நம்புகுளிர் வெயிலுக் கஞ்சியதில்லை—என்றும்
நலிந்து துயரங்கொண்டு வாடியதில்லை. —(சின்)

4. கவலை யின்றிக்கடவுள் பாதந் தேடியே—அவை
காலையி லெழுந்துகீதம் பாடும் நாடியே
அவைகளைப் போலநாமும் ஆடியோடியே—என்றும்
அன்பு கூர்ந்து வாழ்ந்திடுவம் ஒன்று கூடியே—(சின்)

5. இந்தக் குருவிகளைக் கொன்றிட வேண்டாம்—கல்லால்
எறிந்து துயரஞ்செய்து தின்றிட வேண்டாம்
எந்தப் பிராணியையும் அன்பி னுடனே—காத்தால்
இறைவ னுனையுங்காப்பர் நம்பு திடனே —(சின்)

## குயில்

1. மா மரங்கள் மலிந்த சோலையிலே—இளஞ்
சோலையிலே—பசுஞ்
சோலையிலே—உயர
வளர்ந்த கிளைகளின் மேற் காலையிலே
காமு மெதிர்த் தெதிர்த்துக் கூவையிலே—அடுத்துக்
கூவையிலே—தொடுத்துக்
கூவையிலே—விடாமல்
நன்று கூவிக் களிக்கும் பூங்குயிலே—(மா).

2. கறுப்பு நிறத்துக்குள்ளே நீலந்தன்னைக்—கொஞ்ச
நீலந்தன்னை—நல்ல
நீலந்தன்னை—மிகக்
கரைத்த நிறத்தைப் போன்ற கோலந்தன்னை
விறுக்கென்றிறங்கிவந்துகாட்டாயுன்னை—விரும்பிக்
காட்டாயுன்னை—அன்பாய்க்
காட்டாயுன்னை—உனது
மேனி யழகு காணக் கேட்டோமுன்னை—(மா).

3. கள்ளத்தனமொன்று நீ செய்கின்றயாம்—விரும்பிச்
செய்கின்றயாம்—என்றும்
செய்கின்றயாம்—கருங்
காக்கையின் கூட்டில் முட்டை பெய்கின்றயாம்
மெள்ளக்காக்கையில்லாதநேரம்பார்த்தே-செல்லும்
நேரம் பார்த்தே—நல்ல
நேரம் பார்த்தே—முட்டை
விரைந்திட்டுச் செல்வதென்ன வீரங்கூறே—(மா).

4. காக்கைதன்முட்டையென்றுன்முட்டைகளையும்-சிறிய
முட்டைகளையும்—அதிக
முட்டைகளையும்—அடை
காத்திடும் பொரித்த பின்னும் பார்த்து மகிழும்
ஊக்கத்துடனிரையை யூட்டி மகிழும்—அன்பாய்
ஊட்டி மகிழும்—ஆவலாய்
ஊட்டி மகிழும்—பின்னை
உருவம் பெருத்தாற் கொத்தி ஓட்டியிகழும்—(மா).

## கிழமைகள்

1. சனியும் ஞாயிறும் ஓய்வு நாள்
தனியே வீட்டிலே தங்கும் நாள்

2. திங்கட் கிழமை தோன்றினல்
செல்லுவோம் பள்ளி ஐந்து நாள்

3. மெல்லச் செவ்வாய் புதன் தோன்றின
வியாழன் வெள்ளியும் வந்தன

4. பள்ளியிலே விளையாடுவோம்
பாட்டுக்கள் பற்பல பாடுவோம்

5. தோழர்கள் யாவரும் கூடுவோம்
தூய பழக்கங்கள் தேடுவோம்.

## பாவைப்பிள்ளை

1. சின்னச் சின்னப்பாவை
சீருடைய பாவை
அன்னை தந்த பாவை
அன்பு கொண்ட பாவை

2. என்னைப் போலக் காலும்
என்னைப் போலக் கையும்
இனிய கண்ணும் வாயும்
இயைந் திருக்கும் பாவை

3. சட்டை யிட்டுப் பார்ப்பேன்
தொப்பி யிட்டுப் பார்ப்பேன்
பொட்டு மிட்டுப் பார்ப்பேன்
பூவணிந்து பார்ப்பேன்

4. என் மடியிலிருக்கும்
என்னருகிற் படுக்கும்
என்னுடனே பகலும்
இரவுமொன்று யிருக்கும்.

## வெற்றிலே விற்போன்

வெற்றிலே வாங்கலேயா—ஐயன்மீரே
வெற்றிலே வாங்கலேயா—அம்மைமீரே
வெற்றிலே வாங்கலேயா

1. கொழுந்து வெற்றிலே குளிர்ந்த வெற்றிலே
குணங்கள் பலவும் நிறைந்த வெற்றிலே
2. பிஞ்சுப் பாக்கு பச்சைப் பாக்குப்
பிளவு சீவற் கொட்டைப் பாக்கு (வெற்)
3. சிப்பி நீறு சிறிது பூசிச்
சிவந்து காட்ட உவந்து தருவேன் (வெற்)
4. ஏலந்தருவேன் கிராம்பு தருவேன்
இலவங் கமொடு சாதிக்காய் தருவேன் (வெற்)
5. வயிற்றுப் பொருமல் நீங்கிப் போகும்
வாயில் நாற்றம் மாறிப்போகும். (வெற்)

## கப்பல்

1. கப்பல் வந்தது! கப்பல் வந்தது
கரையில் நின்றது காண்
பற்பல பொருள் பறித்தது சில
பகர்வன் அன்பொடு நான். (கப்பல்)
2. சீனி கோதுமை சீலே துணிகள்
சிறந்த பழங்களே
பானே சட்டிகள் பாவை வகைகள்
பல விளக்குகளே. (கப்பல்)
3. அரிசி நெல்லொடு கடலே அடைந்த
ஆடைகள் பொன் வகையே
அரிய காகிதம் எழுதுங் கோல்கள்
ஆன புத்தகமே. (கப்பல்)
4. இரும்பு வகைகள் மருந்து வகைகள்
இனிய சுவைகளே
விரும்புங் கட்டில்கள் விளங்கும் பெட்டிகள்
மினுங்கும் ஆடிகளே. (கப்பல்)
5. உண்ணுங் கலங்கள் உயர்ந்த மணங்கள்
ஊரும் வாகனங்கள்
கண்ணும் மனமும் கவரும் பொருள்கள்
கணக்கி லாதவை கள். (கப்பல்)

## கடலை

1. கடலை கடலை கொண்டைக் கடலை
கடுகு மிளகு சேர்த்த கடலை
கடலை கடலை உருண்டைக் கடலை
கடிக்கக் கடிக்கச் சுவைக்கும் கடலை
2. கொச்சிக் காயும் உப்புஞ் சேர்த்துக்
கொதிக்க வறுத்த பருப்புக் கடலை
பச்சைப் புளியுங் கொஞ்சங் கலந்தாற்
பல்லுக்கினிமை கொடுக்குங் கடலை—கடலை
4 சீனிப் பாகிற் குழைத்த கடலை
தின்னத் தின்ன இனிக்குங் கடலை
தேனைப் போலும் வேரின் கடலை
தெவிட் டிடாமல் உணணும கடலை—கடலை

## மழையை அழைத்தல்

1. வாராய் வாராய் மழையே—எங்கள்
வாட்ட மெல்லாம் தீர்மழையே
பாராய் பாராய் மழையே—வெய்யில்
பார்மேற் செயுந் தீங்கினையே — (வாராய்)
2. காலோ கொதித்திடுமே—எங்கள்
கண்ணோ சினந்திடுமே
மேலோ வெயர்த்திடுமே—உன்னை
விரைந்து வர வேண்டினமே — (வாராய்)
3. ஆறுகுளம் வற்றியவே—நல்ல
ஆடு பசு கத்தினவே
கூறுபசும் புல்லொளிந்தே—நிலம்
கொடும் பாலை யாயினதே — (வாராய்)
4. செடிகள் கொடிகளெல்லாம் —அங்கோ
செத்தே யழிந்தனவே
படிமேலே நீ யிறங்காய்—உன்னைப்
பணிவா யழைத்தனமே— (வாராய்)
5. நீராவி யாயெழுவாய்—முகில்
நிலையாகி நீ திரிவாய்
சீர்மேவும் ஆண்டவனார்—தந்த
திருவே நீ வந்திடுவாய்— (வாராய்)

## குளித்தல்

1. என்னுருயிர் மகனே — இன்று நீ
ஏனேகுளிக்கவில்லை
சொன்னுற் கேளாயோ — ஊத்தையால்
தாய்மை இழந்தவனே - (என்ன)

2. கூதல் கடுமையம்மா — அதனுற்
குளித்திட முடியவில்லை
வேதனை செய்யாதீர் — நாளை நான்
விரைவாய்க் குளித்திடுவேன் (கூதல்)

3. நாளுங்குளியாயேல் — சொறியால்
நலிவாய் சிரங்கு வரும்
வேளை தவருமல் — குளித்தால்
மெத்தவே சுகமுண்டாம் (என்ன)

4. சீலை துவைக்கச் சொல்வாய் — என்னுற்
செய்திட முடியாது
மேலை விளக்கச் சொல்வாய் — அதுவும்
விரும்பேனறிவாயே (கூதல்)

5. சீலைகழுவாமல் — உடுத்தாற்
சிறுமகனென்பார்கள்
நாலுபேர்முன்னே — போய்நின்ருல்
நாற்ற மெடுக்குமடா (என்ன)

6. மெத்தவும் நல்லதம்மா — ஆடை
வெள்ளை வரத்து வைப்பேன்
எத்தினமுங் குளிப்பேன் — அழுக்கின்றி
இருந்திடப் பழகிடுவேன் (மெத்த)

## தேயிலை கிள்ளல்

தேயிலைத் தோட்டத்திலே—நல்ல
தேயிலைத் தோட்டத்திலே.

1. தேயிலைத் தோட்டத்திலே—நின்று
தெந்தனம் பாடிடும் பைந்தொடி மாதரே
ஆயிர மாயிரமாய்க்—கொழுந்துகள்
அங்கங்குமோடி நின்றடிப் பறிப்பமே(தேயிலை)

2. நீலமுகில் கிழித்தே—கதிர்
நீட்டி மிகுகுளிர் ஓட்டும் பொழுதக்தக்
காலை நல் வேளையிலே—எங்கள்
காலைக்கடன்கள் கழித்துப் புறப்பட்டோம்(தேயிலை)

3. பிள்ளைக்குப் பால்கொடுத்தே—ஏனையிற்
பிள்ளைத் தமிழ்ச் சொல்லி மெள்ள வளர்த்தியே
உள்ளக் களிப்புடனே—வந்தோம்
உச்சிக்கு முன் கொழுந்தொப்படைக்கவேண்டும்
(தேயிலை)

4. நல்ல நெறி தவறோம்—எந்த
நாளுங் கடவுளை நன்று வணங்குவோம்
புல்லென்ற லுங்கணவன்—என்று
போற்றி அவர்சொல்லைஏற்றுமகிழுவோம் (தேயிலை)

———

## ஆடுவோம்

1. செல்வியரே சேர்ந்திடுவீர் தெளிந்து கீதங்கள் பாடுவோம்
நல்ல தமிழ் நல மொழுக நவின்று மகிழ்ந்தே ஆடுவோம்.

2. கோதையரே கூடுவீர் கோலடிக்க நாடுவீர்
போதணியும் பூவையரே பொலிவுறு தமிழ்தேடுவீர்
—புகழ் பெறநனி ஆடுவீர்

3. தண்டமிழீர் வாருங்கள் ஒண்டமிழீர் சேருங்கள்
பண்டமிழீர் பசுந்தமிழீர் பழந்தமிழீரே பாடுங்கள்
—பயன் பெற இன்றே ஆடுங்கள்

4. இனிய மொழி ஆகுமே இசைமொழியும் ஆகுமே
பனியனைய செழுமொழியைப் பயனுறநனி பாடுமே
பரவிப் பரவி ஆடுமே

---

## நீர் செய்யவேண்டியன

1. இறைவனடி யினைமறவா இனிய நிலை வேண்டும்
எந்நாளுங் கல்வி கற்கும் இன்ப நிலை வேண்டும்
அறிவுடையார் கூட்டமதில் அமர்ந்திடுதல் வேண்டும்
அன்பு மிகுந் தூயவுள்ள மாக்கிடுதல் வேண்டும்
பிறரிடத்தே இனிய மொழி பேசிடுதல்வேண்டும்
பிணக்குடனே அழுக்காற்றைப் பெயர்த்தெறிதல்
வேண்டும்
பிறர் பொருளை விரும்பாத பெரிய குணம்வேண்டு
பெருமைபெற உண்மை யென்றும் பேசி நிற்றல்
வேண்டும்.

2. தாய் தந்தை தமைப்புரக்குந் தன்மை பெறவேண்டும்
தக்கபிள்ளை யென வொழுக்கந் தாங்கிடுதல் வேண்டும்
வாய் பேசா உயிர்களிடம் மன்னுயருள் வேண்டும்
மக்களெலா முடன் பிறந்தாரென மதித்தல் வேண்டும்
தாய் மொழியை ஆர்வமிகத் தான் படித்தல் வேண்டும்
சபைகளிலே மொழி பெருக்குந் தகுதி பெற வேண்டும்
ஆய்வுறுநல் லுயிர்ப்பாடல் ஆக்கிடுதல் வேண்டும்
ஆரியமும் ஆங்கிலமும் அகங்கொளவும் வேண்டும்

3. பண்ணமையும் பாடல் பல பயின்றிடுதல் வேண்டும்
பலர் விரும்புங் குரலினிமை படைத்திடுதல் வேண்டும்
எண்ணுமியாழ் மீட்டிடலில் இசை நிறுத்த வேண்டும்
இனிய குழல் ஊதுதலில் நனிசிறக்க வேண்டும்
நண்ணுமுயர் நாடகங்கள் நடித்திடுதல் வேண்டும்
நயம் பொலியும் புதுக்கதைகள் நன்றெழுதல்வேண்டும்
வண்ணமுறு மோவியங்கள் வரைந்திடுதல் வேண்டும்
வானொளிர் வெண்மீன்களென வயங்கிடுதல் வேண்டும்

4. அஞ்சாத சிந்தையரா யமைந்திடுதல் வேண்டும்
அரிய பலகைத் தொழில்கள் அமைத்திடுதல் வேண்டும்
எஞ்சாமல் எளிய வாழ்க்கை இயற்றிடுதல் வேண்டும்
எழில் செறியும் பேரெண்ணம் எண்ணிடுதல் வேண்டும்
செஞ்சாலி வயல் பெருக்கி உழவு செய்ய வேண்டும்
திருமலியும் பஞ்செடுத்து நெசவு செய்ய வேண்டும்
துஞ்சாமல் முயற்சியிலே துலங்கிடுதல் வேண்டும்
சோர்விலராய்ப் பிறர் வளரத் துணைபுரிய வேண்டும்

5 மிக்ககருத் தாயுடம்பை மிகவளர்த்தல் வேண்டும்
மிதமான நல்லுணவை விழைந்தருந்தல் வேண்டும்
தக்கபடி யுடற்பயிற்சி தான் புரிதல் வேண்டும்
தழுவுமுடை துவைத்தென்றுந் தான் குளித்தல்வேண்டும்
நற்காற்றை யெப்பொழுதும் நனியருந்தல் வேண்டும்
நாற்புறமுந் தூய இல்லில் நயந்துறைதல் வேண்டும்
எக்காலும் வைகறையில் எழுந்திருத்தல் வேண்டும்
இளையாரோருடன் சிரித்தே யின்படைய வேண்டும்

## வீரந்தர வேண்டும்.

வீரந் தரவேண்டும்—முருகையா
வீரந் தரவேண்டும்—இந்தப்
பாரும் விண்ணோரும் படைகொண்டெதிர்ப்பினும்
பஞ்சென்று வெம்பிய பிஞ்சென்று நீத்திடும்
வீரந்தர வேண்டும்.

1. கூறுமடக்கமும் பண்புந் தகைமையும்
கூடாது, நானென்று கொட்டிக் குரைக்கின்ற
பேறு பெறாத கலைஞர் திறத்தினைப்
பேறாது காற்றிற் பதரென்று நீத்திடும்—(வீரம்)

2. நேர்மை சமத்துவச் சீர்மை பெறாது
நிதியுத்தி யோகக் கதிபெற்று வீறுற்றுக்
காரிருள் போலுளங் கொண்டு களிப்போரைக்
காலினில் தூசெனக் காவாது நீத்திடும்—(வீரம்)

3. நல்லவர் வஞ்சக மில்லவர் ஏய்த்து
நமக்கொரு காரியம் நாட்டிட லாமென
மெல்ல மனதி விழுக்குகள் கூட்டி
விழுத்த நினைத்திடும் வீணரை நீத்திடும்—(வீரம்)

4. பட்டிகள் நாத்திகப் பள்ளத்தில் வீழ்ந்து
பறைதட்டி மெத்தப் படித்தவர் தாமென
மட்டி லகங்காரங் கொண்டு குறைக்க
மனங் கொள்ளும் போதொரு (துறு)
மண்ணென நீத்திடும்—(வீரம்)

5. சாதியி லேசிறப் பாதியி லேவளஞ்
சார்தலி லேயின்ப மூர்தலி லேயெமைப்
பூதல மீதெவ ரொப்ப ரெனச் சொல்லும்
போலி களைமயிர் போலவே நீத்திடும்—(வீரம்)

6. என்ன புலவ னிவன் மிக வேழை
யெனமதி யாம விகழ்ந்துரை யாடிடும்
சின்ன மனிதர் துரும்பென் றுகொண்டுயர்
சிந்தை யவர்பக்கம் சேராது நீத்திடும்—(வீரம்)

7. அஞ்சிக் கலங்க வருத்தி யடர்க்கின்ற
அல்லற் பிணிகளை யூழ்கொண்டு வந்திடில்
நெஞ்சைத் திணிந்த கரும்பொன்னென் றாக்கி
நிறை குறை யாமல் நிலைத்து மகிழ்ந்திடும்—(வீரம்)

## சாந்தி யுதயம்

1. பூவுறங்கிற்று பூவினிற் காணும்
பொலிவு தேய்ந்தது பொய்யிருளாலே
யாவு மெங்கணுங் காண்டிடற் கில்லை
ஈது தீர்க்க முளைத்தது வெள்ளி
சேவல் கூவிற்று காக்கை கரைந்த
தீமை யோடக் கிழக்கொரு சோதி
ஆவ லோடு கிளம்புதல் பாரீர்
அனைத்துந் தோற்றின மெய்யொளி போலே.

2. பொய் தொலைந்தது மெய்யுறவாலே
புன்மை தீர்ந்தது நன்மையினாலே
ஐய வாழ்க்கை யகத்தினிலில்லை
ஆரிடத்தினுஞ் சீரொளி கண்டோம்
நைவுமில்லை நலிதலுமில்லை
நானெ னுஞ்செருக் கானது மில்லை
மையல் கொண்டு மயங்கலு மில்லை
மனத்தகத்துறு சாந்தி கண்டோமே.

3. பாரிலெங்கணுஞ் சாந்தி நற் சாந்தி
பத்த ராயின ருள்ளத்துச் சாந்தி
வீரர் பாடியின் மெய்ம்மையின் சாந்தி
மெல்லி நல்லார்தம் வீட்டினிற் சாந்தி
சீர்கொள் மாணவர் பள்ளியிற் சாந்தி
தெருக்கள் தோறும் நடப்பினிற் சாந்தி
யாரிடத்தினுஞ் சாந்தியைக் கண்டோம்
இன்பம் வேறிதற் கீடு சொல்வீரே.

**முற்றிற்று**

ஸ்ரீ காந்தா அச்சகம்
No 213, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

# புலவர் அவர்களின்
# வாழ்க்கை நிகழ்ச்சிகள்

13-9-1896. வட்டுக்கோட்டையூரில் புலவர் ஜனனம்.
முருகபக்தரும் திண்ணைப்பள்ளிக்கூட ஆசிரியரும் சைவஆசாரசீலரும் ஆகிய முருகுப்பிள்ளைக்கும் தங்கம்மையாருக்கும் ஏழாவது திருமகவாகப் பிறந்தார்.

1901. ஆரம்பக்கல்வி, வட்டுக்கோட்டையூர்.
உயர்தரக்கல்வி: தெல்லிப்பளையூர்
இளமையில் கவிகள் புனைவதிலும், நாடகங்களில் விதூஷக பாத்திரந்தாங்கி நடிப்பதிலும் சிறந்து விளங்கினர். பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகச் செல்வதில் நாட்டமில்லை, எனிலும் வகுப்பில் முதல்வராக இருந்து வந்தார்.

1907. தந்தையார் மரணம்.
சகோதரர் நாகலிங்க உபாத்தியாயர் பராமரிப்பில் இருந்து படித்து வந்தார். செய்யுள்கள் பல புனைந்தார்.

1914. போதனுமுறைப் பயிற்சி: தெல்லிப்பளை,
நாலடியார், திருக்குறள், பிரபந்தங்கள், நன்னூல், சின்னூல் முதலியவற்றுடன் ஆங்கில பாஷையையும் பாடங்கேட்டார்.

1915. பயிற்றப்பட்ட தமிழாசிரியராய் வெளிவரல்.
பண்டத்தரிப்புத் தமிழ்ப்பாடசாலையில் ஆசிரியராய்க் கடமைபுரிதல்.
மண்டைதீவு தமிழ்ப்பாடசாலையில் ஆசிரியராய்க் கடமைபுரிதல்.
ஆனைக்கோட்டைத் தமிழ்ப்பாடசாலையில் ஆசிரியராய்க் கடமைபுரிதல்.

1918. கொழும்பு சஹீராக் கல்லூரியில் ஆசிரியனுய் அமர்தல்; ஆங்கில அறிவை மேன்மேலும் வளர்த்தல்.

1924. சுன்னை குமாரசாமிப் புலவர் மாணவரும், கொழும்ப அரசினர் பயிற்சிக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளரும் ஆகிய தென்கோவை பண்டிதர் திரு. ச. கந்தையாபிள்ளை அவர்கட்பால் தொல்காப்பியம் முதலாம் இலக்கண நூல்களையும் சங்க இலக்கியங்களையும் பாடங்கேட்டல்.

1924. ஊர்காவற்றுறை, வைத்தியர் கனகசபை அவர்களின் புதல்வியார் தங்கரத்தினம்மையாரை மணஞ்செய்தல்.

1925, தாயார் மரணம்.

1925. சிவங்கருணலய பாண்டியனுர், குலசேகரப்பட்டினம் ப. இராமநாதபிள்ளை முதலிய தமிழறிஞர்களுடன் தொடர்புகொள்ளுதல்.
தமிழகத்துப் பேரறிஞர் மணி திருநாவுக்கரசு முதலியாருடன் பேரன்புபூணுதல்.

இலக்கிய இலக்கண ஆராய்ச்சி:
பத்திரிகைகளுக்கு இலக்கிய இலக்கண ஆராய்ச்சிக் கட்டுரைகளும், பாடல்களும் எழுத முற்பட்டார்.
கொழும்புமாநகரில் தமிழ்த்தொண்டு மலர்தல்.
பாடசாலைச் சிறுவர்களுக்காய நூறறெருகுதிகளை வெளியிட ஆரம்பித்தல்.
சஹீராக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகப் பதவியில் உயர்தல்.
சைவப்பிரசங்கங்களும், தமிழ்ப் பிரசங்கங்களும் மேடைகள் தோறும் புரிதல்.
நூலாசிரியர்கள் பலருக்கும் நூல் வெளியிடுவதில் உதவிபுரிதல்,

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம் முதலியவற்றில் பரீட்சகராய் அமர்தல்.
இலங்கை வித்தியாபகுதிப் பாடநூற் சபையில் அங்கத்தவராகத் தொண்டாற்றுதல்.
வெள்ளவத்தை நாடகசபையில் சிறந்த நடிகராகத் தொண்டாற்றுதல்.
சுவாமி விபுலானந்தரிடம் அன்பு பூணுதல்.
இலங்கை வானொலியில் விரிவுரைகள் இயற்றுதல்,

1935. பள்ளிக்கூட நூல்கள் வெளியீடு.

1936. தென்னிந்திய புனிதக்ஷேத்திரங்களுக்கு யாத்திரை.
தென்னிந்திய மேடைகளில் பிரசங்கமாரி பொழிதல்.
சைவ ஆதீனங்களுடன் தொடர்பு கொள்ளுதல்.
தென்னிந்தியப் பேரறிஞர்களுடன் நண்பு கொள்ளுதல்.

1940. புலமைத்திறனை வியந்து தென்னிந்திய திருநெல்வேலித் தமிழ்ச் சங்கத்தார் முது தமிழ்ப் புலவர் என்னும் வரிசை வழங்குதல்.
புலவரின் பாவன்மையையும் நாவன்மையையும் போற்றுமுகத்தால் கொழும்பு, வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, காரைநகர் முதலிய நகரங்களில் பாராட்டுவிழாக்கள் நடைபெறுதல்,

1945. ஆசிரிய பதவியில் இருந்து ஓய்வு பெறல்.

1946. இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராய் அமர்தல்.

1950. மணித்தாய் நாடும் மரதனோட்டமும் எனும் நூல் புனைதல். மரதன் ஓட்டக் கவிதைப்போட்டியில் முதற் பரிசு பெறுதல். கொழும்பு சஹீராக்கல்லூரித் தமிழ்ச் சங்கத்தார் மரதன் கவிதைப் போட்டியில் முதற் பரிசுபெற்றமை குறித்துப் பொன்னுடை போர்த்திப் பாராட்டுதல்.

குடும்பம்: புலவருக்கு ஆண்பிள்ளைகள் நால்வரும் பெண்பிள்ளைகள் நால்வரும் ஆக மக்கள் எண்மர் உளர்.

1951. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்விழாவில் இறுதிச் சொற்பொழிவு.

8–5–1951ல் இறைவனடி புகுதல்.

சுபம்

---

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.